# உதயன்



23

www.onlineuthayan.com

36பக்கங்கள் சுடர் 28 கதிர் 044 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 25 புதன்கிழமை (09/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


# நிறைவேறியது 'திவிநெகும'

## மு.கா., இ.தொ.கா., ம.ம.மு. ஆதரவு; கூட்டமைப்பு, ஐ.தே.க., ஜே.வி.பி. எதிர்ப்பு

கொழும்பு, ஜனவரி 9

நாட்டில் பெரும் பரபரப்பையும் அரசியல் சர்ச்சைகளையும் ஏற்படுத்தியிருந்த 'திவிநெகும' சட்டவரைவு நாடாளுமன்றில் நேற்று மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டவரைவுக்கு ஆதரவாக 160 வாக்குகளும், எதிராக 53 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சிறுபான்மைக் கட்சிகளான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் ஆகியன சட்ட வரைவுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளன.

ஜாதிக ஹெல உறுமய, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட், ஜனநாயக இடதுசாரி முன்னணி உள்ளிட்ட அரசின் இதர பங்காளிக் கட்சிகளும் 'திவிநெகும' சட்ட வரைவுக்குச் ஆதரவாக வாக்களித்தன.

அதேவேளை, எதிர்க் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, ஜனநாயக தேசியக் கூட்டணி, பிரஜைகள் முன்னணி ஆகியன குறித்த சட்டவரைவுக்கு எதிராக வாக்களித்தன. 11 பேர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

வாழ்வின் எழுச்சி என அர்த்தப்படும் 'திவிநெகும' சட்டவரைவு ஏற்கனவே நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தபோதி

பார்க்க பக்கம் 4

## இடியுடன் கூடிய மழை தொடரும்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ். குடாநாடு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் இடியுடன் கூடிய மழை தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. அத்துடன் காற்றும் வேகமாக வீசும் எனவும் அது கூறியுள்ளது.

வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை காரணமாக நாட்டின் பல பாகங்களிலும் சீரற்ற காலநிலை நிலவும் எனவும் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம் ஊடாக புத்தளம்

பார்க்க பக்கம் 4

## நீதியரசர்களை மிரட்டியோரை கைதுசெய்ய உத்தரவு

கொழும்பு, ஜன.9

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிரதம நீதியரசரின் மனுவை விசாரித்த நீதியரசர்களான அனில் குணரட்ன மற்றும் கே.ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோருக்கு தொலைபேசியூடாக மிரட்டல் விடுத்த நபர்களைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பொரளை மற்றும் பம்பலப்பிட்டிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

மேற்படி மிரட்டல் விடுக்கப்பட்ட அழைப்பு வந்த தொலைபேசி இலக்கங்களின் விவரங்களை அளிக்குமாறு நீதிமன்றம் சம்பந்தப்பட்ட தொலைபேசி நிறுவனங்களுக்கும் பணிப்புரை விடுத்தது.

இந்த அச்சுறுத்தல் தொடர்

பார்க்க பக்கம் 4

## மோசடிக்கு வழிவகுக்கும் அமைப்பே 'திவிநெகும'

### சஜித் எம்.பி. சாட்டை

கொழும்பு, ஜன.9

தனி ஒரு நபரிடம் எல்லையற்ற அதிகாரங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து ஊழல் மோசடிகளுக்கு வழிவகுக்கும் ஒரு அமைப்பை உருவாக்குவதே 'திவிநெகும' சட்டம். இதனால் பொதுமக்களின் நிதியை, தனி நபர் ஒருவருக்கு தன்னிச்சையாகக் கையாளும் அதிகாரத்தையும் வாரி வழங்கி உள்ளது. இதனால் நாட்டு மக்களுக்கு ஒரு நன்மையும் இல்லை - என்று சாடுகின்றார் எதிர்க்கட்சி உறுப்பினரான சஜித் பிரேமதாஸ.

நேற்று நாடாளுமன்றில் 'திவிநெகும' சட்டவரைவு தொடர்பான விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தனிமனிதர், குடும்பம், சமூகம், சமூக நியாயம், வாழ்வாதாரம், அபிவிருத்தி, சமூக மேம்பாடு எனப் பலவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டபோதும், இவை எல்லாம் பெயரளவில் மட்

பார்க்க பக்கம் 4

## சர்வாதிகாரச் சட்டமே 'திவிநெகும' மாகாண அதிகாரங்கள் 15 பறிப்பு

### சபையில் தமிழ்க் கூட்டமைப்பு ஆவேசம்

கொழும்பு, ஜன.9

மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பிரதான 15 அதிகாரங்கள் 'திவிநெகும' சட்டத்தின் மூலம் பலவந்தமாகப் பறிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த தமிழ்க் கூட்டமைப்பு, தமிழர்களை அடிமைப்படுத்தும் சர்வாதிகாரச் சட்டமே இது என்றும் மாகாண அதிகாரங்களை பறித்தெடுக்கின்ற இந்தச் சட்டவரைவின் மூலம் தமிழ் மக்களை வாழ்நாள் முழுவதும் ஏமாற்றி அவர்களை அழித்துவிட அரசு திட்டம் தீட்டி விட்டது என்றும் தெரிவித்தது.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற 'திவிநெகும' திருத்தச்சட்டவரைவின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் போதே தமிழ்க் கூட்டமைப்பு மேற்கண்டவாறு தெரிவித்தது.

அதிகூடிய அதிகாரப் பகிர்வை அளிப்போம். 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கும் அப்பால்சென்று அதிகாரப்பகிர்வை அர்த்தபுஷ்டியாக்குவோம் என்று கூறிய ஜனாதிபதியின் கொள்கைகளுக்கு எதிராகவே இந்த

பார்க்க பக்கம் 4

## நீதிமன்றத் தீர்ப்பை மீறி விவாதம் நடத்துவது அரசமைப்புக்கு முரண்

### குற்றவியல் பிரேரணை குறித்து ஐ.தே.க. விளக்கம்

கொழும்பு, ஜன.9

தெரிவுக்குழு அறிக்கையை இரத்துச் செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் மீறி அந்த அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் அரசு விவாதம் நடத்துமானால் அது அரசமைப்புக்கு எதிரான செயலாகும்-

"இதற்கு அரசுக்கு மக்கள் அதிகாரம் வழங்கவில்லை. அத்துடன் இல்லாத அறிக்கை தொடர்பில் அரசு எப்படி விவாதம் நடத்த முடியும்? அப்படி நடத்துவதில் எந்தப் பயனுமில்லை.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுத் தெரிவித்தது.

பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றப் பிரேரணையைக் கொண்டுவருவதே

பார்க்க பக்கம் 4

## இரு நாள்களில் 10 பேருக்கு டெங்கு நோய்

யாழ்ப்பாணம்,ஜன.9

டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டு கடந்த இரண்டு நாள்களில் மட்டும் 10 பேர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் 7 பேரும், நேற்று 3 பேரும் இவ்வாறு டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

டெங்குநோயின் தாக்கம் குடாநாட்டில் அதிகரித்துள்ள நிலையில் கடந்த 8 நாள்களில் 23 பேர் வரை நோய்க்கு இலக்காகி வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## ஜனாதிபதி மஹிந்த யாழ்ப்பாணம் வரார்

யாழ்ப்பாணம், ஜன. 9

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் யாழ்ப்பாண வருகை சீரற்ற காலநிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை தேசிய தைப்பொங்கல் விழாவில் கலந்து கொள்வதற்கும், 15 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பது உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவிருந்தார்.

அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் கடந்த சில தினங்களாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன. பல வீதிகளுக்குக் 'காப்பெற்' இடும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில் நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் யாழ். வருகை ஒத்

பார்க்க பக்கம் 4

## யாழ். பல்கலைக்கு நேற்று மாணவர் செல்லவில்லை

### அதனால் கற்றல் செயற்பாடு இடம்பெறவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 9

யாழ். பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டபோதும் மாணவர்கள் சமுகமளிக்கவில்லை. இதனால் யாழ். பல்கலைக்கழகம் நேற்றும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

பல்கலைக்கழகத்துக்கு விரிவுரையாளர்கள் நேற்றுச் சென்றிருந்தபோதும் மாணவர்கள் செல்லாதமையால் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

சுமார் 15 மாணவர்களே பல்கலைக்கழகத்துக்குச் சென்றிருந்தனர். எனினும் ஏனைய மாணவர்கள் சமுகமளிக்காமையால் அவர்களும் திரும்பிச் சென்றுவிட்டனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இதனை உறுதிப்படுத்தினர்.

நேற்று செவ்வாய்க்கிழமை

பார்க்க பக்கம் 4

## களனி கொலைச் சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஜன.9

களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித்த மடவல கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் ஐவரை, கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று அதிரடியாக மடக்கிப் பிடித்தனர்.

அத்துடன், ஹசித்த மடவலவைக் கொலைசெய்வதற்காக இவர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் மற்றும் வாகனங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

சிங்கப்பூருக்குத் தப்பி

பார்க்க பக்கம் 4

## இரணைமடுக் குளத்தின் ஐந்து கதவுகள் திறப்பு

### நீர் வரத்து அதிகரித்தமையால்

கிளிநொச்சி, ஜன. 9

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் ஐந்து வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

தற்போது மீண்டும் பெய்து வரும் கடும் மழை காரணமாக இரணைமடுக் குளத்துக்கு அதிக நீர் வரத்துக் காணப்படுகின்றது. குளத்தின் நீர் மட்டமும் 31 அடி 5.5 அங்குலமாக உள்ளதால் ஐந்து வான் கதவுகளும் நேற்று பிற்பகல் 4 மணியளவில் திறந்து விடப்பட்டதாகக் கிளிநொச்சி நீர்ப்பாசனப் பொறியியலாளர் சி.விகிர்தன் தெரிவித்தார்.

குளத்திலிருந்து அதிக நீர் வெளியேறுவதால் குளத்தை அண்டிய தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

வன்னிப் பகுதியில் மழை காரணமாக நேற்றுப் பிற்பகலில் இருந்து அனைத்துக் குளங்களும் மீண்டும் வான் பாயத் தொடங்கியுள்ளன.

(த-க-18-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### யாழ்.நவீன சந்தைத்தொகுதியில்

# குத்தகைக்கு எடுத்தது ஒருவர் வரி அறவிடுவதோ வேறொருவர்

### அம்பலப்படுத்துகிறார் எதிர்க்கட்சி உறுப்பினர்

யாழ்ப்பாணம்,ஜன.09

யாழ். நவீன சந்தைப் பகுதியை பகிரங்க ஏலத்தில் குத்தகைக்கு எடுத்தவர் அதற்கான பணத்தைச் செலுத்தச் சென்ற போது திருப்பி அனுப்பப்பட்டார். சந்தை வியாபாரிகளிடம் மாநகர சபையின் ஆளும்தரப்பினர் நேரடியாக பண வசூலிப்பில் ஈடுபட்டுள்ளனர். இது சட்டவிரோதமானது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாநகர சபை எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ். நவீன சந்தைப்பகுதியில் உள்ள மரக்கறி, பழவகை, பொதுச் சந்தையை கடந்த வருடம் ஒருவர் கேள்வி கோரல் மூலமாக குத்தகைக்கு எடுத்திருந்தார். அங்கு 90 கடைகள் உள்ளன. அவற்றில் 4 கடைகளை யாழ்.மாநகர சபை பறித்துக் கொண்டது மட்டுமல்லாது பறித்த கடைக்கும் வரிப்பணத்தைப் பெற்றுக்கொண்டது. அதுபற்றி பத்திரிகைகள் மூலமாக வெளிக்கொண்டு வரப்பட்டதையடுத்து அந்த முயற்சி கைவிடப்பட்டிருந்தது.

2013ஆம் ஆண்டுக்கு சந்தையை குத்தகைக்கு விடுவதற்கு கேள்வி கோரப்பட்டது. கடந்தவருடம் குத்தகைக்கு எடுத்திருந்தவரே இந்தமுறையும் 21இலட்சம் விலை ரூபா உயர்வுடன் எடுத்திருந்தார்.

அதற்குரிய பணமான 21 இலட்சம் ரூபாவை கடந்த முதலாம் திகதி யாழ்.மாநகர சபையிடம் செலுத்தச் சென்ற போது மாநகர ஆளும் தரப்பு நிர்வாகம் அவரை திருப்பி அனுப்பியுள்ளது. தற்போது, சந்தை வியாபாரிகளிடம் மாநகர ஆளும் தரப்பினரே பணம் அறவிட்டு வருகின்றனர். மாநகர சபை மக்கள் பிரதிநிதிகளால் இயங்குகின்றது. இந்நிலையில் மாநகர சபையின் விதிகளின் பிரகாரம் மாநகர சபைக்குரிய குத்தகை நிலையங்கள் பகிரங்க ஏலத்தில் அல்லது உரிய கேள்வி கோரல்மூலம் பகிரப்பட வேண்டும்.

ஆனால் குத்தகைக்கு எடுத்தவரை திருப்பி அனுப்பிவிட்டு மாநகரசபை தன்னிச்சையாகச் செயற்படுகின்றது. இது சட்டத்துக்கு முரணானது.

இது தொடர்பில் எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் நாம் கதைத்தால் அரசியல் காழ்ப்புணர்ச்சி என்று முதல்வர் மறுப்பறிக்கை விடுகின்றார் என்று விந்தன் மேலும் தெரிவித்தார்.

(ஐ-4)



திவிநெகுமவுக்கு ஆதரவாக நேற்று நாடாளுமன்ற வளாகத்துக்கு வெளியில் சமுர்த்தி ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணத்திலிருந்து கருத்தரங்கிற்கு என அழைத்துச் செல்லப்பட்ட சமுர்த்தி ஊழியர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

## தெரிவுக்குழு உறுப்பினர்களைதான் தடுக்கவில்லை என்கிறார் ரணில்

### சபையில் நேற்று ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.9

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணையை விசாரித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளை நீதிமன்றில் முன்னிலையாகவிடாமல் தான் தடுக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

சபையில் அவர் நேற்று சிறப்புரிமை பிரச்சினையைக் கிளப்பி இது தொடர்பில் கூறியவை வருமாறு:-

பிரதம நீதியரசரை விசாரித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்திருந்தது. அந்தத் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த எமது கட்சியின் பிரதிநிதிகளை நீதிமன்றில் முன்னிலையாகவிடாது நான் தடுத்தேன் என்று ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டிருந்தன.

நான் அப்படி எந்த உறுப்பினரையும் தடுத்துநிறுத்தவில்லை. நீதிமன்றில் ஆஜராகவேண்டாம் என்று சபாநாயகர் கேட்டுக்கொண்டதற்கு ஏற்பவே நாம் செயற்பட்டோம்.

நான்தான் அவர்களைப் போகவிடாது தடுத்தேன் என்ற ஊடக செய்தியில் எந்த உண்மையும் இல்லை.

சரத் பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டபோது இந்த ஊடகங்கள் எதையும் கூறவில்லை. நாடாளுமன்றில் அதுபற்றி நாம் கூறியதை மட்டும்தான் செய்திகளாக வெளியிட்டன.

தமிழ் இளைஞர்கள் காணாமல்போனபோது அதுபற்றி இந்த ஊடகங்கள் எவற்றையும் கூறவில்லை. நாம் அதுபற்றிக் கூறிய பின்னர் எமது கூற்றைச் செய்திகளாக இந்த ஊடகங்கள் வெளியிட்டன.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் விடயத்திலும் இந்த ஊடகங்கள் இவ்வாறுதான் செயற்படுகின்றன - என்றார்.(த-சி)

## மின்னல் தாக்கி கணினிகள் கருகின

கனகராயன் குளம்,ஜன.9

கனகராயன் குளம் மகா வித்தியாலயப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் பெரும் மின்னல் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 11.45 மணியளவில் திடீரென இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து பாடசாலையில் அபாய எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டது.

இதனையடுத்து அச்சமடைந்த மாணவர்கள் அலறியடித்துக்கொண்டு ஓடியதால் அந்தப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மின்னல் தாக்கத்தால் எவருக்கும் உயிர் பாதிப்பு ஏற்படாத போதும் பாடசாலையிலுள்ள பல கணினிகள் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் என்பன செயலிழந்துள்ளன. அத்துடன் அயலிலுள்ள இலத்திரனியல் சாதனங்களும் செயலிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-16-422)

## மக்கள் ஏற்கும் வகையில் யாழ்.மாநகர சபைக் கீதம்

### தனிப்பட்ட நடவடிக்கை இல்லை என்கிறார் முதல்வர்

**கீதத்தில் பௌத்த மதக்கருத்தும் இடம் பெறவேண்டும், கீதத்தின் நேரம்குறைக் கப்படவேண்டும், ஆண், பெண் இரு பாலாரும் பாடக்கூடிய சுருதியுடன் கீதம் அமைக்கப்படவேண்டும் என்று சுட்டிக்காட்டியிருந்தார்**

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்.மாநகர சபைக் கீதம் மக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலேயே மாற்றியமைக்கப்படும். இதுதொடர்பில் கட்சி உறுப்பினர்கள், கவிஞர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள் பெறப்பட்ட பின்னரே தீர்மானிக்கப்படும். இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா.

யாழ்.மாநகர சபை கீதம் அமைப்பது தொடர்பாக ஊடகங்களில் வெளியான செய்திகளுக்கு விளக்கமளிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

ஜனநாயக நாட்டில் தனது சொந்தக் கருத்துக்களை முன்வைக்கும் உரிமை அடிப்படையில் ஆளும் கட்சி உறுப்பினர் மங்களநேசன் தனது கருத்தை முன்வைத்தார். அதில் அவர் கீதத்தில் பௌத்த மதக்கருத்தும் இடம் பெறவேண்டும் என்றும் சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன் கீதத்தின் நேரம்குறைக்கப்படவேண்டும், ஆண், பெண் இருபாலாரும் பாடக்கூடிய சுருதியுடன் கீதம் அமைக்கப்படவேண்டும் என்ற கருத்துக்கள்உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டன.

கீதம் மாற்றப்படுவதற்கு கட்சி உறுப்பினர்கள் எவரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

தனிப்பட்ட ரீதியில் எனது கருத்துக்களை மட்டும் எடுத்துக்கொள்ள முடியாது. அனைவராலும் முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்கு அடையாளமாக மதம், மொழி, வரலாறு, பண் உட்பட எல்லா விடயங்களையும் முன்னிறுத்தி கீதம் அமைக்கப்படவேண்டும். இதற்கு ஏற்ற வகையில் கட்சி உறுப்பினர்கள், கவிஞர்கள், பொதுமக்கள் ஆகியோருடன் கலந்துரையாடிய பின்னரே கீதம் மாற்றப்படவேண்டுமா? இல்லையா எனும் முடிவு எடுக்கப்படும் என்றார். (ஐ-14)

## தம்பதியரைத் தாக்கிய இளைஞர்களுக்கு மறியல்

வலி. வடக்கு, ஜன.9

இரவுவேளை மோட்டார் சைக்கிளில் சென்ற தம்பதியரைத் தாக்கிய இளைஞர்கள் மல்லாகம் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு புன்னாலைக்கட்டுவன் வடக்குப் பகுதியில் சென்றுகொண்டிருந்தனர் குறித்த தம்பதியினர்.

இவர்களை திடற்புலம் சந்திவரை பின்தொடர்ந்து சென்றுள்ளது இளைஞர் கும்பல் ஒன்று. இதனை அவதானித்த கணவன் தனது சமயோசித புத்தியால் இளைஞர்களுக்கு போக்குக் காட்டியபடி சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்.

அதற்குள் அந்தத் தம்பதியரை இளைஞர்கள் தாக்கியுள்ளனர். இந்த நேரத்தில் பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு வர அந்த இளைஞர் கும்பல் தப்பியோடிவிட்டது.

அவர்களைத் துரத்திச் சென்றனர் பொலிஸார். சுதந்திரபுரம் பகுதியில் ஒரு இளைஞர் பொலிஸாரிடம் அகப்பட்டுள்ளார். அந்த இடத்தில் பொலிஸாருடன் சிலர் முறுகலில் ஈடுபட்டனர்.

பொலிஸாரின் வாகனமும் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பின்னர் சுன்னாகம் பொலிஸார் உரிய விசாரணைகளை நடத்தி அந்தக் கும்பலில் இருந்த எட்டுப் பேரையும் கைதுசெய்து நேற்றுமாலை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிமன்று இளைஞர்களை இருவாரகாலம் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

(த-16-86)

## யாழ்.நகரின் சில பகுதிகளில் குடிதண்ணீர் விநியோகம் தடை

### குழாய்கள் சேதமடைந்தமையே காரணம்

யாழ்ப்பாணம்,ஜன-09

ஆரியகுளம் சந்திக்கு அருகில் பருத்தித்துறை வீதியில் யாழ்.மாநகர சபையின் நீர் விநியோகக்குழாய் சேதமடைந்தமையினால் நகரின் சில பகுதிகளுக்குக்கான நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

50 ஆண்டுகளுக்கு மேலாகவுள்ள இந்த விநியோகக் குழாய் தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 'காப்பெற்' போடும் பணியின் பலத்த சேதத்துக்கு உள்ளாகியது.

'காப்பெற்' வீதி அமைப்பதற்காக இயந்திரங்களைக் கொண்டு வீதி தோண்டப்பட்ட போது 20 அடி நீளம் வரை விநியோகக் குழாய்கள் சேதமடைந்துள்ளன.

குழாய்கள் உடைந்தவுடன் இரவு முழுவதும் பெய்த மழையினால் இந்தப் பகுதி வெள்ளத்தினால் மூழ்கியிருந்தது.



குழாய் அமைந்துள்ள பகுதியில் வெள்ளத்தை நீரிறைக்கும் இயந்திரத்தின் உதவியுடன் வெளியேற்றும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. இதனையடுத்து நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் சேதமடைந்த குழாய்களுக்குப் பதிலாக புதிய குழாய்களைப் பொருத்தும் முயற்சியில் மாநகர சபை நீர் வேலைப் பகுதி பொறியியல் பிரிவு ஈடுபட்டுள்ளது. இன்று புதன் கிழமை பிற்பகலில் நீர் விநியோகம் வழமைக்குத் திரும்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(த-7)

## வடக்கு மாகாண நிதி அமைச்சின் செயலாளர் நீக்கம்

வடக்கு மாகாண நிதி அமைச்சின் செயலாளராகப் பணியாற்றிய மனோரஞ்சன் திடீரெனப் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிய வருகிறது.

அவர் வடக்கு மாகாண சபையில் இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4-288)

## அவசர கூட்டத்துக்கு சபாநாயகருக்கு அழைப்பு

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்வது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கட்சித் தலைவர்கள் கூட்டமொன்றை மற்றொருமுறை கூட்டுமாறு எதிர்க்கட்சிகளின் தலைவர்கள், சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கடிதமொன்றை கையளித்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினர் கோரிய காணிகளை ஆணைக்குழு இதுவரை வழங்கவில்லை

## தலைவரின் அனுமதி கிடைக்கவில்லை

*யாழ்ப்பாணம்,ஜன.09*

*யாழ்.மாவட்டத்தில் படையினர் கோரிய, காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிகள் எவையும் படையினருக்கு இன்னமும் வழங்கப்படவில்லை. அதற்கான அனுமதியை ஆணைக் குழுவின் தலைவர் வழங்கவில்லை.*

இவ்வாறு காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் யாழ். வன்னிப் பிராந்தியங்களுக்குப் பொறுப்பான இணைப்பாளர் என்.விமல்ராஜ் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் படையினரால் இராணுவ முகாம் அமைப்பதற்குப் பல இடங்களில் காணிகள் கோரப்பட்டு வருகின்றன. சில இடங்களில் அவர்கள் தாம் தங்கியுள்ள காணிகளையும், வேறு இடங்களிலுள்ள காணிகளையும் கோரி வருகின்றனர்.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகள் சிலவற்றையும் படையினர் தமக்கு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தக் காணிகளை வழங்குவது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் ஆணைக்குழுவின் தலைவருக்கே இருப்பதனால் கோரிக்கை கடிதங்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இதுவரையில் படையினர் கோரிய காணிகள் எதுவும் அவர்களுக்கு வழங்குவதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டு ஆணைக்குழுவின் தலைவரால் பதில் கடிதம் எதுவும் அனுப்பப்படவில்லை. இருப்பினும், 35 வருட காலமாக மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்த கெற்பேலி மயானத்தைப் படையினர் ஆக்கிரமித்தனர். குறித்த காணி காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமானது. அந்தக் காணி தமக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தே படையினர் மயானத்தை ஆக்கிரமித்துள்ளனர்.

ஆனால் காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் படையினருக்கு எந்தக் காணிகளும் இதுவரையில் வழங்கப்படட போதும் மயானத்தை படையினர் ஆக்கிரமித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-5)

## பெண்ணுடன் தகாத வார்த்தை இளைஞர்கள் நையப்புடைப்பு

*யாழ்ப்பாணப்,ஜன.9*

வீதியால் சென்றுகொண்டிருந்த பெண்ணுடன் தகாதவார்த்தைப் பிரயோகம் மேற்கொண்ட இளைஞர் கும்பலொன்றை அப்பகுதி மக்கள் மடக்கிப் பிடித்து நையப்புடைத்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு யாழ்.முற்ற வெளிப்பகுதியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

கொட்டடிப்பகுதியில் வீதியால் சென்றுகொண்டிருந்த இளம்பெண் ஒருவரை அந்த வீதிவழியாக வந்த இளைஞர் கும்பல் தகாத வார்த்தைப் பிரயோகங்களால் வைததுடன் அவர் மீது சேஷ்டை புரியவும் முனைந்துள்ளது.

இதனை அந்த வீதியில் நின்றவர்கள் அவதானித்துள்ளனர். இதன் பின்னர் அந்த இளைஞர் கும்பலைத் துரத்திச் சென்ற மக்கள் யாழ்.முற்றவெளிப் பகுதியில் அவர்களை மடக்கிப்பிடித்து நையப்புடைத்தனர். இளைஞர்கள் மன்னிப்புக்கோரியதையடுத்து அவர்கள் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.(த-17)

## மரக்கறி விலைகள் மேலும் உயரலாம்

யாழ்ப்பாணம்,ஜன.09

யாழ்.குடாநாட்டில் மரக்கறிகளின் விலைகள் மேலும் அதிகரிக்கலாம் என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் பெய்த மழையினால் மரக்கறிப் பயிர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் சந் தைகளில் மரக்கறிகளின் விலைகள் உயர்ந்துள்ளன. தெற்கிலும் மரக்கறிப் பயிர் கள் வெள்ளத்தில் மூழ்கிய மையால் தம்புள்ள சந்தையில் இருந்தும் மரக்கறிகளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவது வெகுவாக குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாட்டு விவசாய நிலங்களில் பயிரிடப்பட்ட மரக்கறிப்பயிர்கள் அண்மையில் பெய்த மழையினால் பாதிக்கப்பட்டுள்ளன. திருநெல்வேலிச் சந்தையில் நேற்று மரக்கறிகளின் விலை விவரம் வருமாறு.

கத்தரிக்காய் (1கிலோ) -190 ரூபா, பாவற்காய் (1கிலோ)- 200 பயிற்றங்காய்(கிலோ)-180 ரூபா, லீக்ஸ் (1 கிலோ)-160 ரூபா, மரவள்ளிக் கிழங்கு (1 கிலோ)-50 ரூபா, பூசனிக்காய் (1 கிலோ)-60 ரூபா, பச்சை மிளகாய் (1 கிலோ) 200 ரூபா , வெங்காயப்பூ (1கிலோ) 400 ரூபா, முருங்கக்காய் (1கிலோ) 900 ரூபா, உருளைக்கிழங்கு (1கிலோ) 140 ரூபா, கீரை (1பிடி) 40 ரூபா, தேசிக்காய் (ஒன்று )10 ரூபா.

(த-17)

## இதுவரை மூடப்படாத குழியால் மாணவர்கள், ஆசிரியர் சிரமம்

### சாவகச்சேரி இந்துவுக்கு அருகில்

தென்மராட்சி,ஜன.9

வீதி அகலிப்புக்காக வெட்டப்பட்டு கட்டப்பட்டுள்ள வடிகால் வேலைகள் பூர்த்தியடைந்தும் வெட்டப்பட்ட பகுதி மூடப்படாததால் மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகிலுள்ள சங்கத்தானை முருகன் கோயில் வீதி, சங்கத்தானை முதலாம் ஒழுங்கை ஆகியவை ஏ-9 வீதியுடன் இணையும் பகுதியில் பாடசாலை விடுமுறை நாட்களில் வெட்டப்பட்டு வடிகால் அமைக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. வெட் டப்பட்ட குழி முழுமையாக மூடப்படாத நிலையில் உள்ளது.

இந்த வீதியினை கல்வயல், மட்டுவில், சரசாலை, நுணாவில, பெருங்குளம், நெருடாவில், கிராம்புவில் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 800 க்கும் மேற்பட்ட சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களும் பெருமளவு ஆசிரியர்களும் பயன்படுத்தி வருகின்றனர்.

வடிகால் வீதியிலிருந்து ஒரு அடி உயரத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளதாலும் வெட்டப் பட்ட குழியினை நிரப்ப சிவப்பு கிரவல் பறிக்கப்பட்டுள்ளதாலும் சைக்கிளில் இருந்து இறங்கிச் செல்லவேண்டியுள்ளதால் பல மாணவ, மாணவிகள் சிவப்புக் கிரவலுக்குள் புதையுண்டு செல்கின்றனர்.

**ஆசிரியைகளின் நிலைமை இதைவிட மிக மோசமாகக் காணப்படுகின்றது.**

ஆசிரியைகளின் நிலைமை இதைவிட மிக மோசமாகக் காணப்படுகின்றது.

இந்த வடிகாலை ஆசிரியைகள் சைக்கிளுடன் கடக்க முடியாததால் கிரவலுக்குள் புதையுண்டு செல்லும் மாணவர்கள் ஆசிரியர்களின் சைக்கிள்களை மறு பக்கத்திற்கு தூக்கிக்கொண்டு வந்து கொடுத்த பின்னரே அவர்கள் பயணத்தை தொடர்கின்றனர்.

இந்த வீதிகளினூடாக வரும் வாக னங்கள் வடிகாலினைக் கடக்க முடியாததால் பெரும் சிரமத்தின் மத்தியில் பின் சென்று வேறு வீதிகளைப் பயன்படுத்துகின்றனர். இந்த வீதியில் வாகனங்கள் செல் லக்கூடாது என்ற அறிவிப்பு பலகை இல்லாதது குறித் தும் பாதசாரிகள் கவலை தெரிவித்தனர்.

சங்கத்தானை முதலாம் ஒழுங்கையில் சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகம் அமைந்துள்ளதாக அங்கு கடமையாற்றுவோரும் அங்கு தேவைக்கு செல்வோரும் வேறு வீதிகளைப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## கெற்பேலி பண்டிதர் குடியிருப்பு முகாம் பகுதியில் பௌத்த விகாரை!

கொடிகாமம் கெற்பேலி பண்டிதர் குடியிருப்புப் பகுதியில் பௌத்த விகாரை அமைக்கப்பட்டு அண்மையில் வழிபாட்டுக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அரசுக்குச் சொந்தமான 200 ஏக்கருக்கு மேற்பட்ட காணியில் கடந்த சில வருடங்களுக்கு குடியிருப்பு என்ற பெயரில்தீவகப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்திருந்த மக்கள் குடியமர்த்தப்பட்டனர். கடந்த 1996 ஆம் ஆண்டு தொடக்கம் அந்தப் பகுதியில் குடியிருப்புகள் எதுவுமற்ற நிலையில் காணப்பட்ட காணி படையினரால் சுற்றி அடைக்கப்பட்டு முகாம் அமைக்கும் பணிகள் இடம் பெற்று வந்தன.இந்த முகாம் பகுதியிலேயே பௌத்த விகாரை அமைக்கப்பட்டு கடந்த உண்டுவப் பௌர்ணமி தினத்தன்று மதச் சடங்கு களின் பின்னர் வழிபாட்டுக் காகத் திறந்து விடப் பட்டுள்ளது.

விகாரை அமைக்கப்பட்டிருந்த பகுதியில் வேலிகள் அகற்றப்பட்டுள்ளதால் விகாரையின்''முடி'' தூர இடத்திலிருந்து பார்க்கக் கூடியதாக இருக்கிறது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## 77 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவி

### மகளிர் அபிவிருத்தி நிலையம் வழங்கியது

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் கடந்த வருடம் யாழ்ப்பாணம், கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 77 பயனாளிகளுக்கு வாழ்வாதாரத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

போரால் பாதிக்கப்பட்டு மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாத நிலையில் உள்ள குடும்பங்கள் மற்றும் கணவனை இழந்த, பிரிந்த பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களில் இருந்து பிரதேச ரீதியாக பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 10 பயனாளிகளுக்கு சிறு வியாபாரம் செய்வதற்கான ஊக்குவிப்புக் கடன்களும் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 50 பயனாளிகளுக்குச் சைக்கிள்களும் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 6 பயனாளிகளுக்குத் தையல் இயந்திரங்களும் . யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவைச் சேர்த 2 பயனாளிகளுக்கு தும்பு மற்றும் கயிறு திரிக்கும் இயந்திரமும் கோப்பாய் மற்றும் யாழ்பாண பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 2 பயனாளிகளுக்கு கோழிகள் மற்றும் கோழிக்கூடுகளும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 7 பயனாளிகளுக்கு ஆடு மற்றும் மாடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களை மையமாகக் கொண்டு பெண்கள் தாமாகவே சுயதொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் இந்த வாழ்வாதாரத் திட்டங்கள் மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் வழங்கப்பட்டுள்ளன.இதனைவிட கடந்த வருட செயல்திட்டங்களாக வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளதுடன் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் நடத்தியுள்ளனர்.

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், வேலணை,நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுகளில் காணாமல் போனோர் வீட்டு வன்முறை ,காணிப் பிரச்சினை தேசிய அடையாள அட்டை , பிறப்பு இறப்புச் சான்றிதழ்கள் பெறுதல் தொடர்பான பிரச்சினைகளுக்கு பிரபல சட்டத்தரணிகள் மூலம் நடமாடும் சட்ட ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

(ம-14)

## அதிகாலை முதல் கடும் மழை தாழ்ந்த இடங்களில் வெள்ளம்

யாழ். குடாநாட்டில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் பெய்த கடும் மழையினால் தாழ்ந்த இடங்களில் வெள்ளம் தேங்கியது.

குறிப்பாக யாழ்.நகரை அண்டிய கரையோரக் கிராமங்களின் தாழ்ந்த இடங்களில் மீண்டும் வெள்ளம் ஏற்பட்டது.

பொம்மைவெளி, காக்கைதீவு, சூரியவெளி, நாவாந்துறை மீனாட்சிபுரம், கொழும்புத்துறை, வசந்தபுரம், எழிசார், மகேந்திரபுரம் போன்ற பகுதிகளில் வெள்ளம் தேங்கிக் காணப்பட்டது.

கடந்த வாரத்தில் பெய்த கடும் மழையினாலும் இப்பகுதி மக்கள் வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

யாழ். நகரில் வீதிப் புனரமைப்புக்கென வெட்டப்பட்ட குழிகள் அனைத்தும் வெள்ளத்தால் நிரம்பின. கே.கே.எஸ். வீதியில் வெள்ளம் வழிந்தோட முடியாத நிலை காணப்பட்டதால் வர்த்தகர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் பெய்து வரும் மழையினால் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அதிகாலை வேளையில் கடும் காற்றுடன் கூடிய மழையால் பயிர்கள் முற்றிய நிலையில் காணப்பட்ட நெற்பயிர்கள் வெள்ளத்தினுள் சாய்ந்துள்ளதாக நெற் செய்கையாளர்கள் தெரிவித்தனர். இதேவேளை பெய்த கடும் மழையால் மேட்டு நிலப்பயிர்கள் வெள்ளக்தில் மூழ்கியுள்ளதால் வெள்ள நீரை அப்புறப்படுத்தும் முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சிப் பகுதியிலும் நேற்று அதிகாலை முதல் கடும் மழை கொட்டியது. இதனால் மக்களின் அன்றாடப் பணிகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

வீதிகள் தோட்ட நிலங்கள் என்பனவற்றில் மழை வெள்ளம் தேங்கிக் காணப்பட்டது. (த- 17-9-8)

## முள்ளிக்குளம் முழுவதும் சல்பீனியா

கொழும்புத்துறை,ஜன.09

யாழ். மத்தியூஸ் வீதியில் அமைந்துள்ள முள்ளிக்குளம் சல்பீனியாத் தாவரத்தினால் மூடப்பட்டுக் காணப்படுகிறது.

இதனால் நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டு பொது மக்களுக்கு நோய்த்தாக்கங்களை உண்டாக்கும் நிலை காணப்படுகிறது.

**நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டு பொது மக்களுக்கு நோய்த்தாக்கங்களை உண்டாக்கும் நிலை காணப்படுகிறது.**

அதேவேளை இந்தப் பகுதியில் புனித பத்திரிசியார் கல்லூரி, புனித சாள்ஸ் மகாவித்தியாலய ஆரம்பப் பிரிவுப் பாடசாலை , தொண்டு நிறுவனம் , ஆலயம் என்பன அமைந்திருப்பதனால் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் சுகாதாரப் பாதிப்பு ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேறியது...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

லும், உயர்நீதிமன்றத் தீர்ப்பினால் அது வாபஸ் பெறப்பட்டது. மாகாண சபைகளுக்குரிய விடயதானங்கள் குறித்த சட்டவரைவில் உள்ளடக்கப்பட்டிருப்பதால், அதற்கு மாகாண சபைகளின் அங்கீகாரம் அவசியம் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இதன்பிரகாரம் வடமாகாண சபை தவிர இதர மாகாணங்களில் சட்டவரைவுக்கு அங்கீகாரம் கிடைத்தது.

வடமாகாண சபையின் ஒப்புதலை அதன் ஆளுநர் வழங்கியிருந்தார். இதற்கு எதிர்ப்பை வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வடமாகாண சபையின் பிரதிபலிப்பை அரசால் நியமிக்கப்படும் அதன் ஆளுநர் பிரதிபலிக்க முடியாது எனக் குறிப்பிட்டு உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தது.

குறித்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர்நீதிமன்றம், 'திவிநெகும' சட்டவரைவில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்றும், சில விடயங்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவோடு நிறைவேற்றப்படவேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியிருந்தது.

இந்தத் தீர்ப்பு காரணமாகவே பிரதம நீதியரசருக்கு எதிராக அரசு குற்றப் பிரேரணை கொண்டுவந்தது என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, உயர்நீதிமன்றத்தின் திருத்தங்களுடன் 'திவிநெகும' சட்டவரைவு நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. ஆளுந்தரப்பு பிரதம கொரடா அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்தார். பின்னர் மாலை 7.12 வரை விவாதம் நடைபெற்றது. அதன் பின்னர் 'திவிநெகும' சட்டவரைவுக்கு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

அத்துடன், உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்களுக்கு தனித்தனியாகவும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு பின்னர் அவை நிறைவேற்றப்பட்டன.

**பிரதமரும் வாக்களித்தார்**

அதேவேளை, சுகவீனமுற்றிருக்கும் பிரதமர் தி.மு ஜயரட்ன நேற்றைய நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொண்டார்.

அவர் நாடாளுமன்றத்துக்கு வரும்போது ஆளுந்தரப்பினர் அவரை வணங்கி வரவேற்றனர். அதன் பின்னர் 'திவிநெகும' சட்ட வரைவு குறித்தான வாக்கெடுப்பிலும் அவர் கலந்து கொண்டார். (த-சி)

# ஜனாதிபதி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

திவைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத்தினால் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் ஜனாதிபதியின் பயணம் ஒத்திவைக்கப்பட்டமைக்கான மேலதிக தகவல் எதனையும் ஜனாதிபதி செயலகம் வெளியிடவில்லை. (த-5)

# நீதியரசர்களை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பில் நீதியரசர் அனில் குணரட்ன பொரளை பொலிஸ் நிலையத்தில் செய்திருந்த முறைப்பாட்டை நேற்று மேலதிக நீதிவான் பிரபர்ஷா ரணசிங்க ஆராய்ந்தார். நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் செய்திருந்த முறைப்பாட்டை கொழும்பு மேலதிக நீதிவான் டிக்கிரி கே. ஜயதிலக்க ஆராய்ந்தார். இதன்போதே மேற்படி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. (த-சி)

# இடியுடன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வரையிலான பிரதேசங்களில் தொடர்ச்சியாக இடியுடன் கூடிய மழை பெய்யும். கடற்கரையோரங்களிலும் இந்தக் காலநிலை தொடரும்.

வட கிழக்காக காற்று மணிக்கு 40 தொடக்கம் 50 கிலோமீற்றர் வரை வீசும் என்றும் சிலவேளைகளில் 60 தொடக்கம் 70 கிலோமீற்றர் வரை வீசலாம் எனவும் திணைக்களம் மேலும் கூறியுள்ளது. அத்துடன் மட்டக்களப்பு தொடக்கம் யாழ்ப்பாணம் வரையிலான கடற்பிரதேசம் கடும் கொந்தளிப்பாக இருக்கும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியிலிருந்து நேற்று பிற்பகல் 5.30 மணிவரையான காலப் பகுதியில் 95.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று யாழ்.திருநெல்வேலி வளிமண்டலவியல் திணைக்கள கடமை நேர அதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார். நேற்று முன்தினம் இரவு 79.3 மில்லிமீற்றரும், நேற்றுப்பகல் 16.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. (த-5-4)

# மோசடிக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டுமே. இதுவரையும் தனித்தனியே இயங்கிவந்த சமுர்த்தி அதிகாரசபை, தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை, மலையக அபிவிருத்தி அதிகாரசபை என்பனவற்றின் பல ஆயிரம் கோடி ரூபா பணம் 'திவிநெகும' அமைப்பிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இந்த மூன்று அபிவிருத்தி அதிகாரசபைகளின் கீழ் பணியாற்றிய பல ஆயிரம் ஊழியர்களின் எதிர்காலம் சூனியமாக்கப்பட்டுள்ளது.

கடந்த 18 வருடங்களாக சமுர்த்தி அதிகாரசபையின் கீழ் பணியாற்றிவரும் 27 ஆயிரம் ஊழியர்கள் அரச ஊழியர்களாக உள்வாங்கப்படவுள்ளதாகக் கூறுகின்றனர். அவர்களின் கணக்கில் இருக்கும் பல ஆயிரம் கோடி ரூபா ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம், சேவைக்காலப் பணம் என்பன தொடர்பாக எதுவும் கூறப்படவில்லை.

'திவிநெகும' அமைப்பின் பணிப்பாளரொருவர் நியமிக்கப்படும்போது அவருக்கான தகைமைகள் என்ன என்று கூறப்படவில்லை.

**ஆக்கும் அழிக்கும் அதிகாரம் ஓர் அமைச்சரின் கைக்கு**

அமைச்சர் தனக்கு வேண்டிய தலையாட்டி பொம்மையொன்றை பணிப்பாளராக நியமிக்க முடியும். நிர்வாக சபையில் உள்ள 11 உறுப்பினர்களுள் 6 பேரை அமைச்சரே நியமிப்பார்.

பணிப்பாளரும், நிர்வாக சபையும் எடுக்கும் தீர்மானங்கள் அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் மட்டுமே செயற்படுத்த முடியும். ஆக்கவும், அழிக்கவும் கூடிய வல்லமை அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஒரு நபரை நியமனம் செய்யவும், அவரைப் பதவி நீக்கம் செய்யவும் இந்த அமைச்சருக்கே முடியும்.

எந்த ஒரு அதிகாரசபையினதும் நிதி நிர்வாகம் தொடர்பாக மத்திய வங்கி கண்காணிப்புச் செய்யமுடியும். ஆனால், 'திவிநெகும' நிதியம் தொடர்பாக மத்திய வங்கி கண்காணிப்புச் செய்யமுடியாது என்றும் கூறப்பட்டுள்ளது.

பொதுமக்களின் பணம் வெளிப்படையாக இருக்கவேண்டும். ஆனால், இங்கே இரகசியம் பாதுகாக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்லாயிரம் கோடி ரூபாவை தனி ஓர் அமைச்சர் தன்னிச்சையாகக் கையாளமுடியும். தேவையேற்படின், அவர் அதனை அரசியல் செயற்பாடுகளுக்கும் செலவிட இடமுண்டு. ஜனாதிபதி ஆச்சரியமான இலங்கை என்கிறார். ஆனால், 'திவிநெகும' சட்டம் அதிசயமான ஒரு சட்டமாக அமைந்துள்ளது.

நாட்டு மக்களுக்கு நன்மையளிக்கும் சட்டங்களையும், வேலைத்திட்டங்களையும் நாம் எதிர்க்கவில்லை. தனி ஒரு மனிதரிடம் அதிகாரங்கள் அனைத்தும் ஒட்டுமொத்தமாகக் குவிக்கப்படுவதையே எதிர்க்கின்றோம். இதனால் நாடு எதிர்காலத்தில் பாரிய பொருளாதார வீழ்ச்சியை எதிர்நோக்கும் என்பது உறுதி - என்றார் சஜித் பிரேமதாஸ.(சி)

# களனி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யோட முயற்சித்தவேளையிலேயே இவர்கள் ஐவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட அனைவரும் களனி மற்றும் கிரிபத்கொடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

ஹசித்த மடவலவைக் கொலை செய்வதற்காக இவர்கள் பயன்படுத்திய 9 மில்லிமீற்றர் ரக துப்பாக்கி, 2 தோட்டாக்கள், முகமூடித் தலைக்கவசம் இரண்டு, ரி-81 ரக தானியக்க துப்பாக்கி, மெகசின் 2, ரவைகள் 48 மற்றும் ஓட்டோ என்பன இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளினூடாக மீட்கப்பட்டுள்ளன.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர், சந்தேகநபர்கள் ஐவரிடமும் மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித்த மடவல கடந்த சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இதையடுத்து களனி பிரதேசம் முழுவதும் பதற்றமான சூழ்நிலை நிலவிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சர்வாதிகாரச்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

'திவிநெகும' சட்டவரைவு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் கூட்டமைப்பு தெரிவித்தது.

இதன்போது கூட்டமைப்பு உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.சுமந்திரன் ஆகியோர் கடும் குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசினர்.

சுமந்திரன் தெரிவித்தவை வருமாறு -

இன்று சமுர்த்தி உத்தியோகத்தர்களை சபைக்கு அழைத்துவந்து நாம் அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுவதை எதிர்ப்பதுபோல் காட்ட முனைகின்றனர்.

சமுர்த்தி உத்தியோகத்தர்களை ஓய்வூதியம் பெறக்கூடிய அரச ஊழியர்களாக உள்வாங்கப்படுவதை நாங்கள் ஆதரிக்கின்றோம். இதனை ஒரு சாதாரண சட்டத்தின் மூலம் செய்திருக்க முடியும்தானே. ஏன் அதை இனிப்பை பூசிய கசப்பான திவிநெகும சட்டத்தின் மூலம் செய்யவேண்டும்.

13ஆவது திருத்தச் சட்டம் வெறும் எழுத்திலான அரைகுறைச்சட்டம். அச் சட்டம் அரைகுறையாகவேனும் மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை வழங்கியுள்ளது. அப்படி வழங்கியுள்ள அதிகாரங்களில் 15 விடயங்களை திவிநெகும சட்டம் பலவந்தமாகப் பறித்துள்ளது.

நாட்டின் அபிவிருத்தியினையையும், வறுமை ஒழிப்பினையும் மாகாணசபைகள் மூலம் செய்யக்கூடாதா? அதற்கு ஏன் தடைபோடுகின்றீர்கள்?

திவிநெகும சட்ட வரைவு தொடர்பாக உயர்நீதிமன்றம் இரண்டு தீர்வுகளை வழங்கியுள்ளது. அமைச்சர் டக்ளஸ் இரண்டு நாள்களும் கோர்ட்டில் வந்து அமர்ந்திருந்தார். அவருக்கு என்ன விளங்கியதோ தெரியவில்லை. இங்கு வந்து யாரோ எழுதிக் கொடுத்ததை அப்படியே வாசிக்கின்றார். சட்டம் தொடர்பாக பேசாமல் தமிழ்க் கூட்டமைப்பின் மீது வசைப்பாடுகிறார்.

நாம் எமது அபிலாஷைகள் தொடர்பாக பேசுகின்றோம். அரசியல் அதிகாரம் பகிரப்படவேண்டும். நாமும் எமது பிரதேசங்களில் ஏனைய சமூகங்களைப் போன்று சமனான அரசியல் அதிகாரங்களுடன் வாழ விரும்புகின்றோம். இது தவறில்லையே.

நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் 18ஆவது அரசமைப்புக்கு ஆதவளித்து அமைச்சரானபோது இந்தச் சபையில் கூறியதை நினைவுபடுத்த விரும்புகின்றேன். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு வெளியே இருந்தும் முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இருந்தும் அதிகாரப் பகிர்வை பெற முயற்சிப்போம் என்று கூறினார்.

இன்று இவருடைய நிலைப்பாடு என்ன என்பதை அறிய விரும்புகின்றேன்.

திவிநெகும சட்டமூலத்தை தனிப்பட்ட முறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் எதிர்க்கவில்லை. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பல புத்திஜீவிகள் கையெழுத்திட்டு அனுப்பியுள்ள கடிதம் ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

எம்மை விமர்சிக்கும் அமைச்சர், யாரைக் கொண்டாவது அதனை வாசித்து தெளிவு பெற வேண்டும் - என்றார் சுமந்திரன்.

இதுதொடர்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தவை வருமாறு:-

15 இற்கு மேற்பட்ட மாகாண அதிகாரங்களை இந்த 'திவிநெகும' அபிவிருத்திச் சட்டமூலமானது பறித்தெடுக்கின்றது. ஆகவேதான் இச்சட்டமூலம் தவறானது என்று கூறுகின்றோம். மாகாண அதிகாரங்களைப் பறித்தெடுக்கின்றதென்ற அடிப்படையில், உயர் நீதிமன்றில் இச்சட்டமூலத்துக்கெதிரான வழக்கொன்றை நாங்கள் தாக்கல் செய்தோம். உயர் நீதிமன்றமும் இதனை ஏற்றுக்கொண்டது. எனவே, இதனை சட்டமாக்க வேண்டுமென்றால், சகல மாகாண சபைகளதும் ஒப்புதலைப் பெறவேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியது. அரசின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள 8 மாகாண சபைகள் இதனை ஆதரித்தன. வட மாகாணத்தில் மாகாண சபை இன்மையால் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளுநர் ஒப்புதல் வழங்கமுடியாது என்பதையும் உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. இதன்பிரகாரம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இதனை நிறைவேற்றி, வட மாகாணத்திலும் இதனைத் திணிக்க நீங்கள் விரும்புகின்றீர்கள் என்பதுதான் உண்மை.

தென்பகுதியில் என்ன சட்டத்தையும் கொண்டுவந்து என்னவாவது செய்து கொள்ளுங்கள். ஆனால் வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்தில் அவர்களது அபிவிருத்தியை அவர்கள் தீர்மானிக்க, அவர்கள் செயற்பட அனுமதியுங்கள். - என்றார்.

# நீதிமன்றத்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அரசின் உறுதியான நிலைப்பாடு எனின், உயர்நீதிமன்றம் வழங்கிய வியாக்கியானத்துக்கமைய சட்ட திருத்தங்களை மேற்கொண்டு பொதுநலவாய நாடுகள் அமைப்பின் 'லெட்டிமா ஹவுஸ்' உடன்படிக்கைக்கு அமைய குற்றப் பிரேரணை நடவடிக்கையை மீண்டும் புதிதாக ஆரம்பிக்கலாம் என்று ஐ.தே.கவின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை விசாரணை செய்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையை இரத்துச் செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தீர்ப்பை ஏற்று அரசு செயற்பட வேண்டும். ஆனால், இந்தத் தீர்ப்பைத் தாம் நிராகரிப்பதாக அரசின் உத்தியோகபூர்வ அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

1978ஆம் ஆண்டு யாப்புக்கமைய அரசமைப்புக்குச் சட்டவியாக்கியானம் கூறும் அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, அதனடிப்படையில் உயர்நீதிமன்றம் வழங்கிய வியாக்கியானத்துக்கமைய மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி செயற்படுவது அரசின் கடமை.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை மீறி அரசு செயற்படுமாயின் அது சட்டரீதியான அரசாக இருக்க முடியாது. நாட்டின் அரசமைப்பைப் பாதுகாத்து, அதன்படி செயற்படுவோம் என நாம் அனைவரும் உறுதியளித்துள்ளோம்.

எனவே , அதன் படி நாம் செயற்பட வேண்டும். இதைத் தவிர்த்து தெரிவுக்குழு அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் அரசு விவாதம் நடத்துமானால் அது அரசமைப்புக்கு எதிரான செயற்பாடாகும். மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் படி தெரிவுக் குழு அறிக்கை இரத்து செய்யப்பட்டுள்ளது. எனவே, தெரிவுக் குழு அறிக்கை இனிமேல் இல்லை. இல்லாத ஒரு அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த முடியாது. அதனை மீறி விவாதம் நடத்துவதில் பயனுமில்லை.

**மீண்டும் புதிய குற்றப் பிரேரணை**

பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றப் பிரேரணையைக் கொண்டுவருவதே அரசின் உறுதியான நிலைப்பாடு எனின், அதற்குரிய சரியான சட்ட விதி முறைகளைப் பின்பற்றி, புதிய குற்றப் பிரேரணையை கொண்டுவந்து, அது தொடர்பான நடவடிக்கையை மீள ஆரம்பிக்கலாம்.

நீதியரசருக்கு எதிராக குற்றப் பிரேரணையை கொண்டு வருவதற்கான சட்ட நெறிமுறைகள் இருக்கின்றன. உயர் நீதிமன்றம் வழங்கிய வியாக்கியானத்துக்கமைய சட்டத்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் 2003 ஆண்டு பொது நலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் நாம் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு அமையவும் செயற்பட வேண்டும். மேலும் நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை கொண்டு வருவது தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ தனிநபர் சட்டமூலமொன்றை கொண்டு வந்துள்ளார். எனவே, இதனையும் கருத்திற்கொண்டு சட்டத்திருத்தங்களை மேற்கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2003 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் மாநாட்டில் நாம் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு அமைய அதனைச் சட்டமாக்க வேண்டும். அதன்படி செயற்பட வேண்டும். இல்லாவிட்டால் அந்த நாடுகளின் அமைப்பில் நாம் அங்கத்துவம் வகிப்பதில் பயனில்லை.

அத்துடன், அது சர்வதேசத்திலும் எமக்கு அகௌரவத்தை ஏற்படுத்தும்.

**இறுதி இடம்**

மேன்முறையிட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை மீறி குற்றப் பிரேரணை நடவடிக்கையை அரசு முன் கொண்டு சென்றால், பிரதம நீதியரசர் பதவியில் இருக்க வேண்டுமா, இல்லையா என்பதை நாடாளுமன்றம் தீர்மானிப்பதற்கு அதிகாரம் இருக்கிறது. என்றார். (த-சி)

# யாழ்.பல்கலை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தொடக்கம் யாழ். பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாகும் என்று பதிவாளர் அறிவித்திருந்தார். எனினும் மாணவர்கள் நேற்றுப் பல்கலைக்குச் செல்லவில்லை. பல்கலைக்கழகச் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாவது குறித்து அனைத்து மாணவர்களுக்கும் அறிவித்தல் கிடைக்காமையால் மாணவர்கள் வரவு குறைவாக இருந்திருக்கலாம் என்று விரிவுரையாளர்கள் சிலர் தெரிவித்தனர். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை அப்பியாசக் கொப்பிகள்

## வர்த்தகரின் ஏற்பாட்டில் வழங்கினார் செல்வம் எம்.பி.



பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசக் கொப்பிகளை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வழங்கினார்.

கிராம மக்களின் வேண்டுகோளை அடுத்து மடு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பண்ணை வெட்டுவான் கிராமத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான ஒரு தொகுதி அப்பியாசக் கொப்பிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழங்கி வைத்தார்.

மன்னாரின் பிரபல வர்த்தகரும், மன்னார் மாவட்ட வரியிறுப்பாளர் சங்கத்தின் செயலாளருமான சாள்ஸ் இடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தொகுதி அப்பியாசக் கொப்பிகளே நாடாளுமன்ற உறுப்பினரூடாக வழங்கப்பட்டன. மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கின் காரணமாக பண்ணை வெட்டுவான் கிராமமும் மோசமாகப் பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த கிராம மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் தேவைப்படுவதாகத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் மன்னாரின் பிரபல வர்த்தகரும், மன்னார் மாவட்ட வரியிறுப்பாளர் சங்கத்தின் செயலாளருமான சாள்ஸிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தொகுதி அப்பியாசக் கொப்பிகள் அந்தக் கிராமத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு பெற்றோரிடம் கையளிக்கப்பட்டன.

அந்தக் கிராமத்தில் உள்ள சகல மாணவர்களுக்கும் தேவையான கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வர்த்தகரும் மன்னார் மாவட்ட வரியிறுப்பாளர் சங்கத்தின் செயலாளருமான சாள்ஸ், டெலோ இயக்கத்தின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் பற்றிக் வினோ, இந்து முதியோர் அமைப்பின் தலைவர் பவமொழி பவன் ஆகியோர் அப்பியாசக் கொப்பிகளை பெற்றோரிடம் கையளித்தனர். (க-12)

# சிறுவர் துஷ்பிரயோகங்களை ஒடுக்க கிளிநொச்சி பகுதியில் செயற்றிட்டங்கள்

## பிரசுரங்கள், பதாகைகள் மூலம் விழிப்புணர்வு

கிளிநொச்சி, ஜன.9

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிறுவர் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் மாவட்ட சிறுவர் நன்னடத்தை அலுவலகத்தால் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் கடந்த காலங்களில் பல்வேறு வகையிலான சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றன. இதற்கு பொதுமக்களிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பி இருந்தது. இந்த நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் மாவட்ட சிறுவர் நன்னடத்தை அலுவலகத்தால் பல்வேறு வகையான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் வகையிலும், மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையிலும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன், பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

அத்துடன் விழிப்புணர்வுச் செயலமர்வுகள், விழிப்புணர்வு நாடகங்கள் என்பனவும் இடம்பெற்றுள்ளன.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பெரியபரந்தன், காஞ்சிபுரம், கோரக்கன்கட்டு ஆகிய கிராமங்களில் இவை முழுவீச்சில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அதிகளவில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதாக பொது அமைப்புக்கள் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)



கடந்த கால வன்முறைகளின்போது சேதங்களை எதிர்கொண்ட அடம்பன் பகுதி ஜூம்மா பள்ளிவாசல் போரின் வடுக்களைத் தாங்கிய நிலையில் காணப்படுகின்றது. (க-12)

## விளையாட்டு கழகத்தால் பொதிகள்

கிளிநொச்சி, ஜன.9

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கண்டாவளை ரூபன் விளையாட்டுக் கழகத்தால் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இங்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை அங்கத்தவர்களாகக் கொண்ட 75 குடும்பங்களுக்கு பால்மா, சீனி, சவர்க்காரம் ஆகிய பொருள்கள் அடங்கிய பொதிகளை, இந்த விளையாட்டுக் கழகத்தினர் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## புதிய அதிபர் நியமனம்

கிளிநொச்சி,ஜன.9

கிளிநொச்சி பாரதி மகா வித்தியாலயத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர் தமது பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார்.

புதிய அதிபரான பெருமாள் கணேசன் ஆரம்பத்தில் ஆங்கில ஆசிரியராகவும் பின்னர் ஆசிரிய ஆலோசகராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் நேற்றுமுன்தினம் வழங்கினார். (க-18)

## தென்னங்கன்றுகள்

கிளிநொச்சி,ஜன.9

கிளிநொச்சியில் இராணுவத்தினரால் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள முரசுமோட்டை, ஊரியான், கோரக்கன்கட்டு, கண்டாவளை ஆகிய இடங்களில் இராணுவத்தினரால் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு தலா பத்து தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் கிளிநொச்சி இராணுவத்தினரின் மக்கள் தொடர்பு அலுவலகங்களில் வைத்து இந்தத் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 01. 02. 1942

இறப்பு 10. 12. 2012



## அமரர் திருமதி சோமு சிவப்பி

திதி: 09.01.2013

மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்
புனித வாழ்வு வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே
காத்திருந்து அரவணைத்த கைகள்
காலமெல்லாம் எம்மை விட்டுப் பிரிந்ததேனோ?
மலர்ந்த வதனச் சிரிப்பை வாழ்நாளில்
காணக்கிடைக்குமோ?

திருமதி சோமு சிவப்பி அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரடியாகவும், தொலைபேசியூடகவும் ஆறுதல் அளித்து பலதரப்பட்ட உதவிகளையும் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

அத்துடன், இன்று [09.01.2013 புதன்கிழமை] அவரது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள், அனைவரையும் அழைக்கின்றோம்.

ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

மகன் தர்மராச (லண்டன்) 00442085034109


## பரந்தன் சந்தையில் அதிக நிலவாடகை

பரந்தன் பொதுச் சந்தையில் அடிப்படை வசதிகள் இல்லாத போதும் பிரதேச சபையினால் அதிகரித்த வகையில் நிலவாடகை அறவிடப்படுவதாக வர்த்தகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள கிளிநொச்சி பொதுச் சந்தையில் 300 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் தொழில்சார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த வர்த்தகர்களிடமிருந்து நாளாந்தம் நில வாடகையாக 30 ரூபா அறவிடப்பட்டு வருகின்றது. ஆனால் அதே கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் பரந்தன் பொதுச் சந்தையில் நில வாடகையாக 50 ரூபா அறவிடப்படுகின்றது.

எனவே பிரதேச சபையின் கீழ் இயங்கும் இரு சந்தைகளிலும் மாறுபட்ட வகையில் நிலவாடகை அறவிடப்பட்டு வருகின்றமை தொடர்பாக பரந்தன் வர்த்தகர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (க-6)

# சிவத்தமிழ்ச் செல்வியின் நினைவாக வவுனியாவில் ஆன்மிக விழா

## தமிழ்ச் சங்கத்தினர் ஏற்பாட்டில்

**சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டியின் திருவுருவ வழிபாடும் நினைவுப் பேருரையும் இடம்பெறும்.**

வவுனியா,ஜன.9

சிவத்தமிழ்ச் செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் நினைவு தொடர்பான ஆன்மிகவிழாவை எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் தமிழ்ச் சங்கம் நடத்தவுள்ளது.

வவுனியா தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் மங்கல விளக்கை இரா.கௌரிநாதன், திருமதி வாசுகி கௌரிநாதன் தம்பதியர் ஏற்றிவைப்பர். திருமுறையை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கல்லூரி இசை விரிவுரையாளர் ந.பரந்தாமன் ஓதுவார். தமிழ் வாழ்த்தை திருமதி ப. தனரஞ்சினி, திருமதி ஜெ.சசிரேகா ஆகியோர் பாடுவார்கள். தொடக்கவுரையை வவுனியா நகரசபையின் முன்னாள் நகரபிதா எஸ்.என்.ஜி. நாதன் நிகழ்த்துவார். தலைமையுரையைத் தொடர்ந்து அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டியின் திருவுருவ வழிபாடும் நினைவுப் பேருரையும் இடம்பெறும்.

''சைவசமயத்தில் பெண்ணடியார்கள்'' என்னும் பொருளில் இடம்பெறும் நினைவுப் பேருரையை திருக்கேதீஸ்வரம் சிவனருள் இல்லத்தின் பணிப்பாளர் வே.பொ. மாணிக்கவாசகர் நிகழ்த்துவார். சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறும் ஆன்மிகக் கருத்தரங்கத்துக்கு வவுனியா பிரதேச செயலர் கவிஞர் அ.சிவபாலசுந்தரன் நடுவராக கடமையாற்றுவார்.

''இந்து மதம்- நேற்று, இன்று, நாளை'' என்னும் தொனிப் பொருளில் இடம்பெறும் இவ்வான்மிகக் கருத்தரங்கில் கிரியைகள் என பா.பாலசுந்தரமும், சமுதாயத்தொண்டு என செ.சிவபாலனும், மூடநம்பிக்கைகள் என கவிஞர் குரும்பையூர் த. ஐங்கரனும், இளைஞருக்கு என செல்வி ஜெசிதா ஆனந்தமூர்த்தியும் உப தலைப்புகளில் கருத்துரைகள் வழங்குவர். (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## செல்வி யோகநாயகி சண்முகநாதன்

(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்- தெல்லிப்பழை)



இளவாலை வடக்கு, இளவாலையைப் பிறப்பிடமாகவும், ஐந்தாம் கட்டையடி, பெரியவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி யோகநாயகி சண்முகநாதன் நேற்று (08.01.2013) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சண்முகநாதன்(ஓய்வு பெற்ற விவாகப்பதிவாளர்) -காலஞ் சென்ற தையல்நாயகி தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், நிர்மலநாதன் (சுவிஸ்), கமலநாதன், சிவநாதன்(வலி. வடக்குப் பிரதேச சபை), நிர்மலநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திரகுமார தேவி(சுவிஸ்), யோகராணி (ஆசிரியை - மயிலிட்டி வடக்கு, கலைமகள் மகா வித்தியாலயம்),கமலராணி (விவாக, பிறப்பு, இறப்புப் பதிவாளர்- வலி.வடக்கு), சத்திஆனந்தன் (கொக்கு வில், நொதேன் இன்டஸ்ரீஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், நேத்தன் (சுவிஸ்), நெவின் (சுவிஸ்), நிரோஷன், நிருஷா, மேஷினி ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.01.2013), புதன்கிழமை மு.ப.11.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முள்ளானை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஐந்தாம்கட்டையடி,
பெரியவிளான்,
இளவாலை.
T.P.0213211853,
0779773495

தகவல்:
தந்தை,
சகோதரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மனித நேயத்தின் பாற்பட்டு செயற்பட முன்வரலாகாதா...?

விடுதலைக்கான அறிகுறி எதுவுமின்றி தமிழ் அரசியல் கைதிகளின் சிறை வாழ்க்கை தொடர்கிறது. கடந்த காலங்களில் அவர்களது விடுதலை குறித்து அரச தரப்பினால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்துமே காற்றில் பறக்கவிடப்பட்டுவிட்டன. தற்போது அவர்களுக்கு எஞ்சியிருப்பது மனதாலும் நினைத்துத்தானும் பார்க்கக் கூடாத மரணம் ஒன்றுதான். அரசாங்கம் எதிர்பார்ப்பதும் இதனைத் தானோ என்ற சந்தேகமும் இயல்பாகவே தோன்றுகிறது.

சிறைச்சாலை மரணங்களில் கடைசியாக இடம்பெற்றிருப்பது மலையகத் தமிழ்ப் பெண் அரசியல் கைதி ஒருவரினுடையதாகும். வெலிக்கடைச் சிறைக் கைதியான இப்பெண் புற்றுநோயாலும், படுக்கைப்புண்ணாலும் நீண்ட நாள்களாக அவதியுற்றார் என்றும், பொறுப்பான சிறை அதிகாரிகளிடம் தனது நிலைமை குறித்து முறையிட்டும் அவர்கள் அதனைக் கவனத்திற்கொள்ளவில்லை என்றும் கூறப்படுகிறது.

68 வயது நிரம்பிய இப்பெண் 19 வருடகாலம் சிறையில் இருந்து, நோயால் பாதிக்கப்பட்டு, சரியான மருத்துவ சிகிச்சை கிட்டாத நிலையில் மரணமடைந்தமை மிகவும் கவலை தரும் ஒரு சம்பவமாகும்.

ஜனாதிபதி பொதுமன்னிப்புக் கொடுத்து சிறைக்கைதிகளை விடுதலை செய்கிறார். கடுமையான குற்றவாளிகளும் அவர்களில் அடங்குகின்றனர். விடுதலைப் புலிகளுக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டின்பேரில் கைதான இந்தப் பெண் நீண்டகாலம் சிறையில் இருந்தும் மலையகத் தலைமைகள் அவரது நிலை குறித்து அக்கறை காட்டியதில்லை என்பது மறுபக்கம். இப்பெண்ணின் முதுமை வயது, அவருக்கு ஏற்பட்டிருந்த நோயின் தன்மையை எடுத்துக் காட்டியாவது அவரது விடுதலைக்கு முயற்சி செய்திருக்கலாம். அத்தகைய முயற்சியெதுவும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பதுளை, பூனாகலையைச் சேர்ந்த இந்தப் பெண்மணி, மட்டக்களப்பிலிருந்து விடுதலைப் புலிகளின் பொருள்களைப் பதுளைக்கு எடுத்துச் சென்றார் எனவும், பதுளையில் விடுதலைப் புலிகள் தங்குவதற்கு இடம்கொடுத்தார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

முன்னர் விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணப் பொறுப்பாளராக இருந்த கருணா இன்று அரசில் பிரதி அமைச்சராக இருக்கிறார். பிள்ளையான் ஜனாதிபதியின் ஆலோசகராகவும், கிழக்கு மாகாண சபை உறுப்பினராகவும் இருக்கிறார். விடுதலைப் புலிகளின் மகளிர் அணித் தலைவி தமிழினி சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு புனர்வாழ்வு நிலையத்தில் மணமகள் அலங்காரப் பயிற்சி பெறுகிறார். மேலும் பல விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

போர் முடிவுக்கு வந்து மூன்றரை ஆண்டுகள் கடந்த நிலையில் - இனங்களுக்கு இடையேயான நல்லிணக்கத்தின் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டுவரும் நிலையில், தமிழ் அரசியல் கைதிகள் காரணமின்றி சிறையில் வாடுகின்றனர். ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள் புனர்வாழ்வு அளித்து விடுவிக்கப்படும்போது, இவர்களைத் தொடர்ந்து சிறையில் அடைத்துவைப்பதில் எதுவித நியாயமும் இல்லை. அரசால் கூட இதனை நியாயப்படுத்த முடியாது.

மலையகத் தலைமைகள், அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளுக்கும் பொது மன்னிப்புப் பெற்றுக்கொடுக்க முயலாது விட்டாலும் குழந்தைகளுடன் உள்ள பெண்கள், வயோதிபர்கள், நோயாளிகள் விடயத்திலாவது அக்கறை செலுத்தியிருக்கலாம்.

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம், 'திவிநெகும' சட்டமூலம், பிரதம நீதியரசர் மீதான குற்றவியல் பிரேரணை போன்ற சர்ச்சைக்குரிய விடயங்கள் போன்றதல்ல, தமிழ் அரசியல் கைதிகளது பிரச்சினை. இது ஒரு மனிதாபிமானப் பிரச்சினை.

அரசுக்கு ஆதரவாகச் செயற்படும் இந்தக்கட்சிகள் அரசுக்கு ஆதரவளிக்கும் முடிவை அறிவிக்கும்போது மக்களுக்குச் சேவையாற்றுவதற்கே தாம் இந்த முடிவை எடுத்ததாகத் தெரிவிப்பதுண்டு. ஆனால், பதவி, அதிகார மோகம், சுகபோகம் ஆகிய சொந்த இலாப நோக்கங்கள் இவர்களது மக்கள் சேவைக்கான விருப்பைப் பின்தள்ளிவிடுகின்றன. மிகவும் குறுகிய வட்டம் ஒன்றுக்குள்ளேயே இவர்கள் முடங்கிக்கொள்கிறார்கள். இத்தகைய தமது போக்கில் இருந்து மலையகத் தலைமைகள் வெளியே வரவேண்டும்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், மலையகத் தமிழ் அரசியல் கைதிப் பெண்ணுக்கு ஏற்பட்ட துயரமான முடிவு குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், ''விடுதலைப் புலிகளுக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுக் கடந்த 19 வருடகாலமாக சிறையிலிருந்த இந்தப்பெண்ணின் மரணம், மலையக அரசியல் தலைமைகளின் கையாலாகாத்தனத்துக்கும், பொறுப்பற்ற தன்மைக்கும் எடுத்துக்காட்டாக அமைந்துவிட்டது'' என்று கடுமையாகச் சாடியுள்ளார்.

சிறைக்கைதிகள் விடுதலை போன்ற மனிதாபிமான விடயங்களிலாவது ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுடன் மலையகத் தலைமைகள் இணைந்து செயலாற்ற முன்வர வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகி உள்ளது.

தமிழ் மக்கள் மீது தங்களுக்குக் குரோதம் எதுவும் இல்லை என்றும், அவர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன, வழங்கப்பட்டு வருகின்றன என்றும் அனைத்துலகத்துக்கு அறிக்கைகள் மூலம் போக்குக் காட்டி வருகிறது அரசு. அரசும், அதன் அமைச்சர் பிரதானிகளும், தமிழ் மக்களை மனிதர்களாகக் கருதி அவர்களின் அடிப்படை உரிமைகளையும் அரசியல் உரிமைகளையும் மனச்சாட்சியின் பெயரிலாவது வழங்குவதற்கு இதயசுத்தியுடன் செயற்படும் காலம் ஒன்று இந்த நாட்டில் எப்போது மலரும்...? அதனைக் கற்பனை செய்து பார்ப்பதற்கான காலந்தானும் இந்த நாட்டில் மலரும் என்று எதிர்பார்க்கும் சாத்தியம் உண்டா?

# வடமராட்சி மினிபஸ் சங்கம் இணையத்தின் கீழ் செயற்படாது

வடமராட்சி, ஜன.9

வடமராட்சி தனியார் பஸ் சேவைச் சங்கம் இணையத்துடன் இணைந்து செயற்படாமல் தற்போதுள்ள நடைமுறைக்கு அமைய தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நேரடிக் கட்டுப்பாட்டில் தொடர்ந்து இயங்குவதென்றும், அரசியல் ஈடுபாடுகளைத் தவிர்த்து தனித்துவமாகச் செயற்படுவதென்றும் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

சங்கத்தின் தலைவர் அ.அன்ரனி தலைமையில் பருத்தித்துறை சிவன் கோயில் பர்வதவர்த்தன கலாமண்டபத்தில் வடமராட்சி தனியார் பஸ் சேவைச் சங்கத்தின் கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது. இதில் சங்கத்தில் அங்கம் வகிக்கும் பஸ்களின் உரிமையாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கூட்ட ஆரம்பத்தில் கடந்த 2 ஆம் திகதி தன்னையும் செயலாளரையும் யாழ். செயலகத்துக்கு அழைத்து வடமராட்சி தனியார் பஸ் சேவைச் சங்கம் யாழ். மாவட்ட தனியார் பஸ் சேவைச் சங்க இணையத்துடன் இணைந்து தான் செயற்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டதாகவும், சங்கத் தலைவரான என்னால் தனிப்பட்ட முடிவுகளை எடுக்க முடியாது. சங்க பஸ் உரிமையாளர்களை அழைத்து அவர்களுடன் கலந்து பேசித்தான் முடிவுகளை எடுக்க வேண்டும் என்ற கருத்தை தான் முன்வைத்ததாகச் சங்கத் தலைவர் அ.அன்ரனி சங்க உறுப்பினர்களுக்கு விளக்கமளித்து இதற்கான முடிவை நீங்களே எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கடந்த 31 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தமது சங்கத்துக்கு வழங்கிய அறிவுறுத்தலுக்கமைய தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நடைமுறைகளுக்கு அமைவாக, ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்கி, பயணிகளுக்கோ, வேறு எவருக்குமோ எவ்வித இடையூறுகளும் இன்றி உரிய நேரங்களுக்குச் சென்றடையக் கூடியதாக தொடர்ந்து சேவைகளைச் செய்வோம் எனச் சங்க உறுப்பினர்கள் பலரும் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

இதனையடுத்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நேரடிக் கட்டுப்பாட்டில் அதன் நடைமுறைகளுக்கமைய செயற்படப்போவதாக ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் பருத்தித்துறை இ.போ.ச.டிப்போவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சகல பாதை சேவைகளையும் அதாவது உள்ளூர், வெளிமாவட்ட சேவைகளையும் எமது சங்கமும் வழங்கி பஸ் உரிமையாளர்களின் வாழ்வாதார நிலையை மேம்படுத்த உதவுமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவை விநயமாகக் கேட்டுக் கொள்ள வேண்டும் என உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் தீர்மானமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பயணிகள் சேவை நேர அட்டவணையில் தற்போதைய காலகட்டத்துக்கு ஏற்ப சில மாற்றங்கள் செய்யப்படலாம் என்ற யோசனையும் உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டது. 750, 751,752 பாதை சேவை பஸ்கள் யாழ்ப்பாணம் செல்லும் போது ஆவரங்கால் தரிப்பில் 4 நிமிட இடையில் சேவையைத் தொடரவும் 750,752 பாதையில் சேவையில் ஈடுபடும் பஸ்கள் சந்திக்கும் பொழுது 6 நிமிட இடைவெளியில் சேவையை ஆற்ற நேரசூசி தயாரிக்கப்படலாம் எனவும் ஆலோசனை வழங்கப்பட்டது.

(த-8)

## கொடிகாமம் பனை, தென்னை சங்கம் கூட்டங்களை நடத்த தடையில்லை

யாழ்ப்பாணம்,ஜன.9

கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபை கூட்டங்கள், வருடாந்தக் கூட்டங்களை நடத்துவதற்கு சங்க நிர்வாகத்துக்குப் போதிய அதிகாரம் உண்டு. அதன் அடிப்படையில் அவர்கள் அந்தக் கூட்டங்களை நடத்தலாம் என்று யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தச் சங்கத்தின் பொதுக் கூட்டத்தை கடந்த 31 ஆம் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்தில் அன்றைய தினம் நான் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. அதற்காக இந்தக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தை அன்றைய தினம் நடத்தியிருக்கலாம். கூட்டத்தை நடத்துவதற்கு சங்க நிர்வாகத்துக்கு முழு அதிகாரமும் உண்டு.

கூட்டத்தை பிற்போடுமாறு கூட்டுறவுத் திணைக்களம் நிர்வாகத்தை நிர்ப்பந்திக்கவில்லை.

அத்துடன் கூட்டம் பிற்போடப்பட்டதால் சங்கத்தின் அபிவிருத்தி பணிகள் தாமதிப்பதாக கூறப்படுவது தவறு.

தற்போது சங்கத்தின் செயற்பாடுகள் சிறந்த முறையில் இடம்பெற்று வருகின்றன-என்றார்.

(த-17)

## தெல்லிப்பழை சங்க வாக்காளர் பட்டியல் மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம்,ஜன.9

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் உறுப்பினர்கள் அடங்கிய வாக்காளர் பட்டியல்கள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

சங்கத்தின் 44 கிளைகளிலும் வாக்காளர் பட்டியல் சங்கத் தலைமையகத்தால் தயாரிக்கப்பட்டது.

இந்தப் பட்டியல் இறுதி செய்யப்பட்டு சகல கிளை விற்பனை நிலையங்கள் மற்றும் தலைமையலுவலகம் ஆகியவற்றில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத்தின் கிளைக் குழுத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு முன்னேற்பாடாகவே இந்த வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

(த-17)

## அநுராதபுரம் விவசாயிகள் யாழ்ப்பாணத்துக்கு வருகை

தென்மராட்சி,ஜன.9

அநுராதபுரம் மாவட்ட கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் கொண்ட குழுவினர் கடந்த 6 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர்.

கமத்தொழில் மற்றும் விவசாய அமைச்சர் தலைமையில் அநுராதபுரம் மாவட்ட விவசாயத் திணைக்கள ஆணையாளர், உதவி ஆணையாளர் ஆகியோருடன் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் வருகை தந்திருந்தனர்.

இந்தக் குழுவினரை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் மாவட்ட விவசாய திணைக்கள உயர் அதிகாரிகள் ஆகியோர் மீசாலை புத்தூர்ச் சந்தியில் உள்ள கமநல சேவைகள் நிலையத்தில் வைத்து வரவேற்றனர்.

ஐந்து தினங்கள் யாழ்.மாவட்டத்தில் தங்கவுள்ள இந்தக் குழுவினர் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் நெற்செய்கை மற்றும் விவசாய நடவடிக்கைகளைப் பார்வையிடவுள்ளனர்.

> ஐந்து தினங்கள் யாழ்.மாவட்டத்தில் தங்கவுள்ள இந்தக் குழுவினர் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் நெற்செய்கை மற்றும் விவசாய நடவடிக்கைகளைப் பார்வையிடவுள்ளனர்.

இவர்களால் கொண்டுவரப்பட்ட 40 லட்சம் ரூபா பெறுமதியான முட்கம்பிகள் கட்டாக்காலி கால்நடைகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க வேலிகள் அமைக்கவென வழங்கினர்.

தென்மராட்சி பிரதேசத்தில் எழுதுமட்டுவாழ் தெற்கு, கரம்பகம், உசன், மிருசுவில் வடக்கு, கரம்பைக் குறிச்சி ஆகிய கமக்கார அமைப்புக்களுக்கு முட்கம்பிகள் வழங்கப்பட்டன.

(த-9)

## யாழ். மத்தியின் முன்னாள் அதிபரின் உருவப் படம் திரை நீக்க நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் வணக்கத்துக்குரிய ஹறோல்ட் புள்ளோவின் உருவப் படம் திரை நீக்கம் செய்யும் நிகழ்வு எதிர் வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வியாழக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் றொமைன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டப் பாடசலைகளில் யாழ்.மத்திய கல்லூரியிலேயே முதன்முதலில் வணிகக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. அதனை அறிமுகப்படுத்திய முன்னாள் அதிபர் புள்ளோவின் ஞாபகார்த்தமாக ஏற்கனவே பாடசாலை இல்லமும் அமைக்கப்பட்டுள்ளது.

ஆசிரியரின் உருவப்படம் திரை நீக்கம் செய்யும் நிகழ்வில் கல்லூரியின் முன்னாள் மாணவத் தலைவரும் பொறியியலாளருமான சாந்தகுணநாதன் ஆஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்து கலந்து கொண்டு படத்தை திரை நீக்கம் செய்வார்.

அந்த உருவப்படத்தை யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் சித்திர ஆசிரியர் கலைமாமணி சிவப்பிரகாசம் வரைந்துள்ளார். (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளை, திருட்டு சம்பவங்களால் வவுனியா மக்களிடையே அச்சநிலை

**வவுனியா மீன்சந்தையை அண்மித்துள்ள கடை ஒன்றில் 2 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.**

வவுனியா,ஜன.9

வவுனியாவில் இடம்பெற்ற திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களால் பொது மக்கள் மத்தியில் அச்சநிலை உருவாகியுள்ளது.

வவுனியா கோயில்குளம் சிவன் கோயிலை அண்மித்த பிரதேசத்திலும், வவுனியா மீன் சந்தையை அண்மித்துள்ள கடை ஒன்றிலும் இந்தத் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. கோயில்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை வீடு ஒன்றினுள் புகுந்த கொள்ளையர்கள் 26 பவுண் நகையையும் 36 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இதன்போது கொள்ளையர்கள் வீட்டாரைக் கட்டி வைத்துத் தாக்கியுமுள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மீன்சந்தையை அண்மித்துள்ள கடை ஒன்றில் 2 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் வர்த்தகர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. வவுனியா நகரில் அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. பொலிஸாரின் ரோந்து நடவடிக்கை, சிவில் பாதுகாப்பு குழுக்களின் ஏற்பாடுகளுக்கு மத்தியிலும் இந்தக் கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட பொது மக்களும், வர்த்தகர்களும் உரிய தரப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-400)



இயற்கை இடர்களின்போது உடனடியாக தற்காலிக வீடுகளை அமைப்பது தொடர்பான பயிற்சிகளை வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினர் மேசன் தொழிலாளர்களுக்கு வழங்குகின்றனர். (க-402)

## பரவப்படாத கிரவல் மண்ணால் மல்லாவியில் போக்குவரத்து சிரமம்

துணுக்காய்,ஜன.9

மல்லாவியில் வீதிப் புனரமைப்புக்கென குவிக்கப்பட்டுள்ள கிரவல் மண் மல்லாவியில் பெரும் போக்குவரத்துக்குப் பெரும் சிரமங்களை ஏற்படுத்தி வருகின்றது.

மல்லாவி பொலிஸ் நிலையத்திலிருந்து மத்திய கல்லூரி வரையில் வீதியின் நடுவே கிரவல் மண் குவிக்கப்பட்டுள்ள போதிலும், பரவப்படாத நிலையில் காணப்படுகின்றது. தற்போது இங்கு மழையும் பெய்து வருவதால் கிரவல் மண் சேறும் சகதியுமாக மாறிக் காணப்படுகின்றது. இதனால் இந்த வீதியைப் பயன்படுத்துபவர்கள் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வீதியில் செந்நிறத்தில் சேறும், சகதியும் காணப்படுவதால், அதில் பயணிப்பதற்கு மக்கள் தயங்குகின்றனர். சைக்கிளில் செல்பவர்கள் சேற்றில் புதைந்து கீழே விழுந்து எழுவதையும் காண முடிகின்றது. ஏனைய வாகனங்கள் புதைந்த நிலையில் காணப்படுகின்றன.

இதேவேளை நேற்று இரவு தொடக்கம் மல்லாவி மற்றும் துணுக்காய்ப் பிரதேசங்களில் பலத்த மழை பெய்து வருகின்றது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகவே முடங்கிய நிலையில் காணப்படுகின்றது.

குறிப்பாக தற்காலிகக் குடிசைகளில் வாழ்பவர்களின் நிலை மோசமாக உள்ளது.

மேலும் மேட்டுப் பயிர்ச் செய்கை சேதமடைந்து காணப்படுகின்றது. மரக்கறிப் பயிர்களும் அழிவடைந்ததால் மரக்கறி வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படக் கூடுமென இங்கு வசிக்கும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

(க-415)

## கால்நடைகளைக் கடத்தியவர்கள் வைக்கப்பட்டனர் விளக்கமறியலில்

கிளிநொச்சி,ஜன.9

கிளிநொச்சி முரசுமோட்டைப் பகுதியில் சுமார் 65 ஆயிரம் ரூபா பெறுமதியான கால்நடைகளைக் கடத்திச் சென்ற இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி முரசுமோட்டைப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த இரண்டு கால்நடைகள் ஊரியான் பகுதியைச் சேர்ந்த ஒருவராலும், வட்டக்கச்சியைச் சேர்ந்த ஒருவராலும் கடத்தி செல்லப்பட்டுள்ளன.

மறுநாள் அதிகாலை குறித்த கால்நடைகளில் ஒன்று இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளது. உயிருடன் இருந்த கால்நடை வட்டக்கச்சிப் பகுதியில் உள்ள வீடொன்றின் மறைவில் கட்டப்பட்டுள்ள நிலையில் கால்நடைகளைத் தேடிச் சென்றவர் இதனைக் கண்டுள்ளார்.

அவர் இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்ததை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரையும், கைது செய்ததோடு எஞ்சியிருந்த கால்நடையையும் மீட்டுள்ளனர்.

ஆரம்ப கட்ட விசாரணையின் பின்னர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ. வகாப்தீன் முன்னிலையில் சந்தேக நபர்கள் இருவரும் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (க-6)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 58 குடும்பங்களுக்கு நிவாரணம்

### பருத்தித்துறை நீதிமன்றம் வழங்கியது

கிளிநொச்சி,ஜன.9

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் வெள்ளத்தால் படுமோசமாகப் பாதிக்கப்பட்ட நாதன்குடியிருப்பைச் சேர்ந்த 58 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம் ஆகியவற்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் ஆகியோர் ஒன்றிணைந்து இந்த நிவாரணப் பொருள்களை வழங்கினார்கள்.

நாதன் குடியிருப்பைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மூலமாக ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதிமிக்க பாலுணவுகள், உலர் உணவுப் பொருள்கள் மற்றும் குடிதண்ணீர்ப் போத்தல்கள் என்பன வழங்கப்பட்டன.

பருத்தித்துறை நீதிமன்றத்தின் சார்பில் மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் சி.இராஜேஸ்வரன், நீதிவான் நீதிமன்ற பிரதம எழுதுவினைஞர் வ.தர்மகுலசிங்கம் ஆகியோர் உத்தியோகத்தர்கள், ஊழியர் சகிதம் சென்று பொருள்களை வழங்கினார்கள்.

(த-8)

## பண்ணையில் இறக்கி விடப்படுவதால் சிரமத்துக்கு உள்ளாகும் பயணிகள்

முல்லைத்தீவு,ஜன.9

வன்னி மாவட்டங்களிலிருந்து தனியார் பஸ்களில் யாழ்ப்பாணத்துக்குப் பயணிப்போர் பண்ணையில் இறக்கி விடப்படுவதால் அதிக சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வன்னி உட்பட வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இயக்கப்படும் தனியார் பஸ்கள் பண்ணையில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்தில் பிரயாணிகளை இறக்கி விடுகின்றன.

இதனால் பொருள்களை எடுத்துச் செல்வோரும், வேறு பஸ்களில் பிரயாணம் செய்து தமது இருப்பிடங்களுக்குச் செல்வோரும் சிரமங்களையும், பணச் செலவினையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

வன்னிப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் போது ஏதாவது பொருள்களை எடுத்துச் செல்வது வழக்கமாகும். ஆனால் இவர்கள் பண்ணையில் இறக்கி விடப்படுவதால் ஓட்டோவை நாடவேண்டியுள்ளது. இதற்கு அதிக பணம் கொடுத்து யாழ்.பஸ் நிலையத்தை அடைய வேண்டிய நிலையில் இவர்கள் உள்ளனர்.

எனவே வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் தனியார் பஸ்கள் பழைய பஸ் தரிப்பிடம் வரை சென்று பயணிகளை இறக்கிய பின்னர் பண்ணைக்குச் சென்றால் பெரும் உதவியாக இருக்குமென பயணிகள் தெரிவிக்கின்றனர்.

(க-500)

## பயணிக்க முடியாத நிலையில் கண்டாவளை பிரதான வீதி

கிளிநொச்சி,ஜன.9

எந்த வகையிலும் பயணிக்க முடியாத நிலையில் கண்டாவளையின் பிரதான வீதி காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடையாகவோ அல்லது எந்த ஒரு வாகனத்திலோ பயணிக்க முடியாத நிலையில் கிளிநொச்சி கண்டாவளையின் பிரதான வீதி காணப்படுவதனால் இதனூடாக பயணிக்கும் பெரும் எண்ணிக்கையானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கண்டாவளை கிராம அலுவலர் பிரிவின் கீழ் உள்ள ஆவரஞ்சாட்டி, மடுக்கரை, பத்தர்மோட்டை, கூகைமாவடி, பலகைத்துறை, வெலிக்கண்டல் உள்ளிட்ட 13 கிராமங்களில் சுமார் 370 க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால் இந்தக் கிராமங்களுக்குச் செல்லும் ஒரேயொரு பிரதான வீதி கடந்த பல ஆண்டுகளாகப் புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றது. பாலங்கள், மதகுகள் என்பனவும் சேதமடைந்து காணப்படுகின்றன. இந்த வீதியில் சுமார் மூன்று கிலோ மீற்றர் நீளமான பகுதியை இங்குள்ள பொது அமைப்புகள் தமது நிதியில் இருந்து தற்காலிகமாக புனரமைப்புச் செய்திருந்தன.

ஆனால் அண்மைய நாள்களாகப் பெய்த மழை வெள்ளம் காரணமாக குறித்த வீதி வெள்ளநீரினால் அடித்துச் செல்லப்பட்டு மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால் எந்தவொரு வாகனத்திலும் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் இந்த வீதியைத் தினமும் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

(க-6)

## கிளிநொச்சி ஊரியானில் வெள்ளப் பாதிப்பு; 80 குடும்பங்கள் உதவி கிடைக்காது அவலம்

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஊரியான் கிராமத்தில் கடும் வெள்ளப் பாதிப்புகளை எதிர்கொண்டு உறவினர் வீடுகளில் தங்கியிருந்த குடும்பங்களுக்கு இதுவரை எந்தவிதமான உதவித் திட்டங்களும் கிடைக்க வில்லையென அந்த மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடும் மழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக ஊரியான் கிராம அலுவலர் பிரிவில்சுமார் 150 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருந்தன. இதில் 80 க்கும் மேற்பட்ட குடும்பங்களின் வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்து வீடுகள் சேதமடைந்ததால் இங்கு வசித்த மக்கள் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும், தங்களது வீடுகளின் ஒரு பகுதியிலும் சிரமங்களுக்கு மத்தியில் தங்கியிருந்தனர். இவர்களுக்கு எந்தவிதமான உதவித் திட்டங்களும் இதுவரை வழங்கப்படவில்லை.

வெள்ள நீர் புகுந்ததால் சேறும்சகதியுமாக காணப்படும் வீடுகளுக்குத் தேவையான நிலவிரிப்புக்களோ அல்லது ஏனைய உதவித் திட்டங்களோ இதுவரை வழங்கப்படாததால் இவர்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

ஆனால் வெள்ளப்பெருக்கின் போது எதுவித பாதிப்புகளையும் எதிர்கொள்ளாத போதிலும் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த 20க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டமை தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்கள் கவலையும் விசனமும் தெரிவித்திருக்கின்றனர்.

(க-6)

## அக்கராயன் குளத்தின் நீர்மட்டம் ஒன்றரை அடிக்கு உயர்த்தப்பட்டது

அக்கராயன்,ஜன.8

அக்கராயன்குளத்தின் வான் கட்டு மண்மூடைகள் அடுக்கி உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் குளத்தின் நீர்க் கொள்ளளவு ஒன்றரை அடிக்கு உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குளத்தின் கீழான கமக்கார அமைப்புகளும் விவசாயிகளும் இணைந்து குளத்தின் வான் கட்டுக்கு மண்மூடைகளை அடுக்கி நீர்மட்டத்தை உயர்த்தியுள்ளனர். இதன்மூலம் குளத்தின் நீர்மட்டம் 23 அடியில் இருந்து 24 ½ அடிக்கு உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலை செய்யப்பட்ட சிறுமியின் இரத்த மாதிரி பரிசோதனைக்கு

யாழ்ப்பாணம், ஜன.9

மண்டைதீவில் வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்ட சிறுமியின் உடலில் வெவ்வேறு ஏழு இடங்களில் பதிவாகியிருந்த இரத்த மாதிரிகள் ஊர்காவற்றுறை நீதி மன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றை டி.என்.ஏ.பரிசோதனைக்கு அனுப்பி வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மண்டைதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குணசேகரன் சுதாகினி (வயது-4) என்ற சிறுமி வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்டார். அவரது சடலம் அருகிலுள்ள தோட்டக் கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டது.

அந்தச் சடலத்தில் வெவ்வேறு ஏழு இடங்களில் படிந்திருந்த இரத்த மாதிரிகளை விசேட தடயவியல் பிரிவு பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பித்தனர்.

நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா அது தொடர்பில் விசாரண செய்து அவற்றை டி.என்.ஏ.பரிசோதனைக்கு அனுப்பி அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிட்டார். அதன்படி அந்த இரத்த மாதிரிகள் டி.என்.ஏ. பரிசோதனைக்காக கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

# உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் நியமனத்தில் இணக்கப்பாடு இல்லை

யாழ்ப்பாணம்,ஜன.9

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் புதிய அதிபர் நியமனம் தொடர்பில் , இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய கிளையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையில் ஒரு இணக்கப்பாடு எட்டப்படாமையால், மனித உரிமை ஆணைக்குழுவின் கொழும்பு அலுவலகத்துக்கு அந்த வழக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு கடந்தாண்டு புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்த நியமனத்திற்கு அந்தப்பகுதி மக்களால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு ஆர்ப்பாட்டமொன்றும் நடத்தப்பட்டிருந்தது.

அத்துடன் அதிபர் பதவிக்கு விண்ணப்பித்து அந்த நியமனம் கிடைக்காத இன்னொரு பாடசாலையின் அதிபரால் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதற்கமைய மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதில் இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை.

இதனால் இந்த முறைப்பாடு மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக்கிளையின் அவதானிப்புக்களுடன் மேலதிக நடவடிக்கைகளுக்காக கொழும்பு தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. (த-5)

# மாடுகளுக்கு மாத்திரமே வீடுகளுக்குச் சென்று சிகிச்சை

மாடுகள் தவிர்ந்த ஏனைய கால்நடைகள், விலங்குகளுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டுமாயின் அவற்றை நேரடியாக வைத்திய நிலையத்திற்கு கொண்டு வருமாறு கால்நடை மற்றும் விலங்கு வளர்ப்போருக்கு பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்தியநிலையம் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

மாடுகளுக்கு மாத்திரமே குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று சிகிச்சை வழங்கக்கூடியதாக இருக்கும். எனவே

> ஏனைய கால் நடைகள், விலங்குகளுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டுமாயின் அவற்றை நேரடியாக வைத்திய நிலை யத்திற்கு கொண்டு வரவேண்டும்

எனைய கால்நடைகள் மற்றும் விலங்குகளை வளர்ப்போர் போதிய ஒத்துழைப்பை வழங்கவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. (த-8)

# கடந்த ஆண்டு 553 பேருக்கு ஒட்டுண்ணி, நெருப்புக் காய்ச்சல்

## 400 பேருக்கு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை

யாழ்ப்பாணம்,ஜன.9

ஒட்டுண்ணி மூலமாக பரவும் காய்ச்சல், நெருப்புக் காய்ச்சல் என்பவற்றினால் யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் 553 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 400 பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒட்டுண்ணி மூலமாக பரவும் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருப்பவர்கள் என்ற சந்தேகத்தில் 365 பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர்.

> ஒட்டுண்ணி மூலமாக பரவும் காய்ச்சலினால் பீடிக் கப்பட்டிருப் பவர்கள் என்ற சந்தேகத்தில் 365 பேர் வைத்திய சாலைகளில் சேர்க் கப்பட்டனர்.

இவர்களில் 295 பேர் ஒட்டுண்ணி காய்ச்சலினால் பீடிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. இதில் 202 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

இந்தக் காய்ச்சலினால் யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் கடந்த ஜனவரியில் 100 பேரும், பெப்ரவரியில் 62 பேரும், மார்ச்சில் 14 பேரும், ஏப்பிரலில் 5 பேரும் ,மே மாதம் 4 பேரும், ஜூன் மாதம் ஒருவரும்,ஜூலை மாதம் 9 பேரும், ஓகஸ்டில் 2 பேரும் , செப்ரெம்பரில் ஒருவரும், ஒக்ரோபரில் 3 பேரும், நவம்பரில் 7 பேரும், டிசெம்பரில் 87 பேரும் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

நெருப்புக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்ற சந்தேகத்தில் 429 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 258 பேருக்கு நெருப்புக்காய்ச்சல் இருக்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதில் 198 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

இந்தக் காய்ச்சலினால் யாழ். மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் கடந்த ஜனவரி மாதம் 42 பேரும் , பெப்ரவரியில் 26 பேரும் , மார்ச்சில் 17 பேரும், ஏப்ரலில் 9பேரும், மே மாதம் 3 பேரும், ஜூன் மாதம் 2 பேரும், ஜூலையில் 27 பேரும், ஓகஸ்டில் 26 பேரும், செப்ரெம்பரில் 7 பேரும் , ஒக்ரோபரில் 6 பேரும், நவம்பரில் 21 பேரும் , டிசெம்பரில் 72 பேரும் சிகிச்சை பெற்றனர்: என்று சுகாதாரப் பணிமனை தெரிவித்தது. (த-4)

# தமிழாராய்ச்சி மாநாட்டின் போது கொல்லப்பட்டோர் நினைவு தினம்

யாழ்ப்பாணம்,ஜன.9

கடந்த 1974 ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது, கொல்லப்பட்ட தமிழ் மக்களின் 38 ஆம் ஆண்டு சிரார்த்ததினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நாளை வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மாநாட்டின் போது கொல்லப்பட்ட 10 தமிழ் மக்களின் நினைவாக யாழ்.முற்றவெளி வீரசிங்கம் மண்டபத்தின் முன்பாக அமைக்கப் பட்டுள்ள நினைவிடத்தில் இந்தச் சிரார்த்த தின நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நினைவிடத்தில் மலரஞ்சலி நிகழ்வுடன் அஞ்சலி உரைகளும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

# கோழிகளுக்கு அம்மைநோய் தடுப்பூசி

வடமராட்சி,ஜன.9

பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் ஒரு மாதத்தில் ஒன்றுவிட்ட வியாழக்கிழமைகளில் கோழிகளுக்கு அம்மை நோய்த்தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு வருகின்றது.

இந்த வைத்தியநிலைய எல்லைக்குள் வதியும் கோழி வளர்ப்பாளர்கள் , கோழிப் பண்ணையாளர்கள் கோழிகளுக்கு அம்மை நோய்த் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்தியநிலையம் கோரியுள்ளது. (த-8)



யாழ்ப்பாணத்தில் இருந்து சாவகச்சேரி நோக்கிச் சென்று கொண்டிருந்த ஹன்ரர் வாகனம் ஒன்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் வீதியை விட்டு விலகி வீட்டு மதில் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதனால் மதில் சேதமடைந்தது. (த-9)

# புங்குடுதீவுப் பிரதேசத்தில் நெருப்புக் காய்ச்சல் அபாயம்

## தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை தீவிரம்

யாழ்ப்பாணம்,ஜன.9

புங்குடுதீவில் நெருப்புக் காய்ச்சல் அபாயம் காணப்பட்டதை அடுத்து அங்குள்ள மக்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது.

சுமார் 150 பேருக்கு இந்தத் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டதுடன் நெருப்புக் காய்ச்சலைத் தடுப்பதற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நேற்று முன்தினம் திங்கட் கிழமை இடம்பெற்றது.

வேலனை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் யாழ்.பல் கலைக் கழக சமுதாய மருத்துவத்துறையும் இணைந்து நெருப்புக் காய்ச்சல் தடுப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தியுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் தயாஸ்வரனின் களச்செயற்பாட்டின் ஒரு அங்கமாக இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கின் போதே மக்களுக்கான நெருப்புக் காய்ச்சல் தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டன.

> சுமார் 150 பேருக்கு இந்தத் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டதுடன் நெருப்புக் காய்ச்சலைத் தடுப்பதற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ்.மோகனகுமார் சமுதாய மருத்துவத்துறை விரிவுரையாளர் மருத்துவர் குமரன், புங்குடுதீவு சுகாதார வைத்திய அதிகாரி மருத் துவர் எஸ்.பேரின்பநாயகம், வேலணை பொதுச் சுகாதாரப் பரிசோததகர் எஸ்.சுபராஜ் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். (த-17)

# கைவிடப்பட்ட வயோதிபர் முதியோர் இல்லத்தில் சாவு

யாழ்ப்பாணம்,ஜன.9

எவரும் இல்லாமல் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருந்த முதியவர் ஒருவர் கைதடி அரச முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டு ஒரு வாரகாலத்துக்குள் திடீரென மரணமானார்.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த விஸ்வலிங்கம் உருத்திரலிங்கம் (வயது-62) என்ற முதியர் அவரது உறவினர் ஒருவரால் பராமரிக்கப்பட்டு வந்துள்ளார்.

அந்த உறவினரும் நோய்த்தாக்கத்துக்கு உள்ளானதால் அவரது பராமரிப்பும் இல்லாமல் அவதிக்குள்ளான முதியவரான உருத்திரலிங்கம் கோப்பாய்ப் பிரதேச செயலகத்தின் உதவியுடன் கைதடி அரசினர் முதியோர் இல்லத்தில் கடந்த 2 ஆம் திகதி சேர்க்கப்பட்டார். சேர்க்கப்பட்டு ஒருவார காலத்துக்குள் அவர் அங்கு மரணமானார்.

இந்த முதியவரின் சடலத்தை இல்ல நிர்வாகம் [illegible] அரச செலவில் அடக்கம் செய்துள்ளது.

உறவினர்களால் பராமரிக்கப்பட்டு பின்னர் இடை நடுவில் அவர்களால் கைவிடப்படும் போது அவர்கள், கடுமையான மனத்தாக்கத்துக்கு உள்ளாகி இறக்கும் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்துள்ளார். (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதுடில்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியும் குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடியும் சந்தித்துப் பேசினர்.

# மும்பை தாக்குதல் தீவிரவாதி ஜிண்டாலுக்கு பிணை மறுப்பு

மும்பை பயங்கரவாதத் தாக்குதலுக்கு சதித்திட்டம் தீட்டிய லஷ்கர் தீவிரவாதி களில் ஒருவரான அபு ஜின் டாலுக்கு டில்லி நீதிமன்றம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிணை வழங்க மறுத்துள்ளது.

வழக்கு விசாரணை காலத்தை 6 மாதங்களுக்கு நீடிக்க அனுமதிக்க வேண்டும் எனக்கோரும் தேசிய புலனாய்வு அமைப்பின் மனுவை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. அபுஜிண்டாலை மேலும் 13 நாள்கள் நீதிமன்றக் காவலில் வைக்கவும் உத்தரவிடப்பட்டது.

**அபுஜின் டாலை மேலும் 13 நாள்கள் நீதிமன்றக் காவலில் வைக்கவும் உத்தர விடப்பட்டது.**

ஜிண்டாலுக்கு பிணை கேட்டு வாதாடிய சட்டத்தரணி எம்.எஸ்.கான், இந்த வழக்கில் இதுவரை குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் படவில்லை. விசாரணை முடிவடையவே நீண்ட நாள்கள் செல்லும் என்று தெரிகிறது. எனவே அபு ஜிண்டாலுக்கு பிணை வழங்க வேண்டும் என்று வாதிட்டார். ஆனால் நீதிமன்றம் இதனை நிராகரித்துவிட்டது.

2008 ஆம் ஆண்டு மும்பையில் நுழைந்து தாக்குதல் நிகழ்த்திய தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளித்தல், மும்பையில் தாக்குதல் நடத்த வேண்டிய முக்கிய இடங்கள் பற்றி தகவல் கொடுத்தது, பாகிஸ்தானில் இருந்தபடியே தீவிரவாதிகளுக்கு உத்தரவு பிறப்பித்தமை உள்ளிட்ட செயல்களில் ஈடுபட்டவர் அபு ஜிண்டால் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது. (வ)

சட்டம்- ஒழுங்கு இல்லை ; பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை

# உத்தரப் பிரதேசத்தில் ஜனாதிபதி ஆட்சியை நடைமுறைப்படுத்துக

## மாயாவதி போர்க்கொடி



லக்னோ, ஜன.9

உத்தரப் பிரதேசத்தில் ஜனாதிபதி ஆட்சியை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் தற்போதைய முதல்வர் அகிலேஷ் ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்றும் பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி திடீர் போர்கொடி தூக்கியுள்ளார்.

உத்தரப் பிரதேசம் லக் னோவில் கூட்டம் ஒன்றில் பேசிய மாயாவதி கூறியதாவது:-

உத்தரப் பிரதேசத்தில் சட்டம் ஒழுங்கு மிகவும் கெட்டுப் போய்விட்டது. பெண்களுக்கு கொடுமைகள் அதிகமாக இடம் பெறுகின்றன. நாளை வியாழக்கிழமை உத்தரப் பிரதேசம் வரவுள்ள ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியிடம், உத்தரப் பிரதேச மாநில ஆளுநர் ஜோஷி இது குறித்து பேசவேண்டும்.

பிரணாப் முகர்ஜியிடம், உத்தரப் பிரதேசத்தில் சட்டம், ஒழுங்கு கெட்டுப் போய்விட்டதையும் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதையும் விளக்க வேண்டும். அகிலேஷ் யாதவ் ஆட்சியைக் கலைத்துவிட்டு ஜனாதிபதி ஆட்சிக்கு பரிந்துரை செய்ய வேண்டும். நானும் பிரணாப்பைச் சந்தித்து இது குறித்து வலியுறுத்த உள்ளேன்.

இதேவேளை மேற்படி விடயம் குறித்து கருத்து தெரிவித்துள்ள மத்திய அமைச்சர் ஹரீஷ் ராவத், இது வழக்கமாக அனைத்து மாநிலங்களிலும் நடப்பதுதான். இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் சேர்ந்து செயற்படும் போதுதான் கிடைக்கும். மாயாவதி இத்தனைப் பெரிதுபடுத்தத் தேவையில்லை-என்றார். (வ)

## வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் 'ரோபோ' பாதணி!

### மகாராஷ்டிரா மாணவர்கள் சாதனை



*மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஏழாம் வகுப்பு மாணவர்கள் பெண்களுக்குச் சிறந்த 'ரோபோ' பாதணியை உருவாக்கியுள்ளனர். அந் தப் பாதணியை இரண்டு முறை தரையில் தட்டினால் கைபேசியில் இருந்து குறுந் தகவல், தானாகச் சென்று பொலிஸை உஷார்படுத்தும். அந்தப் பாதணியால் ஒரு மிதி கொடுத்தால் வன்முறையாளர் களை மின் சாரம் தாக்கும்.*

*டில்லியில் மருத்துவ மாணவி பாலியல் கொடுமைக்குள்ளாக்கப்பட்ட பின்னர், பெண்கள் பாதுகாப்பு குறித்து நாடு முழுவதும் பெரியளவில் விவாதம் எழுந்துள்ளது. எனினும் பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் குறையவில்லை.*

*இந்த நிலையில் மகாராஷ்டிர மாநிலம் தானே நகரின் பாடசாலை மாணவர்கள் பெண்களுக்கு, பாதுகாப்பு அளிக் கும் 'ரோபோ' பாதணியைத் தயாரித்துள்ளனர். சாதாரணமாக பெண்கள் அணியும் பாதணியில் சிறிய மின்னியக்கச் சாதனம் பொருத்தப்படும். அதனால் காலுக்கோ, நடக்கவோ எந்தவித சிரமமும் இருக்காது என்று தெரிவிக்கப்பட்டது.*

## 4 வயது மகளை குளிர்சாதனப் பெட்டியில் அடைத்த தந்தை கைது

சென்னை, ஜன.9

ஆந்திராவின் கிழக்கு கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த நாராயணபுரத்தில் 4 வயது மகளை கடுமையாகத் தாக்கி, குளிர்சாதனப் பெட்டியில் அடைத்து வைத்த தந்தையைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தந்தையாரான பாஷா என்பவர் தனது மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு, அவர் மீது இருந்த ஆத்திரத்தில் குழந்தையை தாக்கி உள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. பலத்த காயங்களுடன் குளிர்சாதனப் பெட்டியில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறுமியை மீட்ட அயலிலுள்ளோர் பாஷாவைப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். (வ)

2 ஜி அலைக்கற்றை ஊழல்

# தயாநிதி மாறன் மீது புதிதாக வழக்குப்பதிவு தேவையில்லை

## சி.பி.ஐ. தெரிவிப்பு



டில்லி, ஜன.9

2ஜி அலைக்கற்றை ஊழல் வழக்கில் முன்னாள் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் தயாநிதி மாறன் மீது புதிதாக முதல்தகவல் அறிக்கை பதிய வேண்டிய அவசியம் இல்லை என்று டில்லி நீதிமன்றத்தில் மத்திய புலனாய்வுத் துறை தெரிவித்துள்ளது.

தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு 2ஜி அலைக்கற்றையை ஒதுக்கீடு செய்வதற்கான விதிமுறைகளை பிரதமர் மன்மோகன் சிங்கும் முன்னாள் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் தயாநிதி மாறனும் சட்டவிரோதமாக மாற்றியுள்ளனர். இவ்வாறு டில்லியைச் சேர்ந்த தகவல் உரிமை ஆர்வலர் விவேக் கார்க், சி.பி.ஐ. மற்றும் டில்லி மாநில லஞ்ச ஒழிப்புப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தார். அவர்கள் நடவடிக்கை எதையும் எடுக்காததால், இதுதொடர்பாக டில்லி சிறப்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

அந்த வழக்கை விசாரித்த சிறப்பு நீதிமன்றம், டில்லி லஞ்ச ஒழிப்புப் பொலிஸ் துறையின் பதிலைக் கோரியது. இவ்விவகாரத்தை ஏற்கெனவே சி.பி.ஐ. விசாரித்து வருவதாக அது தெரிவித்தது. எனவே, சி.பி.ஐ.யின் பதிலை நீதிமன்றம் கோரியது. அதன்படி, நீதிபதி சங்கீதா திங்க்ரா முன்னிலையில் திங்கட்கிழமை தனது தரப்பு வாதத்தை சி.பி.ஐ. வைத்தது.

2ஜி அலைக்கற்றை ஊழல் தொடர்பாக தயாநிதி மாறன் மீது ஏற்கெனவே வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப் படுகிறது. எனவே அவர் மீது புதிதாக முதல் தகவல் அறிக்கை பதிய வேண்டிய அவசிய மில்லை என்று சி.பி.ஐ. தெரிவித்தது. (வ)

ரயர் கழன்று வீழ்ந்த போதும்

# விமானத்தை சாதுரியமாக தரையிறக்கினார் விமானி



விமானத்தின் ரயர் கழன்று விழுந்த நிலையிலும் தனது சாதுரியத்தால் விமானத்தைத் தரையிறக்கினார் விமானி.

கர்நாடக மாநிலம், மங்களூர் விமான நிலையத்தில் இருந்து சிறிய விமானம் ஒன்று ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகருக்குப் புறப்பட்டுச் சென்றது.

சீனாவைச் சேர்ந்த 21 வய தான 'பயிற்சி விமானி' விமா னத்தை ஓட்டிச் சென்றார். மெல் போர்ன் அருகே நடு வானில் சென்று கொண்டிருந்தபோது விமானத்தின் இரண்டு ரயர்களில் ஒன்று கழன்று விட்டது. இதனால் நிலை தடுமாறிய விமானம் தரையிறங்குவதில் சிக்கல் ஏற்பட்டது.

எனவே எரிபொருள் முடிவடையும் வரை சுமார் 2 மணித்தியாலங்கள் வானில் வட்டமடித்த அந்த விமானம் ஓடுதளத்தில் மோதி வெடிக்கும் அபாயம் ஏற்பட்டது.

ஆனால் மிகவும் சாதுரியமாகச் செயற்பட்ட விமானி, மெல்போர்ன் ஓடுதளத்தில் உராய்ந்தபடி புல்வெளியில் பாதுகாப்பாக விமானத்தை தரையிறக்கினார். இதனால் அவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

விமானத்தை ஓட்டிய அந்த விமானி, 120 மணி நேரம் விமானத்தைத் தனியாக ஓட்டிய அனுபவம் வாய்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# தூக்கிலிடப்பட்ட தீவிரவாதி கசாப்பின் கருணை மனு வெளியீடு

டெல்லி, ஜன.9

தூக்குத் தண்டனையிலிருந்து விடுவிக்குமாறு ஜனாதிபதிக்கு மும்பை தாக்குதல் தீவிரவாதி அஜ் மல் கசாப் எழுதிய கருணை மனு வெளியிடப்பட்டுள்ளது.

தூக்கு தண்டனையிலிருந்து விடுவிக்குமாறு ஜனாதிபதிக்கு அஜ்மல் கசாப் கடந்த ஆண்டு செப்ரெம்பர் 12 ஆம் திகதி தனது கைப்பட உருதுமொழியில் சிறு பிழைகளுடன் கூடிய கருணை மனு எழுதினார்.

அது ஜனாதிபதிக்கு அனுப்பப் பட்டது. அந்த மனுவை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி கடந்த ஆண்டு நவம்பர் 5 ஆம் திகதி நிராகரித்தார். அதையடுத்து புனேயில் உள்ள எரவாடா சிறையில் கசாப் கடந்த ஆண்டு நவம் பர் 21 ஆம் திகதி தூக்கிலிடப்பட்டான்.

இந்தநிலையில் கசாப் அனுப்பிய கருணை மனுவின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. மனுவில் கசாப் எழுதியிருப்பதாவது:-

''ஐயா, எனக்கு சாகும் வரை தூக்கிலிடும் படி உச்ச நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது. தூக்குத்தண்டனையை ரத்து செய்து தூக்குக் கயிற்றில் இருந்து என்னை விடுவிக்கும்படி மிக தாழ்மையுடனும், மரியாதையுடனும் வேண்டிக் கொள்கிறேன். இது என்னுடைய நேர்மையான வேண்டுகோள்'' - என்றுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒபாமாவின் திட்டத்துக்கு நாடாளுமன்றம் எதிர்ப்பு



வோஷிங்டன், ஜன.9

அமெரிக்கப் பொருளாதாரத்தை சரிவில் இருந்து மீட்கும் நடவடிக்கையில் அமெரிக்க நாடாளுமன்றத்துக்கும் ஜனாதிபதி ஒபாமாவுக்கும் இடையே கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது.

அரசு பெறும் கடனுக்கான உச்சத் தொகையை அதிகரிக்க நாடாளுமன்றம் ஆதரவு தெரிவித்துள்ளது. ஆனால் இந்த முடிவுக்கு ஒபாமா எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

தற்போது ஹவாய் தீவில் தங்கியிள்ள ஒபாமா இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்-

''பொருளாதார மீட்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, நடுத்தர மக்களின் வரிச்சுமை அதிகரிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி பணக்காரர்கள் மீது வரியை அதிகரிக்க வழி வகை செய்யப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அரசு எதிர்கொள்ளும் பற்றாக்குறையை நீக்க, செலவுகளைக் குறைப்பது, வரி அதிகரிப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக முன்பு அரசு பெறும் கடனுக்கான உச்சவரம்பு குறைக்கப்பட்டது.

இதனை மீண்டும் உயர்த்த நாடாளுமன்றம் ஆதரவு தெரிவித்துள்ளது. ஆனால் பொருளாதார மீட்பு நடவடிக்கைத் திட்டத்தில் எந்தச் சமரசமும் செய்து கொள்ள மாட்டேன். இது விஷயத்தில் நாடாளுமன்றத்தின் முடிவை ஏற்க முடியாது. நாடாளுமன்றத்தில் உள்ள இரு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும், கட்சி சார்ந்த நலன்களைக் கைவிட்டுவிட்டு, தேச நலனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.'' என்று தெரிவித்தார்.

# டுவிட்டர் கருத்து; பத்திரிகையாளருக்கு குவைத்தில் சிறை!

குவைத்சிட், ஜன.9

டுவிட்டரில் அவதூறு பரப்பினார் என்று குற்றம் சாட்டப்பட்ட பத்திரிகையாளர் ஒருவருக்கு குவைத்தில் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

குவைத் நாட்டில் சமூக வலைத்தளங்களுக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள. அயாத் அல்-ஹர்பி என்ற பத்திரிகையாளர் சமூக வலைத்தளமான டுவிட்டரில், குவைத் மன்னராட்சி பற்றியும், மேற்குலக நாடுகளுடனான நட்புறவு பற்றியும் அவதூறு பரப்பியதாக குற்றம் சாட்டப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் அவருக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்ததுள்ளது.



லெபனானில் கடும் மழை பெய்து வருகிறது. ஜர்டா நகரில் கரைபுரண்டு ஓடும் வெள்ளம் காரணமாக விவசாயப் பண்ணைகள் வெள்ளத்தால் அள்ளுண்டு நிர்மூலமாகியுள்ளன.

# பெரு ஹெலி விபத்து 7 பேர் உயிரிழந்தனர்



லியோ, ஜன.9

பெருவில் இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் 5 அமெரிக்கர்கள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர். நிலை தடுமாறிய ஹெலிகொப்டர் கட்டடம் ஒன்றின் மீது மோதியேவிபத்துஏற்பட்டுள்ளது.

வடக்கு பெருவில் பயணித்த தனியார் ஹெலிகொப்டர் அந்தப் பகுதியில் இருந்த கட்டடத்தின் மீது மோதியது. அதில் பயணம் செய்த அனைவரும் உயிரிழந்தனர். உயிரிழந்த 7 பேரில் 5 பேர் அமெரிக்கர்கள் என்று கூறப்படுகிறது.

தனியார் நிலக்கரி நிறுவனம் ஒன்றின் அலுவலக சேவைக்காக பயன்படுத்தப்பட்டு வந்த இந்த ஹெலி வழக்கமான பயணத்தையே மேற்கொண்டிருந்தது. எதிர்பாராதவிதமாக கட்டுப்பாட்டை இழந்த ஹெலி கட்டடத்தின் மீது மோதியுள்ளது.

விபத்துக் குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# குண்டுகளை அழிப்பதற்காக 25 ஆயிரம் பேர் வெளியேற்றம்

பேர்லின், ஜன.9

ஜேர்மனியில் இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டுகளை செயலிழக்க வைப்பதற்காக 25,000 பேர் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

ஜேர்மனியின் ஹன்னோவர் நகரின் பல இடங்களில் இரண்டாம் உலகப் போரின் போது பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

அதனையடுத்து அங்கு வசித்து வந்த நபர்களில் 25,000 பேர் வேறு இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்தக் குண்டுகள் முழுவதுமாக செயலிழக்க 6 தொடக்கம் 8 மணிநேரமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெண் செய்தி வாசிப்பாளரின் பின்னணியில் ஆபாசப் படம்

## இடைநடுவில் நிறுத்தப்பட்ட செய்தியறிக்கை



ஸ்டொக்கலம், ஜன.9

சுவீடனில் உள்ள தொலைக் காட்சி ஒன்றின் செய்தியறிக்கை வாசிக்கப்பட்டபோது பின்னணியில் ஆபாசப் படம் காட்சிப் படுத்தப்பட்டதை அடுத்து செய்தியறிக்கை இடைநடுவில் நிறுத்தப்பட்டது.

சுவீடனில் உள்ள ஒரு முன்னணி தொலைக்காட்சியின் செய்தியறிக்கையில் சிரியாவின் தற்போதைய நிலவரம் தொடர்பிலான பகுதி இடம் பெற்றுக் கொண்டிருந்தது. அவ்வேளை சுமார் 10 நிமிடங்கள் செய்தி வாசிப்பவரின் பின்புறம் உள்ள தொலைக் காட்சியில் ஆபாசப் படம் காட்சிப்படுத்தப்பட்டது.

அதையடுத்து உடனடியாக செய்தியறிக்கை நிறுத்தப்பட்டது. பின்னர் சிறிது நேரத்தின் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்துக்குப் பொதுமக்கள் கடும் விசனத்தையும், அதிருப்தியையும் வெளியிட்டுள்ளனர்.

# பாலியல் குற்றத்துக்கு ஆண்மை நீக்கம்

## மலேசிய சட்டத்தரணிகள் ஆதரவு

கோலாலம்பூர், ஜன.9

பாலியல் குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு இரசாயன முறையில் ஆண்மை நீக்கம் செய்வதற்கு மலேசிய சட்டத்தணிகள் சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மலேசிய சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் லிம் சீவி தெரிவிக்கையில்,-

''பாலியல் குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு இரசாயன முறையில் ஆண்மை நீக்கம் செய்யும் தண்டனை வழங்கலாம். ஆனால் இந்த முறையில் கடுமையான பக்க விளைவுகள் ஏற்படும் என மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் இந்த முறை மூலம் குற்றவாளிகளிடம் இருந்து மக்களை காக்க முடிவது மட்டுமின்றி, குற்றவாளியும் தண்டிக்கப்படுவார். இதற்கு முன்பு குற்றவாளிகளின் ஒப்புதலை பெறலாம்'' என்றார்.

அவாம் என்ற பெண்கள் அமைப்பின் தலைவர் ஹோயோக் லின் இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்-

''இந்த தண்டனை மிகவும்கொடூரமானது, இயற்கைக்கு மாறானது. இதன் மூலம் இத்தகைய குற்றங்களை தடுத்து விட முடியாது.'' என்று தெரிவித்துள்ளார்.

# அரசின் தணிக்கைக்கு எதிராக சீனப் பத்திரிகை ஆர்ப்பாட்டம்

## ஆதரவாக பொதுமக்கள் கூடிக் கோஷம்



பீஜிங், ஜன.9

தணிக்கை முறைக்கு எதிராக சீனாவின் 'சவுத்தேர்ன் வீக்லி' எனும் பத்திரிகையின் ஆசிரியர்கள் மற்றும் நிருபர்கள் வேலை நிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சீனாவில் ஊடகப் போராட்டம் என்பது நினைத்துப் பார்க்க முடியாத அரிதான விடயம். ஆகையால் இது ஒரு முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது.

'சவுத்தேர்ன் வீக்லி' பத்திரிகை புதுவருட தினத்தன்று சமூக சீர் திருத்தம் தொடர்பாக அழைப்பு ஒன்றை விடுத்தது. அது அரசியல் பிரசார அதிகாரிகளால் தணிக்கை செய்யப்பட்டது. அதைத்தொடர்ந்து அடுத்து 'சவுத்தேர்ன் வீக்லி' எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை தொடங்கியுள்ளது.

பிரசார அதிகாரிகளின் தலையீடு மற்றும், 'சவுத்தேர்ன் வீக்லி' பத்திரிகையால்வழிநடத்தப்படும் இணையத்தளத்தை அரசு கட்டுப்படுத்த முனைந்தமை ஆர்ப்பாட்டத்துக்கான காரணமாக கூறப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டத்தின் போது பத்திரிகைக்கு ஆதரவாகப் பெருந்திரளான பொதுமக்கள் ஒன்று கூடிக் கோஷமிட்டனர்.

'சவுத்தேர்ன் வீக்லி' சீன மக்களிடம் செல்வாக்கு மிக்க பத்திரிகையாகும்.

# வில்லியம்-கேட் தம்பதியருக்கு பரிசாக அழகிய அரண்மனை

## ராணி எலிசபெத்தின் அன்பான பரிசு



லண்டன், ஜன.9

பிரிட்டிஷ் இளவரச தம்பதியான வில்லியம்-கேட் மிடில்டனுக்கு அரண்மனை ஒன்றை பரிசாக வழங்க ராணி எலிசபெத் முடிவு செய்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

பிரிட்டிஷ் அரச குடும்பத்துக்கு [illegible] சொத்துக்கள் உள்ளன. இந்தச் சொத்துகளுக்கு உரிமையாளராக ராணி எலிசபெத் இருக்கிறார்.

அவற்றில் லண்டன் சந்திரிகாம் பண்ணையில் உள்ள அழகிய ஆன்மர் அரங்கை வில்லியம்- கேட் மிடில்டனுக்கு பரிசாக வழங்க ராணி எலிசபெத் திட்டமிட்டுள்ளார்.

தங்கள் முதல் வாரிசுக்காக காத்திருக்கும் வில்லியம் தம்பதிக்கு, இது ஒரு நினைவுப்பரிசாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேட்டோ படைவீரர் ஆப்கனில் சாவு



காபூல், ஜன.9

ஆப்கனில் நேற்று இடம் பெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தில் நேட்டோ படையின் வீரர் ஒருவர் உயிரிழந்தார்.

ஆப்கன் இராணுவத்தினரின் சீருடையை அணிந்த ஒருவரே இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார்

இந்தச் சம்பவத்தில் நேட்டோ படை வீரரின் உதவியாளர் ஒருவரும் உயிரிழந்தார்.

ஆப்கன் ஜனாதிபதி கர்சாய் அமெரிக்காவுக்கு பயணம் செய்துள்ள நிலையிலேயே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

# சிரியாவின் அமைதிக்கு முனைப்புக் காட்டுங்கள்

## உலகத் தலைவர்களிடம் பாப்பரசர் வேண்டுகோள்



வாத்திகான், ஜன. 9

ஓய்வில்லாத படுகொலைகளின் மூலமாக சிரியா கிழித் தெறியப்பட்டுள்ளது. வன்முறைகள் தொடர்ந்தால் சிரியா இரத்தக்களரியாகும் என்று காலை தெரிவித்துள்ளார் போப் பாண்டவர் பதினாறாவது ஆசிர்வாதப்பர்.

சிரியாவில் அதிபர் பஷர் அல்-அசாத்துக்கு எதிராக கடந்த 21 மாதங்களாக பொது மக்கள் போராடி வருகின்றனர். போராட்டக்காரர்கள் மீது இராணுவம் நடத்திவரும் தாக்குதல்களின் இதுவரை 60 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர்.

சிரிய நிலவரம் குறித்து கருத்துத் வெளியிட்டபோதே பாப்பரசர் முன்கண்டவாறு தெரிவித்தார். அவர் 180 நாடுகளைச் சேர்ந்த பிரமுகர்கள் மத்தியில் உரையாற்றுகையில்-

ஓய்வில்லாத படுகொலைகளின் மூலமாக சிரியா கிழித்தெறியப்பட்டுள்ளது. இதனால் அப்பாவி பொது மக்கள் சொலொனா துன்பத்துக்கும், துயரத்திற்கும் ஆளாகியுள்ளனர். இந்த நிலை தொடர்ந்தால், யாரும் வெற்றியாளர்கள் ஆக முடியாது. மாறாக அழிவுகளின் களமாக சிரியா ஆகிவிடும். இந்தச் சூழ்நிலையை மாற்றி, சிரியாவில் அமைதியை நிலவச் செய்ய உலகத் தலைவர்கள் முனைப்புக் காட்ட வேண்டும். என்று தெரிவித்தார்.

## கடற்கரையில் ஒதுங்கிய 50 சுறா மீன்கள்



பீஜி, ஜன.9

பீஜி நாட்டில் உள்ள தீவின் கடற்கரையில் 50 சுறா மீன்கள் திடீரென இறந்த நிலையில் கரை ஒதுங்கியமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பீஜி நாடு பல தீவுகளை உள்ளடக்கியுள்ளது. இங்குள்ள நுலோவு தீவின் கடற்கரையில் ஹேம்மர்கெட் என்ற வகையை சேர்ந்த 50 சுறா மீன்கள் திடீரென கரை ஒதுங்கின.

இவற்றில் பெரும்பாலானவை சுறாமீன் குட்டிகள். இருப்பினும் மற்ற இன மீன்கள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை.

இந்நிலையில் கடல் நீரில் ஏற்படும் தட்பவெப்ப நிலை மாற்றமே இதற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூகுள் நிர்வாக இயக்குநர் வடகொரியாவுக்குப் பயணம்



பியோங்யாங், ஜன.9

கூகுள் நிறுவனத்தின் நிர்வாகத் தலைவர் மற்றும் அமெரிக்காவின் முன்னாள் ஆளுநர் ஆகியோர் வடகொரியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

ஆயினும் நியூ மெக்சிக்கோவின் முன்னாள் ஆளுநர் பில் றிச்சட்ஸன் மற்றும் கூகுள் நிறுவனத்தின் நிர்வாகத் தலைவர் எரிக் ஸிமிட் ஆகியோரின் இந்தப் பயணம் பயனற்ற ஒன்று என்று அமெரிக்க அரசு கூறியுள்ளது.

இதேவேளை, தனிப்பட்ட மனிதாபிமான பணிகளுக்காகவே தாம் வடகொரியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளோம் எனத் தெரிவித்துள்ள ரிச்சட்ஸன், வடகொரியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அமெரிக்க பிரஜை தொடர்பான விடயம் குறித்தும் கலந்துரையாட திட்டமிட்டுள்ளோம் என்றும் கூறியிருக்கிறார்.

ரிச்சட்ஸன் இதற்கு முன்னர் பல தடவைகள் வடகொரியாவிற்குவுக்கு பயணம் செய்துள்ளார். இறுதியாக 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இவ்வாறான பயணமொன்றை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காட்டுத் தீயால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டார் ஆஸ்திரேலிய பிரதமர்



மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் படையினர்

மெல்பேர்ன், ஜன.9

ஆஸ்திரேலியாவில் தஸ்மேனியா பகுதியில் காட்டுத் தீயால் பாதிக்கப்பட்ட இடங்களை ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கில்லார்ட் நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றார்.

அனர்த்தத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்படும் என்று ஆஸ்திரேலிய பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

''நான் தஸ்மேனியாவுக்கு ஒரேயொரு நோக்கத்துடன் வந்துள்ளேன். இந்தக் கஷ்டமான சூழ்நிலையில் தஸ்மேனியா மக்களுக்கு ஆஸ்திரேலியா உதவி செய்யுமென்பதை மக்களுக்கு தெரிவிக்கவே நான் இங்கு வந்துள்ளேன்'' என்றார்.

இதேவேளை, காட்டுத் தீ ஏற்பட்டுள்ள பகுதியில் வெப்ப நிலை அதிகரித்துள்ளதுடன்,



கடும் காற்று வீசி வருகிறது. இதனால் தீ தொடர்ந்து பரவும் அபாயம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. விக்டோரியா, தஸ்மேனியா ஆகிய பகுதிகள் காட்டுத் தீயால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தஸ்மானியா பகுதியில் காட்டுத் தீ காரணமாக 100 பேர் காணாமற்போயுள்ளனர். 3 ஆயிரம் பேர் பாதுகாப்பாக வேறு இடங்களுக்கு அகற்றப்பட்டுள்ளனர்.

தீயணைப்புப் படையினருடன் இணைந்து பாதுகாப்புத்துறையினரும் ஹெலிகொப்டர்கள் மூலம் தீயை அணைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

## அமெ. விமானத் தாக்குதலில் 8 தீவிரவாதிகள் சாவு



இஸ்லாமாபாத், ஜன.9

பாகிஸ்தானில் இடம் பெற்ற அமெரிக்காவின் ஆளில்லா விமானத் தாக்குதலில் தலிபான்கள் எனச் சந்தேகிக்கப்படும் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

தெற்கு வஷிரிஸ்தானின் வட - மேற்கு பழங்குடிப் பகுதியிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் பாகிஸ்தான் தலிபான்களின் முக்கிய இரு தலைவர்கள் அடங்கியிருந்தனர் பாகிஸ்தானில் அமெரிக்கப் படையினர் மேற்கொண்ட ஆளில்லா விமானத் தாக்குதலில் பாகிஸ்தான் கிளர்ச்சியாளர்களின் சிரேஷ்ட தலைவர் முல்லாஹ் நஷீர் கடந்த வாரம் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பி.பி.ஸியில் வாழைப்பழத்துக்கு தடை

லண்டன், ஜன. 9

வேலை நேரத்தில் பணியாளர்கள் எவரும் வாழைப் பழம் உண்ணக் கூடாது என்று தடை விதித்துள்ளது பி.பி.ஸி. செய்தி நிறுவனம்.

லண்டனில் பி.பி.ஸி. செய்தி நிறுவனத்தின் தலைமை அலுவலகம் உள்ளது. அங்கு வாழைப்பழம் சாப்பிட்ட பெண் ஊழியர் ஒருவருக்கு திடீரென வாந்தி-மயக்கம் ஏற்பட்டது.

அதையடுத்து பி.பி.சி. நிறுவனம் ஓர் அதிரடியான உத்தரவைப் பிறப்பித்தது. அதன் படி லண்டன் அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பணியின்போது வாழைப் பழம் சாப்பிட தடை விதித் துள்ளது.

## மெக்ஸிக்கோவில் துப்பாக்கிச் சூடு

### 9 பேர் சாவு



டெரியோன், ஜன.9

மெக்ஸிக்கோவில் இடம் பெற்ற இருவேறு துப்பாக்கி பிரயோக சம்பவங்களில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

இரண்டு மதுபான சாலைகளினுள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மெக்ஸிகோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டொரியோன் நகரத்தில் உள்ள இரு மதுபானசாலைகளினுள் கிட்டதட்ட ஒரே நேரத்தில் இந்தத் துப்பாக்கி பிரயோ கங்கள் மேற்கொள் ளப்பட் டுள்ளன.

போதைவஸ்து விநியோக ஆளுமையை நிலைநாட்டும் நோக்கிலேயே இந்தக் கொலைகள் இடம் பெற்றிருக்கலாம் என பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இந்தச் சம்பவங்களை அடுத்து நகரில் உள்ள அனைத்து இரவு விடுதிகள் மற்றும் மதுபானசாலைகள் அனைத்தும் மூடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மெக்ஸிக்கோவில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் வன் செயல்களை கட்டுப்படுத்துவது குறித்து தமது நிர்வாகம் அதிகம் கவனம் செலுத்தும் என கடந்த மாதம் புதிதாக நியமனம் பெற்ற மெக்ஸிக்கோவின் ஜனாதிபதி என்றியூக் பெனா நைட்டோ சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் கனியும் வரை காத்திருங்கள்

(16)

அப்படியானால், சாதனைகள் புரிய நீங்கள் விரும்பினால் அது உடனே நிகழ்ந்து விட வேண்டுமென்று எதிர்பார்க்காதீர்கள். உழையுங்கள், கடினமாக உழையுங்கள். ஆர்வத்துடன் உழையுங்கள். பலன் தானாக வரும். இது இயற்கையின் நியதி.

விதைத்தேன், பலனில்லை என்று சொல்லுவது அர்த்தமற்ற வாதம். சில சந்தர்ப்பங்களில் நம்முடைய உழைப்பின் பலன் உடனடியாக நம்முடைய கண்களுக்குத் தெரியாமல் போகலாம். நாம் உணர முடியாமலும் இருக்கலாம். அதற்காக பலனில்லை என்று அர்த்தமல்ல.

பொன் முட்டையிடும் வாத்தை அறுத்துப் பார்த்த கதையாக உங்களுடைய உழைப்பை நீங்கள் வீணாக்கி விடக் கூடாது. உழைத்து விட்டு பலனை எதிர்பார்க்கும் உங்களுக்கு எல்லா உரிமையும் உண்டு. பலன் எப்போது என்பது தான் கேள்வி.

சாதனையாளர்கள் அனைவருமே மிகுந்த பொறுமைசாலிகளாக இருந்திருக்கிறார்கள். மின்சார பல்பை எரிய விடுவதற்கு மூவாயிரம் முறை முயன்று தோமஸ் அல்வா எடிசன் தோற்றுப் போயிருக்கிறார். அவர் பொறுமை இழந்திருந்தால் ஒளி தந்த மேதை என்கிற சிறப்புக்கு உரியவராக ஆகியிருக்க மாட்டார்.

அரச மரத்தைச் சுற்றி வந்து அடிவயிற்றைத் தொட்டுப் பார்ப்பது என்று சொல்வார்கள். அதாவது அரச மரத்தைச் சுற்றி



வந்தால் பெண்கள் கர்ப்பம் தரிக்கின்ற சாத்தியக்கூறு அதிகமாகும் என்கிற நம்பிக்கை பரம்பரையாக இருந்து வருகிறது. நவீன விஞ்ஞானம் இதற்கொரு விளக்கம் சொல்லுகிறது. அரச மரத்தின் காற்றுக்கு கர்ப்பம் தரிக்கும் ஹார்மோன்களை பலமுடையதாக்கும் சக்தி இருப்பதாகக் கண்டு பிடித்து இருக்கிறார்கள்.

அரச மரத்தைச் சுற்றி வந்து அடிவயிற்றைத் தொட்டு பார்த்தால் கர்ப்பம் தரித்த அறிகுறி தோன்றிவிடும். இந்த வாசகத்தைச் சொன்னவர்கள் அனுபவ வாயிலாகச் சொல்லி இருக்க வேண்டும். ஒரு நாள் சுற்றினால் போதாது, பல நாள்கள் சுற்றினால் பலன் இருக்கும் என்கிற கருத்தில் இதைச் சொல்லி இருக்க வேண்டும். ஏனெனில் அரச மரக் காற்றுப் பட்டவுடனேயே ஹார்மோன்கள் பலமடைந்து விடாது. தொடர்ந்து அந்தக் காற்றைச் சுவாசிப்பதனால் பலன் ஏற்படுவதற்கு வழி ஏற்படும்.

எவ்வளவு சாதகமான சூழ்நிலைகள் இருந்தாலும் பலன் உடனடியாகக் கிடைத்து விடுவது இல்லை. ஒவ்வொன்றுக்கும் ஒரு அவகாசம் தேவைப்படுகின்றது. உழைப்பு, முயற்சி ஆகியவை பலனளிக்கவும் அவகாசம் தேவை.

எந்த வேலையையும் சோர்ந்து போய் பாதியில் விட்டு விடக் கூடாது. அரைக்கிணறு தாண்டுவது அபாயம். ஓட்டப்பந்தயத்தில் ஈடுபடுகின்றவர்கள் ஒரு குறிப்பிட்ட தூரத்தை மிகக் குறைந்த காலத்தில் கடந்து சாதனை புரிய வேண்டும் என்று விரும்புகிறார்கள். சமீபத்தில் நான் ஒரு செய்தி படித்தேன். ஒரு மைல் ஓட்டப்பந்தயத்தை நான்கு நிமிடங்களில் எவரும் பூர்த்தி செய்ய முடியாது என எண்ணினார்களாம். அதாவது மனிதன் எவ்வளவு விரைவாக ஓடுகிறவனாக இருந்தாலும், நான்கு நிமிடங்களுக்குக் குறைவாக ஒரு மைலைக் கடப்பது சாத்தியமில்லை என்று கருதினார்கள். சமீபத்தில் ஒருவர் 4 நிமிடங்களில் ஒரு மைல் ஓடி புதிய சாதனை படைத்திருக்கிறார்.

இப்போது அது சாத்தியம் என்று ஆகிவிட்டது. எந்த ஒரு காரியமும் செய்து முடிக்கின்ற வரை சாத்தியமில்லைத்தான். ஆனால் அதை யாரோ ஒருவர் செய்து முடிக்கின்ற போது, அது சாத்தியமாகி விடுகின்றது.

நான்கு நிமிடங்களில் ஒரு மைல் ஓடி சாதனை புரிந்தவரும் திடீரென்று அந்தச் சாதனையைச் செய்திருக்க முடியாது. கொஞ்சம் கொஞ்சமாக நேரத்தைக் குறைத்துக் கொண்டே வந்திருப்பார். படிப்படியாக அந்தச் சாதனையை எட்டியிருப்பார்.

ஓட்டப்பந்தயத்துக்கு மட்டுமல்ல, எல்லாச் சாதனைகளுக்குமே இது பொது. எந்தச் சாதனைக்கும் அவகாசம் தேவைப்படுகின்றது. சாதனை புரிய விரும்புகின்றவர்கள், உழைப்பின் பலனை உடனே எதிர்பார்க்கக் கூடாது. உழைத்த பிறகு காத்திருக்கப் பழக வேண்டும். காலம் கனியும் வரை காத்திருக்க வேண்டும். சாதனைகள் புரிவதில் காலப் பரிமாணம் ஒரு முக்கிய அம்சம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### சாதிக்க நினையுங்கள்

உலகப் பெரும் கோடீஸ்வரர்களில் ஒருவராக விளங்கியவர் ஹென்றி ஃபோர்ட், ஏழையாக வாழ்க்கையைத் தொடங்கி மோட்டார் தொழிலில் ஈடுபட்டு அமெரிக்காவில் மிகப் பெரிய தொழில் அதிபர்களில் ஒருவராக விளங்கியவர்.

ஒரு சமயம், அவர் லண்டனுக்குப் போய் இருந்தார். அங்கே ஒரு ஹோட்டலில் தங்கினார். சாதாரண அறை ஒன்றை வாடகைக்குக் கேட்டார். ஹோட்டல் நிர்வாகி அவரிடம், உலகப் பெரும் கோடீஸ்வரரான நீங்கள் இந்தச் சாதாரண அறையை வாடகைக்கு எடுக்கிறீர்களே! என்று கேட்டார்.

போர்ட் சொன்னார்; "என் தேவைக்கு இந்த அறை போதும். எதற்காக நான் அதிகப்படுத்திச் செலவழிக்க வேண்டும்?"

பி.சி.கணேசன் (தொடரும்)

# வறுமையால் மாணவர் இடைவிலகுவது அவர்களின் எதிர்காலத்தை பாதிக்கும்

## யாழ்.வர்த்தக சங்கத் தலைவர் உரை

யாழ்ப்பாணம், ஜன.9

குடும்ப வறுமையைக் காரணம் காட்டி மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகி வீடுகளில் முடக்கப்படுவது அவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும்.

எனவே பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளில் கூடிய கவனம் எடுத்து எதிர்காலத்தை சிறந்த முறையில் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம்.

வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே வர்த்தக சங்கத் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது கூறியதாவது:-

வர்த்தக சங்கம் கடந்த காலங்களில் குறிப்பாக போர் நடைபெற்ற காலங்களில் பொது மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு வர்த்தகர்களின் நிதி உதவியுடன் வாழ்வாதார உதவிகளையும் ஏனைய அடிப்படைத் தேவைகளையும் வழங்கி வந்தது. எனினும் தற்போது யாழ்.மாவட்டத்தில் பெரிய பிரச்சினையாக எழுந்திருப்பது மாணவர்களின் கல்வி நிலை. குறிப்பாக மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகி தொழிலுக்கு அமர்த்தப்படுவதுடன் வீடுகளிலும் முடக்கப்படுகிறார்கள்.

சமூக ஆர்வலர்கள், கல்விமான்களின் கருத்துக்கு அமைவாக மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து விலகுவதற்கு முக்கிய காரணம் குடும்ப வறுமை என இனங்காணப்பட்டது.

இதற்கமைவாக வர்த்தக சங்கம் பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு இடைவிலகியுள்ள மாணவர்களுக்கு மீண்டும் பாடசாலைக்குச் செல்வதற்கான உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

குடும்ப வறுமையைக் காரணம் காட்டி பாடசாலைக்குச் செல்லாமல் தமக்கான கல்வி வாய்ப்பை இழப்பதுடன் எதிர்காலத்தையும் சரியாக அமைத்துக் கொள்ள முடியாத சூழ்நிலையும் ஏற்படும்.

பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பாக பெற்றோர் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

உரிய காலத்தில் பாடசாலைகளில் இணைத்து அவர்களுக்கான கல்வியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.-என்றார். (ம-14)




நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் நூலகங்களின் பரிசளிப்பு விழா அண்மையில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஏசியா பவுண்டேசன் நிறுவனப் பணிப்பாளர் அன்ரன் நல்லதம்பி மாணவர் ஒருவருக்குப் பரிசு வழங்குகிறார். (14)

# நவாலி தெற்கு முதியோர் சங்கத்துக்குப் புதிய தலைவர்

யாழ்ப்பாணம், ஜன.9

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/136 நவாலி தெற்கு முதியோர் சங்கத்தின் தலைவராக சி.தேவராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் க.முரளிதரனின் ஏற்பாட்டில் புதிய முதியோர் சங்கம் நவாலி தெற்கில் உருவாக்கப் பட்டுள்ளது.

முதற்கட்டமாக சுமார் 80 முதியோர் இந்தச் சங்கத்தில் இணைந்துள்ளனர். (ம-50)

# சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



இலகடி வீதி, கரவெட்டி மத்தி, கரவெட்டி என்னும் முகவரியைக் கொண்ட பாலகிருஷ்ணன் உதயசேகர் யாழ்ப்பாணம் நீதி நிர்வாகத்துறைக்கான சமாதான நீதிவானாக நியமனம் பெற்றார். இவர் பருத்தித்துறை நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் அம்மன் அ.மி.த.க.பாடசாலை ஆசிரியரும் ஆவார். (ம-253)

# ஏனையோர் நலனில் அக்கறையுடையோர் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்

## தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கருத்து

கொழும்புத்துறை, ஜன.9

அனைத்துக் கொடைகளையும், வளங்களையும் தன்னகத்தே சேர்க்க வேண்டுமென்று போராடும் சுயநல உலகில், தனக்குக் கிடைத்ததற்கு மேலாக அறிவு, ஆற்றல், நற்பண்புகள் பிறருக்கும் கிடைக்க வேண்டுமென்ற பெரு மனது கொண்டவர்கள் என்றும் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் பிரதி அதிபர் அமரர் துரை ஆரோக்கியதாசனின் 33 ஆம் நாள் மற்றும் பிறந்தநாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவஞ்சலி நிகழ்வு இலக்கிய [illegible] யோசப்பாலா தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அதில் தொடர்ந்து உரையாற்றுகையில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

பிறர்மீது அன்பும் மதிப்பும் கருணையும் கொண்ட அவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியுடன் உரையாடிய போது, சிறுவர்களின் எதிர்காலத்தை வளப்படுத்த அன்பு இல்லம் அமைப்பதே சிறந்தது என்ற சிந்தனைக்கு அடிகோலினார்.

எங்கு எப்போது சந்தித்தாலும் 'சமாதானம்' என்று வாழ்த்தி வரவேற்கும் சமாதான தூதனாக விளங்கினார். பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறுவதுடன் குற்றம் செய்தவனும் மனம்மாறி திருந்த வேண்டும் என்று செபிக்கும் மன இயல்பு மிகுந்தவர். அவரது இழப்பு கல்வித்துறைக்கும், மனித நேயத்துக்கும் பேரிழப்பாகும்-என்றார். (வ-135)

# அதிபர் நியமனம்

வடமராட்சி, ஜன.9

மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு நிரந்தரமாக புதிய அதிபராக தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய எஸ். வாகீசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பாடசாலைக்கு ஏற்கனவே நியமிக்கப்பட்டு வந்த அதிபர்கள் அடிக்கடி இடமாற்றம் செய்யப்பட்டு வந்தமையால் இந்தப் பாடசாலை மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக பெற்றோர்கள் முறைப்பாடு தெரிவித்திருந்தனர்.

தற்போது புதிய அதிபர் ஒருவர் பொறுப்பேற்றுள்ளதையடுத்து கல்விச் செயற்பாடுகள் சுமுகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பெற்றோர் தெரிவித்துள்ளனர். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில பகுதிகளுக்கு மட்டுமே பொருந்தும் 'வடக்கின் வசந்தம்' 'மஹிந்த சிந்தனை'





■ முருகு கணபதி
இளைப்பாறிய அரச அலுவலர்

அனைவராலும் சிந்தித்து ஆராய்ந்து விளங்கிக் கொள்ளப்பட வேண்டிய முக்கிய கருப்பொருள் இதுவாகும்

'மஹிந்த சிந்தனை'- 'வடக்கின் வசந்தம்' என்ற சொற்பதம் குறித்த பிரதேசத்துக்கோ அல்லது குறித்த மாவட்டத்திற்கோ அல்ல என்பது யாவரும் அறிந்ததே.

அந்த வகையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனநாயக சோசலிச குடியரசின் தந்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷஆவார்.

ஜனாதிபதி அவர்கள் 25 மாவட்டங்களுக்கும், 9 மாகாணங்களுக்குமான ஒட்டுமொத்த தலைமைப் பொறுப்பில் உள்ளவர். இவரது கோட்பாடுகள், சிந்தனைகள், பொருளாதார கொள்கைகள், திட்டமிடல், வரவு- செலவுத் திட்டம், நிதி, நீதி, நிர்வாக மற்றும் அரச பரிபாலனங்கள் எல்லாம் ஒட்டுமொத்த தொகுதிக்குள் அடங்குகின்ற ஆட்சியாகும்.

ஆதி காலத்தில் கொப்பனிக்கஸ், ரூசோ, பிளேட்டோ போன்ற அறிஞர்களின் சிந்தனைகள் காலத்தால் அழியாது இன்றும் நீடித்து நிலைத்த சிந்தனைகளாக உள்ளன.

அத்துடன், மேலும் மேலும் உலகின் பல கண்டுபிடிப்புக்களுக்கும், உலக தோற்ற மாறுதல்களுக்கும் அடிப்படையாக அடிகோலி வருவதை யாவரும் அறிவர்- உணர்வர்- சிந்திப்பர்

அந்தப்பரிமாணத்துக்கு இணங்க வடக்கில் இடம் பெற்ற மஹிந்த சிந்தனை- வடக்கின் வசந்தம்- கம நெகும என்ற கோட்பாடு அபிவிருத்தி இங்கு ஆராயப் படவேண்டும்.

கடந்தகாலப்போரினால் வடக்கு- கிழக்கு அழிந்தது யாவரும் அறிந்ததே.

இதில் இறுதியாக மே-19 -2009 இல் முள்ளிவாய்க்கால் போருடன் வன்னி இறுதிப் போர் முற்றுப்பெற்றது

இதன் பின்னர் ஏ-9 அபிவிருத்தியும், சில உட்கட்டுமான அபிவிருத்திகளும் ஆங்காங்கே திட்டமிடல் இன்றி இடம்பெறுகின்றன.

இந்த நிலைப்பாட்டில் யாழ். மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலில் 16 சபைகளில் மூன்று சபைகள் ஈழ மக்கள் ஜன நாயகக்கட்சியின் கீழ்த்தெரிவு செய்யப்பட ஏனைய சபைகளை கூட்டமைப்பு பெற்றுக் கொண்டது.

இதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களது அதி உயர்ந்த சிந்தனையில் 16 சபைகளில் மூன்று சபைகளுக்கு மட்டும் 100 மில்லியன் ரூபா வீதம் முன்னூறு மில்லியன் ரூபாவை வழங்கிவிட்டு ஏனைய 13 சபைகளையும் புறக்கணித்துள்ளார்.

இத்துடன் அவரது சிந்தனைகள் வடக்கின் வசந்தம் என்பது எல்லாம் ஒரு பொய்த் தோற்றம்- மாயைத் தோற்றம் என்பது தாய மையும்.

> "ஜனாதிபதியே ஒரு சாராரை ஏற்றும், பிறிதொரு சாராரை புறக்கணித்தும் நிர்வாக அபிவிருத்திகளைச் செய்து வருவதாக உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றார்.

ஜனாதிபதியே ஒரு சாராரை ஏற்றும், பிறிதொரு சாராரை புறக்கணித்தும் நிர் வாக அபி விருத்திகளைச் செய்து வருவதாக உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றார்.

இதன் மூலம் மெய்யான அபிவிருத்தி இன்றி மாயையான நிலைக்கே இட்டுச் செல்கிறார். ஏனையவடக்கில் உள்ள உள்ளூராட்சிச்சபைகளுக்கும் இந்த 100 மில்லியன் ரூபா வீதமான ஒதுக்கீடு கிடைக்கப் போவதில்லை.

இந்த ஒதுக்கீடு தான் எமக்குக் கிடைக்கவில்லை. ஜனாதிபதி அவர்கள் ஒட்டுமொத்த மாவட்டத்தின் ஒட்டுமொத்த மாகாணத்தின் ஒட்டுமொத்த பிரதேசத்தின் பொறுப்பைத் தாங்கி நிற்பவர்.

அவரது - சிந்தனை தனது உயர்ந்த தத்துவத்தை வெளிக் காட்ட மிகுதி 30 உள்ளூராட்சி சபைகளுக்கும் 100 மில்லியன் ரூபா வீதம் உடன் வழங்கி அபிவிருத்தி செய்ய வேண்டும்.

இல்லாவிடில் மஹிந்த சிந்தனை என்ற சொற்பதம் வலுவிழந்த ஒரு சிந்தனைக் கோட்பாட்டுக்கு இலக்காகி தற்போது இடம்பெறுகின்ற சில அபிவிருத்திகளையும் இல்லாதொழித்துவிடும் என்பதில் ஐயமில்லை.

எனவே வடக்கில் வாழும் அனைத்து மக்களுக்கும் உதவும் எண்ணம் கொண்ட மஹிந்த சிந்தனையாளர் தனது சிந்தனை வலுப்பெற மேலும் ஒரு தடவை சிந்தித்துச் செயலாற்ற வே டும் என்பதே அபிவிருத்தி அரசியலாளரின் கோட்பாடும் எண்ணங்களுமாகும். ★

# நிலவை ஆராயத்துடிக்கும் நாசா விஞ்ஞானிகள்

நாசா தனது இரண்டு செயற்கைக்கோள்களை நிலவுடன் பலவந்தமாக மோதச்செய்து நிலவின் தோற்றம் குறித்த முக்கிய பரிசோதனைகளை நடத்தியிருக்கிறது.



வ.அற்புதன்,
யாழ்ப்பாணம்.

நிலவு எப்படி உருவானது, அதன் மேற்பரப்பு, அதன் உட்கரு மற்றும் அதன் ஒட்டுமொத்த கட்டமைப்பு குறித்த மேலதிக புரிதலுக்காகவே அமெரிக்காவின் நாசா நிறுவனம் இந்த முக்கிய பரிசோதனையை நடத்தியிருச்கிறது.

'எப்' மற்றும் 'புளோ' எனும் பெயரிலான இரண்டு நாசா செயற்கைக்கோள்கள், கடந்த ஓரா ண்டாக நிலவைச்சுற்றிவந்து நிலவு குறித்த தகவல்களை சேகரித்து பூமிக்கு அனுப்பி வந்தது. இந்த இரண்டு செயற்கைக்கோள்களையும் நாசா நிறுவனம் பலவந்தமாக நிலவில் கொண்டுபோய் நேரடியாக மோதச்செய்திருக்கிறது.

அப்பல்லோ 17 விண்கலத்தில் நிலவுக்கு மனிதர்கள் சென்று சரியாக நாற்பது ஆண்டுகள் கழித்து இந்த இரண்டு செயற்கைக் கோள்களை நாசா நிறுவனம் நிலவில் மோதவைத்திருக்கிறது.

இந்த இரண்டு செயற்கைக் கோள்களிலும், மிக சக்தி வாய்ந்த புகைப்படக்கருவிகள் மற்றும் ஈர்ப்பு விசையை அளக்கும் ஈர்ப்புவிசை அளவைமானிகள் பொருத்தப்பட்டிருந்தன.

எனவே இந்த இரண்டு செயற்கைக்கோள்களும், கடந்த ஓராண்டாக நிலவை சுற்றி பயணம் செய்யும்போது இந்த புகைப்படக்கருவிகளும், ஈர்ப்புவிசை அளவைமானிகளும் தொடர்ந்து இயங்கின. இதன் விளைவாக, நிலவின் ஒளிப் படங்களும், நிலவின் பல்வேறு பகுதியின் ஈர்ப்புவிசையும் தொடர்ந்து நாசா விஞ்ஞானிகளால் பதிவு செய்யப்பட்டன.

இந்தச்செயற்கைக் கோள்கள் அனுப்பிய தகவல்கள், புகைப் படங்கள் எல்லாமே இதுவரைநிலவு குறித்துக் கிடைத்திருக்கும் தகவல்களிலேயே மிகத்துல்லியமானவையாக இருப்பதால் நிலவின் தோற்றம் மிகத்தெளிவாக தெரிவதாக நாசா விஞ்ஞானிகள் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்கள்.

இறுதியாக இந்த இரண்டு செயற்கைக்கோள்களும் நிலவின் வடதுருவத்தில் இருக்கும் இரண்டுகிலோமீற்றர் உயரமுள்ள ஒரு மலைமுகட்டில் போய் மோதின.

சுமார் 30 நொடி கால இடைவெளியில், ஒன்றுக்கொன்று மூன்று கிலோமீற்றர் தொலைவில் இந்த இரண்டு செயற்கைக் கோள்களும் நிலவில் மோதிச் சிதறின.

ஒவ்வொன்றும் ஒரு துணி துவைக்கும் இயந்திரத்தின் அளவுள்ள இந்த இரண்டு செயற்கைக்கோள்களும் நிலவில் போய் மோதியபோது உருவான பள்ளம் மற்றும் அதனால் நிலவின் மேற்பரப்பில் உருவான பாதிப்புக்கள் குறித்து இன்னமும் முழுமையாக அளவிடப்படவில்லை.

என்றாலும், இந்த இரண்டு செயற்கைக்கோள்களும் நிலவில் மோதுவது வரை நாசாவுக்கு அனுப்பிய ஒளிப்படங்கள் மற்றும் நிலவின் ஈர்ப்புசக்தியின் அளவுகள் ஆகியவை நிலவு குறித்த புதிய புரிதலை தங்களுக்கு அளித்திருப்பதாக நாசா நிறுவன விஞ்ஞானிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

நிலவு தோன்றிய விதம் குறித்து நிலவும் இரண்டு பிரதான விஞ்ஞான விளக்கங்கள் தொடர்பில் இந்த ஆய்வில் கிடைத்திருக்கும் பூர்வாங்க தகவல்கள் முக்கிய விளக்கங்களை அளிப்பதாக உள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் சாபங்கள்

■ செந்தூரி

அடங்க மறுக்கின்ற காலநிலை, ஆளாளுக்கு நாஸா விஞ்ஞானிகளாக மாறி விட்ட எதிர்வு கூறல்கள், 13-பேய்களுக்கான இலக்கம் என்கின்ற திகில் மிரட்டல்களுடன் கலவரவரைவாகவே விடிந்திருக்கின்றது புத்தாண்டொன்று. ''மெழுகுதிரி மட்டுமே எரியுமாம்'' போன்ற புதிய தகனக் கொள்கைக் கண்டுபிடிப்பாளர்களையும், மூன்று நாள்களுக்கான கடும் இருட்டுக்காக, உலர் உணவுப் பொட்டலங்களை எண்ணற்று வாங்கிச் சேமித்தவர்களையும் தற்காலிக கேலிச்சிரிப்பொன்றுடன் கடந்து போனது 2012. ஆண்டிறுதிக்கான தரப்படுத்தல்களில், இம்முறை பெரிதும் கணிக்கப்பட்ட உலகளாவிய ''ஊடக சுதந்திரம்'', செய்தி சொல்லிகளின் மெய்மொழிகளை குருதியால் நிறைத்த கொலைகார நாள்களாலும், வலிந்து நிறுத்தப்பட்ட உண்மையுரைகளின் சமாதியிலும், தனிருப்பை மீண்டுமொரு முறை சகல ஜனநாயக தேசங்களிடம் இரந்து நிற்க வேண்டிய கேவலத்துக்குள் தள்ளப்பட்டது. ஜனநாயக ஆர்வக் கோளாறு முற்றிக் கனிந்து வீழ்ந்து விடும்




## பாலியல் குற்றங்களைத் தவிர்ப்பதற்கான அன்றைய எம்மவர்களின் அணுகுமுறை

நிலையிலிருக்கும் இலங்கைத் தீவும் , வழக்கத்துக்கு மாறாக கடந்த வருடத்தின் தரக்கணிப்பொன்றில் முதலிடத்தைப் பெற்று வரலாற்றுப் பெருமை தேடியுள்ளது. கடந்த நான்கு வருடங்களாக , குறித்த வரிசைப் படுத்தலின் முதல் பத்து இடங்களிலொன்றைப் பெருமையுடன் வென்று வீறு நடை போட்ட எமது தேசம், உலக இணையங்களில் முதன் முறையாக, தனது வெற்றிக் கனியைத் தட்டிப் பறித்தது எதற்காக?

இணையத்தின் தேடல் இயந்திரங்களில் ''Sex'' என்ற ஆங்கிலச் சொல்லை அதிகம் தேடியவர்களில் இலங்கையர்கள் முதலிடம் பிடித்துள்ளமை நீங்களும், யாவரும் நினைப்பது போலொன்றும் மானங்கெட்ட செய்தியோ, தகவலோ அல்ல. மாறாக, குறைதொழில்நுட்ப அறிவும், குறைபாலியல் விழிப்புணர்வுமே இந்த வரலாற்றுச் சாதனைக்கான இருபெரும் காரணங்களாகச் சொல்லப்படுகின்றன. காரணம் முதலாவதின் படி, இணையச் சேவை வழங்குநர்களின் பெருக்கம், வகை தொகையின்றி அதிகரித்த நிலையில் ''காய்ந்த மாடுகளின் கம்பு வயல் மீதான பாய்ச் சல்'' வேகாம் கொண்டிருந்தமையும், இணையத்தள முகவரிகளின் தெளிவான பெயர்ச் சுட்டியை சரியாகத் தெரிந்து கொள்ளாத இணைய உலகின் அப்பாவிகளான இலங்கையர்களை, இவ்வாறானதொரு கொண்டாட முடியாத முதலிடத்துக்குத் தள்ளி விட்டது. 120 கோடிகளைத் தாண்டி நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் விரைந்து வளரும் சனத்தொகைப் பெருக்கம் கொண்ட இந்திய துணைக் கண்டம் இரண்டாம் இடத்தையே பிடிக்க முடிந்தமைக்கும், பின்னால் இருபது மில்லியன் மக்களையே கொண்ட குட்டித்தீவின் ''கதகதப்பினை'' கற் பனை பண்ண முடிகின்றதா? பக்கத் திலிருக்கும் இன்னொரு ''பத்தாம் விடுதி''த் தேசமான சீனத்துக்கு பத்துக்குள்ளே கூட நம்பர் எதுவும் இல்லை இந்தத் தரப்படுத்தலின்படி.

காரணம் இரண்டின்படி, பாலியல் விழிப்புணர்வின் வறுமை, இலங்கையின் கலாசார கட்டமைப்புகளின் வழியாக ஏற்படுத்தப்பட்ட ஒன்று என்கிறார்கள் ஆய்வாளர்கள். கலாசார இறுக்கங்களினால் பின்னப்பட்டுள்ள இலங்கையர்களின், உடலிலும் மனிதனொருவனுக்கான சாதாரண ஓமோன்களே சுரக்கின்றதால், எங்கெங்கெல்லாமோ அடக்கி வைக்கப்படுகின்ற பாலியல் தேவைகளுக்கான தேடல், இவ்வாறு கிடைக்கின்ற ஏதாவது ஒரு வாசலினூடாக வெளிப்பட்டுத் தெரிகின்றது எனவும், அதன் முதன்மை வடிகால்-''இணையம்'' என்றும் கொஞ்சம் மென்மை நிறையவே குத்தல் கலந்து பேசுகின்றார்கள் உலகத்தோர்.

பண்பாடு-கலாசாரம்- ஆன்மிகம்- மொழி- இனத்தூய்மை என பல்வகைக் கடிவாளங்களுக்குள் பக்குவப்பட்ட துணைக்கண்ட வேருக்குரிய மக்கள் கூட்டங்கள்,இதிகாச வார்த்தைகளில் சொல்வதானால் திராவிட மற்றும் ஆரியர்களின் வழிவந்த மக்களுக்குக் கிடைத்த ''தனிமனித ஒழுக்கம்'' என்கின்ற எட்டாப் பழம், ஐரோப்பியர்களுக்கு புளிப்புச் சுவையோடு தெரிவது இன்னொரு புற நியாயமே யாகும். இன்றைக்கு உலகம் பரிகாசம் செய்து கைகொட்டும் நிலைக்கு எம்மை நாமே உலைவாயில் தள்ளிக் கொண்டு, ஊர் வாயை மூட முடியாமல் தவிப்பதற்கான தீர்வாக சொல்லப்படும் பாலியல் கல்வி (Sex Education) தொடர்பில் பிள்ளையார் சுழி போடக்கூட எவருக்கும் தைரியமில்லை; அது அவ்வளவு விரைவில் சாத்தியமுமில்லை.

பரா மெடிக்கல் தனியார் கல்லூரியொன்றின் மாணவி அவள். பாரதத் தலைநகர் டில்லியின் புறநகர்ப்புறத்து, பேருந்தொன்றில் தனது ஆண் நண்பனோடு பயணித்துக் கொண்டிருக்கையில், ஆறுபேர் கொண்ட கும்பலொன்றினால், ஓடு கின்ற பஸ்ஸிலேயே வைத்து உடல் பிழியப்பட்டு, கசக்கி முகர்ந்து வெற்றுக் கந்தையாக வீசப்பட்டாள் அந்த இருபத்து மூன்று வயது மாணவி. பாதிக்கப்பட்டவருக்கான நிவாரணம் மட்டுமல்லாது, பாதகர்களின் மீது பாயும் நீதியையும் கேட்டு புதுடில்லியில் இந்திய நுழைவாயில் இருக்கும் இடம், பிரதமர் அலுவலகம் சோனியா காந்தி வீடு, எங்கும் வீதிகளை மறித்துத் திரண்டனர் மாணவர்கள். வெறி கொண்ட அதிகாரத்தின் லத்திகள், 'அமைதிக்குப் பங்கம்' என்ற சாட்டில் குருத்துடல்களைக் குறிவைத்துக் குதறியெடுத்தன. அடுத்தடுத்து நடக்கும் போராட்டங்கள், ஆள்வோரின் கொண்டைகளில், கொத்தாகப் பிடித்து உலுக்கிக் கொண்டிருந்த அதே நாள்களின் பின்னிரவொன்றில், சிங்கப்பூர் ''மவுண்ட் எலிசபெத்'' மருத்துவமனையின் சிகிச்சைக் கட்டிலொன்றில் ஆவி துறந்த வெற்றுடலாய் வெறிக்கக் கிடந்தாள் அந்த மாணவி. ஒட்டுமொத்த இந்திய தேசத்தின் பிரார்த்தனைகளுடன், தன் கனவுகளையும் வீணாக்கிய வெறுமைக்குள் உறவினர்கள் உள்ளிட்ட நலன் நாடிகள் அனைவரையும் உந்தித் தள்ளி விட்டு, பதில் தேட வேண்டிய அவசரத் தேவையுடைய பல்லாயிரம் கேள்விகளை எம் சமூகக் கட்டமைப்புக்கள் மீது காறி உமிழ்ந்து விட்டு அமைதிக்குள் ஆழ்ந்தது அந்தச் சிறு பூ. ஆரம்ப கட்டச் சிகிச்சைகள் முதற்கொண்டு , மேலதிக சிகிச்சைகள் நடைபெறும் வரை முற்றிலும் நினைவு திரும்பியிருக்காத உடலக அவயவங்களின் பாதிப்புடன் பேச்சற்றுக் கிடந்தவள் தன் தாயிடம் எழுதிக் கொடுத்த காகிதத் துண்டில் , தெளிவற்ற நடுங்கல் கையெழுத்தில் இன்றும் மீதமிருப்பது-''அம்மா, நான் வாழ விரும்புகிறேன்'' என்ற வார்த்தை மட்டுமே.



சிலநாள்கள் தாமதத்தின் பின்னர் அவளதுதந்தையால் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள அவளது பெயர் ஜோதிசிங்பாண்டே. ''இந்தியாவின் வீரமகள் மௌனித்து விட்டாள்'' என்று தன் மௌனம் கலைத்திருக்கின்றார் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி.

எப்பொழுதும் ''சைலன்ட்'' டில் இருக்கும் இன்னொரு பொம்மையான மன்மோகன் சிங்கோ ''மூன்று பெண் பிள்ளைகளின் தந்தையாகச் சொல்கின்றேன், குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்'' என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

''ஜோதிசிங் பாண்டே'' யின் மரணமும், அவள் மரணமுன் நாள்களும் எம்மை நோக்கியுள்ள மௌனத்துக்குப் பதிலளிக்கும் வித்தையை எங்குமே படித்துத் தெரிந்து விட முடியாது. அவளுக்காக நீதி கேட்டு எழுந்த சக மாணவர்களின் எழுச்சிக்கு நிகரான அதிர்வை உண்டு பண்ணுவதற்கான அவசியம் எங்களுக்கும் சம நாள்களில் உண்டாயினும், குறைந்தது யாழ்ப்பாணம் என்னும் வட்டத்திற்குள்ளாவது திரண்டு எதிர்க்கும் தற்துணிவு எம் மவரிடமும் இல்லை. கந்தபுராணக் கலாசாரம் வரவரத் தேய்ந்து, கடத்தல், கற்பழிப்பு, கொலைக் கலாசாரமாக, கழுதை மாற்றமே கண்டுள்ளது. பழைய பாணியிலான கழிவெண்ணெய் வீசும் கலைஞர்களின் மவுசுக்குப் போட்டியாக புதிய வரவான ''எரிதிராவகம்'' எறி ஞர்களின் அறிமுகம் இன்னமும் எமக்கு வளர்ச்சி உண்டென்பதை, பெருமிதத்துடன் கட்டியங்கூறி நிற்கின்றதைத் தவிர வேறென்ன?

''பெண்கள் மீதான வன்கொடுமைகளுக்கான பூச்சியத் தீர்வு எக்காலத்திலும் சாதித்து விடக்கூடியதல்ல. கலாசாரக் காப்புகளின் நோக்கம் ''துடைத்தழிக்கப்பட்ட பெண்பாற் கொடுமைகள்'' எனும், கனவுக்கு உயிர்கொடுப்பதாயின், தனித்தனியாக்கிய வாழ்க்கை முறைக்கு நடுவில் அதியுயரச் சுவர் எழுப்பித் தடுப்பதே ஒரே வழி. அதற்குள்ளும் யாரோவொரு ''அவனா நீ'' ஆசாமிகளிடமிருந்தும் பாதுகாப்புத் தேட வழி வேண்டும். ஆனால், பாலியல் குற்றங்களுக்கான தீர்வாக ஈழத் தமிழ்ச் சமூகம் கடைப்பிடித்த இருவழிகள் தான் இம்முழு உலகிலேயே பக்க விளைவுகள் குறைந்தவையும், பெரும்பான்மையாக சிபாரிசு செய்யப்படுகின்றவையுமாகும். சமய ஒழுக்கங்களினால் போதிக்கப்படுகின்ற விழுமியங்களின் மூலமான சுயகட்டுப்பாட்டை இறுக்கப்படுத்துதல், கூட்டுக் குடும்ப முறையில் அமைக்கப்பட்ட வாழ்க்கைக் கோலங்களினூடாக பெண்ணியம் போற்றுதல், ஆகியனவையே அவை. எழுந்தமான நோக்கில் இவ்விரு முறைகளும் ''சுடச்சுட விளைவு'' தருவனவாக இல்லாத போதிலும், பரம்பலுக்குரிய சமூகக் கூட்டமொன்றின் ஆழ் மனத்தை பக்குவப்படுத்தும் வல்லமையைத் தம்முள் வாய்க்கப்பெற்றவை. எல்லா மருந்துகளும், கைவிட்ட பின்னர் பாட்டி வைத்தியத்தின் ''வேப்பம்பட்டைக் கசாயத்துக்கு'' திரும்புவது போன்றதே.

(21ஆம் பக்கம் பார்க்க.... )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவைக்கு ஏற்பமட்டுமே நீங்கள் ஆசைப்படுங்கள்..

ஆசைப்படுவதில் தவறு இல்லை. ஆனால் அந்த ஆசை தேவைக்கு தகுந்த ஆசையாக இருக்க வேண்டும். தேவைக்கு மீறிய ஆசைகள் தேவையில்லாதவை. தேவேந்திரனுக்கு திடீரென்று வீடுகட்டும் ஆசை வந்தது. வீடு என்றால் நாம் கட்டுவது போன்ற சாதாரண வீடு இல்லை. தேவேந்திரன் வீடு என்றால் சும்மாவா?

ஒரு பிரமாண்டமான அரண்மனை கட்ட வேண்டும். இதுபோன்ற அரண்மனை இந்த மூன்று உலகங்களிலும் இல்லை என்று எல்லோரும் வியந்து பாராட்டும் வகையில் நான் கட்டும் அரண்மனை பிரமாண்டமாக அமைய வேண்டும்' என்று இந்திரன் நினைத்தான்.

உடனே அவன் தேவதச்சரான விஸ்வகர்மாவை அழைத்தான். உத்தரவு போட்டான். விஸ்வகர்மா தனது உதவியாளர்களையெல்லாம் அழைத்து ஒன்று சேர்த்து படாத பாடுபட்டு பிரமாண்டமான அரண்மனை ஒன்றைக் கட்டினார். அதைக் கட்டி முடிக்க ஆயிரம் வருடங்கள் ஆனது. தேவேந்திரன் அரண்மனையைப் பார்த்தான் ஆனால் திருப்தியடையவில்லை.

''என் அந்தஸ்துக்கு இது மிகவும் சாதாரண கட்டடம் இதைவிட இன்னும் பெரியதாகக் கட்டு!'' என்றான். தேவதச்சர் திணறிப் போய்விட்டார். அவரால் அதற்கும் மேலே பேசமுடியவில்லை. ''என்ன செய்யலாம்?'' என்று யோசித்து நாரதரிடம் சென்று, அவர் காலில் விழுந்தார். ''நீங்கள்தான் என்னை இந்தப் பிரச்சினையிலிருந்து காப்பாற்ற வேண்டும்'' என்றார்.

நாரதரும் யோசித்து, ''சரி கவலைப்படாதே! என்று ஆறுதல் கூறி தேவதச்சரை அனுப்பி வைத்தார். பின்னர் நாரதர் இந்திரனிடம் சென்று, அவன் கட்டிய அரண்மனையினைப் பார்த்தார். இந்திரன் நாரதரிடம், ''இது போன்று பெரிய அரண்மனையை நீங்கள் இதுவரைக்கும் எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா? என்று மிகவும் பெருமையாகக் கேட்டான்.

''நான் பார்த்ததில்லை. ஆனால் என்னைவிட வயதில் மூத்தவர் மகரிஷி லோமேசர். அவர் ஒரு வேளை பார்த்திருக்கிறாரோ தெரியவில்லை.'' என்றார் நாரதர்.

உடனே மகரிஷி லோமேசரை நினைத்து இந்திரன் தியானம் செய்தான். இடையில் ஒரு துண்டு, கையில் ஒரு கமண்டலம்.. இவற்றுடன் மகரிஷி லோமேசர் தோன்றினார். அவரது தலையிலே ஒரு பாய் இருந்தது. ''எதற்கு தலையில் இந்தப் பாய்?'' என்று இந்திரன் லோமேசரிடம் கேட்டான்.

என்னைப் போன்ற அற்ப ஆயுள் கொண்ட ஒரு ஜீவன் தனியாக வீடு கட்டிக் கொண்டு திண்டாட வேண்டுமா? இந்தப் பாய்தான் ஒரு வீடுபோல் இருந்து எனக்கு நிழல் கொடுக்கின்றது'' என்றார் அவர். ''என்ன! உங்களுக்கு அவ்வளவு குறைவான ஆயுளா?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டான் இந்திரன்.

லோமேசர். ''இதோ பார். என் மார்பில் ஒரு பொற்காசு அளவுக்கு உரோமம் உதிர்ந்து விட்டது. எப்போது என் உடம்பிலுள்ள எல்லா உரோமங்களும் உதிர்ந்து விடுமோ அப்போது என் ஆயுள் முடியும்.

இந்திரன் எப்போது அந்த ரோமமெல்லாம் உதிரும்?'' என்றான்.

அதற்கு லோமேசர் ஒரு பிரமாவுக்கு 100 தேவ வருடம்.. ஒவ்வொரு தேவ வருடத்திற்கும் 365 தேவ நாள்கள். ஒவ்வொரு தேவநாளிலும் உன்னைப் போன்ற 14 இந்திரர்கள் தோன்றி மறைகிறார்கள்!'' இவ்வாறு லோமேசர் கூறியதைக் கேட்டதும் இந்திரன் ஆடிப்போய்விட்டான்.

''இவ்வளவு அதிகமான ஆயுளைக் கொண்ட இவரே, தமது ஆயுளை ''அற்ப ஆயுள்'' என்று சொல்லுகிறார். அவ்வாறிருக்கும் போது நான் என் ஆயுளைப் போய் பெரிதாக நினைத்துக் கொண்டு பிரமாண்டமான அரண்மனை கட்ட வேண்டும் என்று ஆசைப்படுகின்றேனே...! என்று நினைத்துக் கொண்டான். அதைத் தொடர்ந்து அவன் தேவதச்சரை அழைத்து ''எனக்கு வீடு கட்டினது போதும்!'' என்று கூறினான்.



அதனால் நாம் அனைவரும் எம்முடைய தேவைக்கேற்ப ஆசைப் படுவதுதான் நியாயம்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இணையத்தினூடாக புலம்பெயர்ந்தோரை ஒன்றிணைக்கும் புற்றளை ச.ச. நிலையம்



(கடந்தவாரத் தொடர்ச்சி......)

கர்ணன்

புற்றளை சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி புற்றளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற போது 46 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் த.பாலகிட்ணபிள்ளையே மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக இ.சிறிதரனும், பொருளாளராக மா.சண்முகலிங்கமும் தெரிவானார்கள்.

இந்தச்சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்கு இதுவரை காலமும் ஒத்துழைப்பு வழங்கிய உறுப்பினர்களுக்கு தலைவர் நன்றி தெரிவித்தார். அத்துடன், சனசமூக நிலையம் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் செல்ல உறுப்பினர்கள் தொடர்ந்து தங்களாலான முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பரமேஸ்வரி யோகராசா விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில், எதிர்பாராத சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு சனசமூக நிலையம் தயாராக இருக்க வேண்டும். அத்துடன் சிரமதானம் மூலம் அபிவி ருத்திப்பணிகளை முன்னெடுக்க சனசமூக நிலையம் முன்வரவேண்டும்.

சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்குத் தேவையான அதாவது திணைக்களத்தால் வழங்கக்கூடிய உதவிகளைப் பெற்றுத் தரத் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருந்தார். சனசமூக நிலையத்துக்குத் தினமும் பத்திரிகைகளை இலவசமாக வழங்குவோருக்கு பற்றுச்சீட்டுக்களை வழங்கி, அந்த நிதி தொடர்பான விவரங்களை சனசமூக நிலையக் கணக்குப் பட்டியலில் சேர்த்துக் கொள்வதென குறித்த யாப்பில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி நடைபெற்ற சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில், தளபாடக் கொள் வனவு உள்ளிட்ட சனசமூக நிலைய அபிவிருத் திக்கென தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரொக்கமாக 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தனர்.

புலம்பெயர் நாட்டைச் சேர்ந்த புலோலி அபிவிருத்தி மன்றம் மற்றும் அரச உதவியுடன் கட்டி முடிக்கப்பட்ட புற்றளைச் சனசமூக நிலையத்தின் புதிய மாடிக்கட்டடம் 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி அப் போதைய பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட சனசமூக நிலையத்தில் மேலும் சில அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்ள யாழ் மாவட்டத்தின் மேம்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நிலையம் கோரிக்கை விடுத்திருந்தது. அதனைத்தொடர்ந்து, பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா மேற்படி சனசமூக நிலையத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

அந்த நிதியில் இருந்து சனசமூக நிலையத்துக்குத் தேவையாக இருந்த சுமார் 25 பின்னல் கதிரைகளும், இரண்டு புத்தக அலுமாரிகளும், 2 இரும்பு அலுமாரிகளும் ஓர் அலுவலக மேசையும் மிகுதிப்பணத்துக்கு பிளாஸ்ரிக் கதிரைகளும் கொள்வனவு செய்யப்பட்டன. இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களில் ஓர் அலுமாரி புற்றளை சித்திவிநாயகர் முன்பள்ளி சனசமூக நிலையத்தால் வழங்கப்பட்டது.

சனசமூக நிலையம், முன்பள்ளி ஆகியவற்றின் தொடர் அபிவிருத்தி கருதி, புலம்பெயர் நாடுகளிலிருந்து விடுமுறைக்கென சொந்த ஊருக்கு வந்து எல்லோருடனும் கலந்துரையாடி அவர்களிடமிருந்து நிதிகளைப் பெற்றுப் பயன்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானம் 2009 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி நடை பெற்ற சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தளபாடக் கொள்வனவு உள்ளிட்ட சனசமூக நிலைய அபிவிருத்திக்கென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரொக்கமாக 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தனர். அதற்கு நிலையத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது. மேற்படி கூட்டத்தில் புலோலி கிழக்கு கிராம சேவையாளர் எஸ். கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

இந்தசனசமூக நிலையம் தனித்து இயங்காது மேற்படி கிராமத்தில் உள்ள ஏனைய அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து இயங்குவதன் மூலம் பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் உயர்ந்த நிலையைப் பெறுவதுடன் அபிவிருத்திக்கான நிதிகளையும் சுலபமாகப் பெற்றுக் கொள்ள முடியும் எனக் கூறியிருந்தார். மேற்படி கூட்டத்தில் சனசமூக நிலையத்தின் புதிய தலைவராக வீ.கணேசலிங்கமும் உப தலைவராக எஸ்.கணேஸ்குமாரும் செயலாளராக க.பிரணவனும், உப செயலாளராக மு.பிரதாப்பும் பொருளாளராக இ.மணிவண்ணனும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இந்தச்சனசமூக நிலையத்தால் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இணையத்தளம் சிறப்பாக இயங்கி வருகின்றது. அது புலம்பெயர் வாழ் இந்த கிராம மக்களுக்கும் கிராமத்திற்கும் இணைப்புப் பாலமாகச் செயற்பட்டு வருகின்றது. புலோலித் தமிழ் இளைஞர் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்ட புற்றளைச் சனசமூக நிலையம் முன்பள்ளி, புத்தகம் இரவல் வழங்கல், இணையச்சேவை ஆகிய சேவைகளை இந்த கிராம மக்களுக்கு வழங்கி, எதிர்காலத்தில் நற் பிரஜைகளை உருவாக்குவதற்கு கிராமிய அபிவிருத்திக்காகவும் அயராது பாடுபட்டு உழைத்து வருகின்றது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்சரிவு ஏற்பட்ட பகுதிகளிலிருந்து மக்களை வெளியேற்ற நடவடிக்கை

## தேசிய கட்டட ஆய்வு நிலையம் அறிவிப்பு

நுவரெலியா,ஜன.9

மண்சரிவுகள் ஏற்பட்டுள்ள பகுதிகளிலுள்ள 305 குடும்பங்களை உடனடியாக அங்கிருந்து வெளியேற்றி பாதுகாப்பான இடங்களில் குடியேற்ற உடனடியாக நடவடிக்கையில் இறங்க வேண்டும் என்று தேசிய கட்டட ஆய்வு நிலையம் அறிவித்துள்ளது.

தமது அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நிலையத்தின் மண்சரிவு ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் ஆர்.எம். எஸ். பண்டார தெரிவித்தார்.

**மாத்தளை, கண்டி ஆகிய பகுதிகளிலேயே அதிகள வான குடும்பங்களை வெளியேற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.**

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாத்தளை, கண்டி, குருநாகல், பதுளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சிலர் ஏற்கனவே மண்சரிவு ஏற்பட்ட பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்

மண்சரிவு அபாயம் நிலவுகின்றமை உறுதிசெய்யப்பட்ட ஐந்து மாவட்டங்களிலுள்ள சுமார் 150 இடங்களில் தேசிய கட்டட ஆய்வு நிலையம் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தது.

மாத்தளை, கண்டி ஆகிய பகுதிகளிலேயே அதிகளவான குடும்பங்களை வெளியேற்றவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் பாத்தஹேவாஹெட்ட, மாத்தளை மாவட்டத்தின் இரத்தோட்டை ஆகிய பகுதிகள் மண்சரிவு அபாயம் அதிகமுள்ள பிரதேசங்களாக இனங்காணப்பட்டுள்ளன.

அந்தப் பகுதிகளில் மீண்டும் கட்டடங்களை நிர்மாணிப்பது உகந்ததல்ல.

மண்சரிவால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் மீண்டும் குடியமர்த்தப்படும் பகுதிகளின் பாதுகாப்புக் குறித்து ஆய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் ஆய்வு நடவடிக்கைகளை நிறைவு செய்ய முடியும்.-என்றார். (ச)

## வெள்ளத்தில் சிக்குண்டு மூவர் சாவு

பதுளை,ஜன.9

பதுளை, வெலிகேமுல்ல ஆறு பெருக்கெடுத்ததை அடுத்து வெள்ளப்பெருக்கில் சிக்குண்டு மூவர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் தாய் (வயது-37), அவருடைய மகள் (வயது-8) ஆகியோர் உள்ளடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட தாய், மகள் ஆகியோரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக பதுளை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன என்று பதுளை பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர் பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)



மூதூரில் புதிதாக அமைக்கப்பட்ட சர்வதேச தனியார் பாடசாலையை கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திறந்துவைத்தார்.

## பொதுமக்களை அன்புடன் வரவேற்று தேவைகளை நிறைவேற்றிக் கொடுங்கள்

### சப்ரகமுவ மாகாண ஆளுநர் வேண்டுகோள்

இரத்தினபுரி,ஜன.9

அரச அலுவலகங்களுக்கு தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவதற்காக மக்களை அன்புடன் வரவேற்று, அவர்களின் தேவைகளை செய்து கொடுப்பதே அரச சேவையாளர்களின் கடமையாகும்.அதை அரச சேவையாளர்கள் சரியாகக் கடைபிடிக்க வேண்டும்.

இவ்வாறு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டபிள்யு. ஜே. எம். லொக்குபண்டார வலியுறுத்தியுள்ளார்.

சப்ரகமுவ மாகாண சபையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்காகவே கிழமை நாள் ஒதுக்கப்பட்டுள்ளது. புதன்கிழமை நாளில் பொதுமக்கள் தமது தேவைக்கு அரச அலுவலகங்களுக்கு வருகின்றனர். அன்றையதினம் அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பது அரச சேவையாளர்களின் கடமையாகும்.

அதை சரியாகச் செயற்படுத்துமாறு ஜனாதிபதி எமக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

எனவே புதன்கிழமைகளில் அரச சேவையாளர்கள் விடுமுறைகளைப் பெறாமல் கட்டாயம் தமது அலுவலகங்களில் கடமையாற்ற வேண்டும். புதன்கிழமை நாள்களில் விடுமுறை பெறவேண்டுமானால் விடுமுறை பெறும் சேவையாளர்கள் தமது பொறுப்பை மற்றொருவரிடம் ஒப்படைத்துச் செல்ல வேண்டும்.

சம்பந்தப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு பொது மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தேடி வரும்போது அவர் விடுமுறை பெற்றுள்ளார். அவர் வரமாட்டார் என்று மக்களை திருப்பி அனுப்ப வேண்டாம். கட்டாயம் விடுமுறையில் செல்லும் அதிகாரியின் சகல ஆவணங்களையும் அவர் விடுமுறையில் செல்வதற்கு முன்பு மற்றவரிடம் ஒப்படைத்துச் செல்ல வேண்டும்.

அலுவலக வேலை நேரங்களில் அரச உத்தியோகத்தர்கள் பொது மக்களின் தேவைகளை முடிந்தளவு சிறந்த முறையில் செய்து கொடுக்க வேண்டும்.-என்றார். (ச)

## போகம்பரையில் சுதந்திரதின விழா

கண்டி,ஜன.9

இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினத்தை கண்டி, போகம்பரை மைதானத்தில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி கொண்டாடுவதற்கு கண்டி மாவட்ட அரச அதிபர் காமினி செனவிரட்ண தலைமையிலான குழு தீர்மானித்துள்ளது.

சுதந்திர தின விழா ஏற்பாட்டுக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கண்டி செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் அரச திணைக்களங்களின் அதிகாரிகள் மற்றும் முப் படைகளின் மத்திய பிராந்தியத்துக்குப் பொறுப்பான கட்டளை அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினத்தை நினைவுகூரும் பொருட்டு 65 தேசியக் கொடிகளை ஏந்திய மாணவர்களின் விசேட அணிவகுப்பை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச)

## முஸ்லிம்கள் மீதான நெருக்கீடுகளை பேரினவாத அமைப்புகள் நிறுத்தவேண்டும்

### உதுமாலெப்பை வலியுறுத்து

மட்டக்களப்பு,ஜன.9

பேரினவாத அமைப்புகளால் முஸ்லிம்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் நெருக்கீடுகள் நிறுத்தப்பட வேண்டும் .

இவ்வாறு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வை வலியுறுத்தியுள்ளார்.

**நாட்டை நேசிக்கின்ற ஒவ்வொருவரும் வரலாற்றுப் புரிந்துணர்வுடனும், சமூக ஒற்றுமையுடனும் வாழவே விருப்பம் கொண்டுள்ளனர்.**

முஸ்லிம்களை இலக்கு வைத்து சில பேரினவாத அமைப்புகள் அண்மைக் காலமாக மேற்கொண்டு வரும் விஷமத்தனமான நடவடிக்கைகளை கடுமையாகச் சாடியுள்ளார் அவர்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாடு பல்லின சமூக மக்கள் வாழும் சுதந்திரத் தேசமாகும். ஒவ்வொரு சமூகமும் அச் சமூகம் சார்ந்த சமூக, சமய, கலை, கலாசாரப் பண்பாட்டு விடயங்களை மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படாதவகையில் சுதந்திரமாகப் பின்பற்ற உரிமையுடையவர்கள். இந்த விடயங்கள் இலங்கையின் அரசமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறான நிலையில் ஓரிரு பேரினவாத அமைப்புகள் அண்மைக் காலமாக முஸ்லிம்களின் வழிபாட்டுத் தலங்கள்மீது தாக்குதல் , முஸ்லிம்களின் சமய விடயங்களில் தலையிடுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவது கண்டிக்கத்தக்கது.

நாட்டை நேசிக்கின்ற ஒவ்வொருவரும் வரலாற்றுப் புரிந்துணர்வுடனும், சமூக ஒற்றுமையுடனும் வாழவே விருப்பம் கொண்டுள்ளனர். அவர்களின் அத்தகைய நல்லெண்ணத்தைப் புதைகுழியில் தள்ளிவிடும் வகையில் ஓரிரு பேரினவாத அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன.

இந்த நாட்டை ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடாக மாற்றியமைக்கும் வேலைத் திட்டங்களை ஜனாதிபதி முன்னெடுத்துவருகிறார். ஆனால் இத்தகையவர்களின் விரும்பத்தகாத நடவடிக்கைகள் அத்திட்டங்களை முன்னெடுப்பதற்குத் தடையாக அமையும். இந்த அமைப்புகளின் முஸ்லிம்கள் மீதான நெருக்கீட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும்.

இந்த விடயத்தில் முஸ்லிம் மக்கள் பொறுமை காப்பதுடன் நிதானமாகச் சிந்தித்துச் செயற்படவேண்டும்.- என்றார். (ச.)

## 4 கடைகளில் திருட்டு

### பொகவந்தலாவையில் ஆர்ப்பாட்டம்



ஹற்றன்,ஜன.9

பொகவந்தலாவை நகரிலுள்ள நான்கு வர்த்தக நிலையங்களில் இடம்பெற்றுள்ள திருட்டுச் சம்பவங்களைக் கண்டித்து கடை உரிமையாளர்கள் அந்த நகரின் மத்தியில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மூடிய கடைகளில் நான்கு கடைகள் உடைக்கப்பட்டுள்ளன. அந்தக் கடைகளில் திருடியவர்களை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நகைக்கடை, இரு பலசரக்குக்கடைகள் உட்பட நான்கு கடைகளில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை வேளையில் திருட்டுப் போயுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதையும் திட்டமிட்டு செய்வது நல்லது. சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விடயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள்.

**இடபம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரியும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிட்டும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளிவான முடிவுகளை எடுத்து அருகிலிருப்பவர்களை அசத்துவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு அதிகரிக்கும். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.

**கடகம்:** பணவரவு திருப்திகரமாக இருக்கும். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகளை முறியடிப்பீர்கள். தந்தைவழிச் சொத்திலிருந்த பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**சிங்கம்:** நீண்ட நாள்களாக மனதளவில் இருந்துவந்த பிரச்சினைகளுக்கு இன்று முடிவுகட்டுவீர்கள். பிள்ளைகளின் உடல்நிலை சீராக இருக்கும். உத்தியோகத்தில் மதிப்பு கூடும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**கன்னி:** மனநிறைவுடன் காணப்படுவீர்கள். சகோதர, சகோதரிகளால் நன்மையுண்டு. உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். பால்ய நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் மிகுதிகளை அதிரடியாக செயற்பட்டு திரும்பப் பெறுவீர்கள்.

**நாளை**

மார்கழி -26 வியாழக்கிழமை 10.01.2013
திதி: சதுர்த்தசி பி.இ 04.06 வரை
நட்சத்திரம்: மூலம் பி.இ 01.45
சுபநேரம்: 08.03- 09.33 வரை
ராகுகாலம்: 02.03- 03.33 வரை

**துலாம்:** மறைமுகப் போட்டிகளுக்கு பதிலடி கொடுப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுண்டு. பிரபங்களின் உதவி கிடைக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். அதிகம் பேச வேண்டாம். வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத்துழைப்பு குறையும். உத்தியோகத்தில் யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**தனுசு:** சில வேலைகளை அலைந்து, திரிந்து முடிக்க வேண்டி வரும். உறவினர்கள், நண்பர்களுடன் மனத்தாங்கல் ஏற்படும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள்.

**மகரம்:** சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயற்படுவதன் மூலம் காரியங்கள் வெற்றியடையும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். வியாபாரத்தில் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிட்டும்.

**கும்பம்:** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். நண்பர்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். சகோதர வகையில் நன்மை கிட்டும். அரசால் அனுகூலம் உண்டு.

**மீனம்:** வெளிப்படையான பேச்சால் சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி கிட்டும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | 2 | 3 | | 5 | | |
| 9 | | | 6 | | | 1 | | 3 |
| 3 | 1 | | | | | 8 | | 2 |
| 5 | | 3 | | | | 4 | 9 | |
| 4 | 2 | | | | | | 5 | 8 |
| | 8 | 9 | | | | 3 | | 6 |
| 8 | | 4 | | | | | 1 | 5 |
| 2 | | 1 | | | 4 | | | 7 |
| | | 7 | | 8 | 9 | | | 4 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1 | 2 | 9 | 4 | 7 | 6 | 5 | 8 |
| 5 | 7 | 8 | 3 | 2 | 6 | 1 | 4 | 9 |
| 4 | 6 | 9 | 8 | 1 | 5 | 3 | 7 | 2 |
| 7 | 5 | 3 | 1 | 9 | 4 | 2 | 8 | 6 |
| 6 | 2 | 1 | 5 | 3 | 8 | 4 | 9 | 7 |
| 8 | 9 | 4 | 6 | 7 | 2 | 5 | 3 | 1 |
| 1 | 3 | 7 | 2 | 5 | 9 | 8 | 6 | 4 |
| 2 | 4 | 6 | 7 | 8 | 3 | 9 | 1 | 5 |
| 9 | 8 | 5 | 4 | 6 | 1 | 7 | 2 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# உடனடி வேலை வாய்ப்பு

DMI அமெரிக்க நிறுவனத்தின் இலங்கையின் வடக்கில் ஆரம்பிக்கப் படவிருக்கும் 5 புதிய கிளைகளுக்கு 50 புதிய வெற்றிடங்கள்

- Manager
- Supervisor
- Asst. Manager
- Customer Service

(O/L, A/L படித்த இளைஞர், யுவதிகளுக்கு)
பயிற்சியின் போது (10,000/=-15,000/=) பயிற்சியின் பின் 35,000/= இக்கு மேல்.
யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு,கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு முக்கியத்துவம்.
தங்குமிட வசதியுண்டு.
(28081)(5-6-7)

தொ.பே: 077 621 9536, 075 279 2175


# சட்டவிரோத மண் அகழ்வு அரியாலை மக்கள் விசனம்

கொழும்புத்துறை,ஜன.9

அரியாலைப் பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வு இரவு வேளைகளில் தொடர்வதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

செய்கை பண்ணப்படாத வயற்காணிகள் மற்றும் பாராமரிப் பில்லாத தனியார் காணிகளில் இடம் பெறும் சட்டவிரோ தமான மணல் அகழ் வால் பயிர்ச் செய்கை நிலங்கள், காணிகள் என்பன பயன் படுத்த முடியாத அளவுக்கு குழிகளாக காணப் படுகின்றன.

சில இடங்களில் கடல்நீர் உட்புகும் அபாயம் தோன்றியுள் ளதாகவும் சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். நள்ளிரவு வேளை யில் நடைபெறும் மண் திருட்டைத் தடுக்க எவரும் இல் லையா? என்று மக்கள் கேள்வி எழுப்பு கின்றனர்.

சுரங்கவியல் கனிய வள அமைச்சு, பொலிஸார், நல்லூர் பிரதேச சபை என்பன இவ்விடயத்தில் கவனமெடுத்து தரைத்தோற்றம், சூழல் சிதைவுறுவதைத் தடுக்க முன்வர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அண்மையில் இவ்வாறு சட்ட விரோதமாக இரவு நேரம் மண் ஏற்றி வந்த வாகனத்துடன் மோட்டார் சைக்கிளில் வந்தவர் [illegible] தக்கது. (வ-135)


# கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி நகராட்சிமன்ற முகாமைத்துவ உதவியாளரும், சங்க உறுப்பினருமான **அ.சதீஸ்** அவர்களின் பாசமிகு தந்தையார்

## வை. அரியரத்தினம்

அவர்கள் 07.01.2013 அன்று இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.
(சி/2873) (6.7.4)

சாவகச்சேரி நகராட்சி மன்ற ஊழியர் நலன்புரிசங்கம்.

# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை சேதுலிங்கம்

(ஓய்வுபெற்றஅஞ்சல் அதிபர்)



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஒய்வுபெற்ற அஞ்சல் அதிபர் சி.சேதுலிங்கம் 07-01-2013 திங்கட் கிழமை கொட்டாஞ்சேனை யில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான திரு.திருமதி சிதம்பரப்பிள்ளை சீவரத்தினத்தின் மகனும், ஜெகதாம்பிகையின் அன்புக் கணவரும் ஸ்ரீகாந்த், ஸ்ரீதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பெரிய பிள்ளை (இராசம்) மற்றும் சாவித்திரி (சரசு), காலஞ்சென்றவர்களான சிங்காரவேலு, வள்ளியம்மாள், திருநாவுக்கரசு மற்றும் சிவராஜா, துளசி, சுலோசனா, சத்தியபாமா ஆகி யோரின் அன்புச் சகோதரரும், அகல்யா, தேவேந்திரன் ஆகியோரின் மாமனும், நிரூபன், டிலான், யதுஷா, சோபி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொறளை ஜெயரட்ன மலர்சாலையில் வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக இன்று (09.01.2013) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பொறளை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: மனைவி, மருமகள்
தொடர்பு: 0112 387326, 071 8605658
(28105)
(2.6.7)

# மரண அறிவித்தல்

## கனகரட்ணம் இராஜேந்திரம்

(ஓய்வுபெற்ற பிரதேச தபால் அத்தியட்சகர்) (Divisional Superitendent of Post Offices)



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட கனகரட்ணம் இராஜேந்திரம் 06.01.2013 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம்- நவரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம்-சிவகாமசுந்தரி தம்பதியரின் அன்பு மருமகனும் அழகானந்தசுந்தரியின் பாசமிகு கணவரும், சுமதி(U.K.), லோகேந்திரா (சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கொழும்பு பல்கலைக்கழகம்), ஸ்ரீதர் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), மதிவதனி (USA), சுந்தரவதனி(U.K.) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இரவீந்திரராஜா (U.K.), முரளிதரன் (USA), பிரபாகரன்(U.K.), சிவமதி, நிலானி (ஆஸ்திரேலியா)ஆகியோரின் மாமனும், சுஜீதன், துவாரகன், சஞ்சீவன்,பிரதீப், அபினேஷ்,நிரஞ்சன், நிவேதா,பத்மினி, மதுரா,பிரவீனா, சுஹாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி,நடராசா, குணசிங்கம் மற்றும் புவனேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற புண்ணியபுவிராஜசிங்கி மற்றும் இந்திராணி, பேரின்பநாயகி,குணரட்ணம், காலஞ்சென்றவர்களான திரிபுரசுந்தரி, சிவானந்தசுந்தரம், கமலசுந்தரி மற்றும் அழகானந்தசுந்தரம்(கனடா), தெய்வசுந்தரி, முத்துச்சாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2013)புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3.00மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வசந்தம்
[illegible] ஒழுங்கை,
பருத்தித்துறை.

(சி/5436)(5-6-7)

தகவல்:
மகன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாகப் பதிவுக் கட்டணம்; சிங்கள மக்களுக்கு பாதிப்பு

### தேசிய சங்க சம்மேளனம் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.9
விவாகப் பதிவுக் கட்டணத் திருத்தத்தில் சிங்கள மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று தேசிய சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

சிங்களவர்கள் திருமண பந்தத்தில் இணைந்து கொள்ளும்போது பதிவுக் கட்டணமாக 5000 ரூபா செலுத்த வேண்டியுள்ளது. எனினும் முஸ்லிம் இனத்தவர்களின் திருமணங்களின் போது 1500 ரூபா மட்டுமே பதிவுக் கட்டணமாக அறவீடு செய்யப்படுகின்றது.

விவாகப் பதிவு தொடர்பான கட்டணங்களில் ஏற்றத் தாழ்வு காணப்படுகின்றது என்று தேசிய சங்க சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

விவாகப்பதிவுத் திணைக்களத்துக்கு வெளியே முஸ்லிம் தம்பதியினர் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டால், கட்டணம் எதனையும் செலுத்த வேண்டியதில்லை. எனினும், சிங்களவர்கள் அவ்வாறு திருமண பந்தத்தில் இணைந்தால் 3500 ரூபா மேலதிகமாக செலுத்த வேண்டியுள்ளது என்று தேசிய சங்க சம்மேளனம் கூறியுள்ளது.

நாட்டில் உள்ள அனைத்து பிரசைகளுக்கும் ஒரேவிதமான சட்டங்களை நடைமுறைப் படுத்த வேண்டியது அவசிய மானது என்று தேசிய சங்க சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது. (ச)

## ஷிராணிக்கு எதிரான குற்றப் பிரேரணை:

# அரசமைப்பை எந்த விதத்திலும் மீறாமல் அரசு நடவடிக்கை

### கெஹலிய பி.பி.சிக்கு தெரிவிப்பு

கொழும்பு,ஜன.9
பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவி நீக்குவதற்கான குற்றப் பிரேரணை நடைமுறைகளில் ஒருபோதும் அரசமைப்புக்கு புறம்பான வகையில் செயற்படவில்லை.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் பிபிசி தமிழோசையிடம் மேலும் தெரிவித்ததாவது:-

தொடர்ந்து அரசமைப்பின் பிரகாரமே குற்றப் பிரேரணை தொடர்பான நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்கவுள்ளது.

சுதந்திரத்துக்குப் பின்னரான வரலாற்றில் உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளை பதவி நீக்குவதற்கு கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ள நடைமுறைகளையே அரசு இதுவரை கடைப்பிடித்துள்ளது. அதற்குப் புறம்பாகச் செயற்படவில்லை.

அரசைப் போல சபாநாயகரும் அரசமைப்பின்படி அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளார்.

இதேவேளை, தலைமை நீதியரசர் மீதான நாடாளு மன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையை ஆராய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள சுயாதீனக் குழு ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கவுள்ளது.

தெரிவுக்குழு அறிக்கையின் படி ஜனாதிபதி எடுக்கின்ற முடிவு குறித்து அவரால் திருப்தியடைய முடியுமா என்பதை ஆராய்வதற்காக இந்தக் குழு ஆலோசனை வழங்கவுள்ளது.-என்றார். (ச)



சட்டக்கல்லூரிக்கு மோசடியான முறையில் மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகக் கண்டித்து நேற்று முன்தினம் இலங்கை சட்டக்கல்லூரிக்கு முன்பாக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளையில்...

# நீதிமன்றின் தீர்ப்பு சரியானதே

### சிறிநாத் பெரேரா தெரிவிப்பு

கொழும்பு,ஜன.9
மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பு சரியானது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் சிறிநாத் பெரேரா தெரிவித்தார்.

பிரதம நீதியரசருக்கு எதிராக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை ரத்துச் செய்வதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்திருந்தது என்று அவர் கூறினார்.

அதிகாரமற்ற குழுவொன்றினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருந்தது. நல்லாட்சி குறித்து பேசும் அரசு இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

நீதிவான் ஒருவர் குற்றம் இழைத்திருந்தால், அது தொடர்பில் சுயாதீனமான ஆணைக்குழு ஒன்றை நிறுவி அதன் மூலம் விசாரணை நடத்த வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச)

# பிரதம நீதியரசரை நீக்கும் முழு அதிகாரமும் எனக்கே!

### பிரச்சினைக்கு ஜனநாயக ரீதியில் தீர்வு என்கிறார் ஜனாதிபதி



கொழும்பு,ஜன.9
பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பணி நீக்கம் செய்யும் அதிகாரம் எனக்கே உள்ளது- என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற ஆளும் கட்சி உறுப்பினர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரச்சினைக்கு ஜனநாயக ரீதியில் தீர்வு காண்பதே எனது நோக்கம்.

அரசமைப்பில் ஜனாதிபதிக்கு காணப்படும் அதிகாரங்களின் அடிப்படையில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைத்து விவாதம் நடத்த வேண்டிய அவசியமில்லை.

இடதுசாரிக் கட்சிகள் ஆளும் கட்சியில் அங்கம் வகித்து வருகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நம்பிக்கைக்குப் பாத்திரமாக அவர்கள் செயற்படுவார்கள் என நம்புகிறேன்-என்றார். (ச)

# குற்றவாளிகள் சுதந்திரமாகத் திரிகின்றனர்; நாட்டில் புதிய அரசியல் கலாசாரம்

### கண்டிக்கிறது சுதந்திர ஊடக அமைப்பு

கொழும்பு,ஜன.9
நாட்டில் குற்றவாளிகள் சுதந்திரமாகத் திரிகின்றனர் என்று சுதந்திர ஊடக அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக பிரதம ஆசிரியர் அமரர் லசந்த விக்ரம துங்கவை படுகொலை செய்த இனந் தெரியாத துப்பாக்கிதாரிகள் இன்னமும் சுதந்திரமாகச் சுற்றித்திரிகின்றனர் என்று சுதந்திர ஊடக அமைப்புத் தெரிவித்துள்ளது. ஊடக அடக்கு முறைக் கலாசாரம் தொடர்ந்து நீடிக்கப்பட்டு வருகிறது.

அரச அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வாறான குற்றச் செயல்களினால் குற்றவாளிகள் சுதந்திரமாகச் சுற்றித்திரிகின்றனர்-

இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் களனிப் பிரதேச சபை உறுப்பினர் ஹசித்த மடவல சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். மாற்றுக் கருத்துக்களை வெளியிடும் தரப்பினர், நீதிவான்கள், சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் அச்சுறுத்தக் கூடிய அதிகாரமும் பலமும் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது- என்றும் சுதந்திர ஊடக அமைப்பு தெரிவித்துள்ளது. (ச)

## சட்டக் கல்லூரி மாணவர் பதிவு ஒத்திவைப்பு

இலங்கை சட்டக் கல்லூரியின் 2013ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர் பதிவு ஒரு வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று சட்டக் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

2013ஆம் ஆண்டுக்கான மாணவரை பதிவு செய்யும் நடவடிக்கை நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவிருந்தது.

இந்நிலையில் சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சையில் ஏற்பட்ட சர்ச்சை காரணமாக ஒருவார காலத்துக்கு சட்டக் கல்லூரியின் புதிய மாணவர் பதிவு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்டக் கல்லூரிக்கு மோசடியான முறையில் தமிழ்பேசும் மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் இணைக்கப்பட்டுள்ளனர் என்ற காரணத்தை முன்வைத்தே இலங்கை சட்டக் கல்லூரிக்கு முன்பாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (ச)

## அநுராதபுரத்தில் பல பகுதிகள் நீரில் மூழ்கின



அநுராதபுரம்,ஜன.9
சீரற்ற காலநிலை காரணமாக அநுராதபுரத்தில் பல பகுதிகள் நேற்றுசெவ்வாய்க்கிழமை மீண்டும் நீரில் மூழ்கியுள்ளன.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் முதல் பெய்து வரும் தொடர்ச்சியான மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் அநுராதபுரம், புளியங்குளம் பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. (ச)

# ஹசித்த மடவல படுகொலை; சந்தேகத்தில் ஐந்து பேர் கைது

கொழும்பு,ஜன.9
களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித்த மடவல படுகொலையுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் பிரதான சந்தேகநபர் உட்பட 5 பேரை பொலிஸார் நேற்று செவ்வாய்க்கிழமை கைதுசெய்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 5பேரில் ஒருவர் வெளிநாட்டுக்கு தப்பிச்செல்ல முற்பட்ட வேளையில், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார். (ச)

# மாகாண முதலமைச்சர்களுக்கு தீர்வையற்ற வாகனம்

கொழும்பு,ஜன.9
மாகாண முதலமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு தீர்வையற்ற வாகனங்களை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

மாகாண முதலமைச்சர்களுக்கு ஐம்பது லட்சம் ரூபாவுக்கும் அதிகமான வாகனமொன்றை கொள்வனவு செய்ய அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

[illegible] பினர்களுக்கு சுமார் 40 இலட்சம் ரூபா பெறுமதியான வாகனமொன்றை இறக்குமதி செய்ய அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை கடந்த 2 ஆம் திகதி [illegible] ர்களுக்கு [illegible] வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

# இலவசப் புத்தகங்களை விற்பனை செய்த ஆசாமி

### கம்பளையில் சிக்கினார் பொலிஸாரிடம்

கொழும்பு,ஜன.9
மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் பாடசாலைப் புத்தகங்களை பணத்துக்கு விற்பனை செய்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பளை - நுவரெலியா வீதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் இவ்வாறு புத்தகங்களை விற்பனை செய்த நபரே கம்பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். முதலாம் தரத்தில் இருந்து 11 ஆம் தரம் வரை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அச்சிடப்பட்ட 1050 புத்தகங்களே விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கம்பளை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கம்பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# After O/Levels...

*Only IT Diploma with an International Recognition!*



Join IT Diploma @ ESOFT

The Leader in Professional ICT Education

DiTEC INTERNATIONAL Diploma in Information Technology

Duration : 4 months 15% DISCOUNT

பெறுபேறுகளுக்கு முன்னர் இரு டிப்ளோமாக்களை பெற்றுக்கொள்ளுங்கள்

* *Payable in Installments*

**Other Diplomas**

DiWE Diploma in Web Engineering காலம் 6 மாதங்கள்
DiBM Diploma in Business Management காலம் 4 மாதங்கள்
DiE Diploma in English காலம் 4 மாதங்கள்
DiSE Diploma in Software Engineering காலம் 6 மாதங்கள்
DiHN Diploma in Hardware & Networking காலம் 4 மாதங்கள்
DiGD Diploma in Graphic Designing காலம் 4 மாதங்கள்

| புதிய பிரிவுகள் | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | உடுப்பிட்டி |
|---|---|---|---|---|
| | 12th & 16th Jan at 9.00 am | 12th & 16th Jan at 9.00 am | 12th Jan at 9.00 am | 15th Jan at 9.00 am |
| | 077 309 9308 | 077 990 5611 | 077 154 7677 | 021 320 1303 |

ESOFT Shaping Lives, Creating Futures.

**ESOFT Metro Campus**
**No 137 , K.K.S Road, Jaffna.**
**Tel: 021 222 4142 Hotline: 077 309 9 308**


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
17.11.1942



இறைவன் அடியில்
11.12.2012

## அமரர் சின்னையா பாலசுந்தரலிங்கம்

(ஓய்வுபெற்ற தபாலதிபரும், முன்னாள் புலோலி ப.நோ.கூ.சங்க கிளைக்குழு உறுப்பினரும்)

கடந்த 11.12.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சின்னையா பாலசுந்தரலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (09.01.2013 )புதன்கிழமை காலை 4.30 மணியளவில் புலோலி குரும்பைகட்டி ஞான வைரவர் கோயிலருகில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து வீட்டில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

அன்னார் நோயுற்ற வேளையில் மருத்துவ உதவிகள் புரிந்தோருக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து ஆறுதல் கூறியோருக்கும், தொலைபேசி,தந்தி மூலம் உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்,கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்குஞ், மேலும் பல வழிகளில் உதவிபுரிந்தோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரும் சமுகம் தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சோதிட நிலையம்,
மாயக்கை, தம்பசிட்டி,
பருத்தித்துறை.

(25595)(5.6.7)

**பிள்ளைகள்.**
தொ.பே.:021 226 3733

# மரண அறிவித்தல்



## அரியக்குட்டி செல்வரத்தினம்

காரைநகர், இலகடியைப் பிறப்பிடமாகவும், 55/11, இந்துக் கல்லூரி ஒழுங்கை,நீராவியடியை வதிவிடமாகவும் கொண்ட அரியக்குட்டி செல்வரத்தினம் (06 /01/2013) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அரியக்குட்டி- வள்ளியாச்சிதம்பியரின் மகனும், மகேஸ்வரி, செல்லாச்சி ஆகியோரின் சகோதரனும் ஞானக்கிளியின் கணவரும் யோகராணி,யோகராசா, ஸ்ரீஸ் கந்தராசா, தியகராசா, சிவராணி ஆகியோரின் தந்தையும் ராஜ்குமார், சுபாசினி, சிவனேஸ்வரி, அனுசுயா ஆகியோரின் மாமனும் ஜனார்த்தன், துஸாரா, கௌசல்யா, ஹரிஸ்ராம், அஸ்வின், சந் தோஷ், நிஷா, பிரசன்னா, பிரியங்கா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது காரைநகர் இல்லத்தில் நாளை (10.01.2013) வியாழக் கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பித்து, முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: யோகராசா(மகன்)
ஸ்ரீராம் எலக்ரோனிக்ஸ் யாழ்ப்பாணம் T.P0776048646.
இலகடி,காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத் துடன் கூடிய காலநிலை நிலவும்.

## வாராந்த சொற்பொழிவு

வடமராட்சி,ஜன.9

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த சொற்பொழிவு நடைபெறவுள்ளது. நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'மெய்ப்பொருள்' என்னும் தலைப்பில் இந்தச் சொற்பொழிவு இடம்பெறும். சொற்பொழிவை பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா நிகழ்த்துவார். (3-8)

# சண்டிலிப்பாயில் கடத்தப்பட்டவர் கொழும்பில் பொலிஸாரால் மீட்பு

கடந்த மாதம் சண்டிலிப்பாயிலுள்ள விடுதி ஒன்றில் வைத்து இரு ஓட்டோக்களில் கடத்திச் செல்லப்பட்ட குடும்பஸ்தர் இரு வாரங்களின் பின் கொழும்பில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

வைத்திய பரிசோதனைக்காக பொலிஸார் இவரை யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதித்தனர். பொலிஸார் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட இரு ஓட்டோக்களையும் கைப்பற்றினர். சந்தேகத்தின் பேரில் நால்வரைக் கைது செய்து மல்லாகம் நீதிவானிடம் முன்னிலைப்படுத்தினர். நீதிவான் இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

சாவகச்சேரியில் திருமணம் செய்து இரு பிள்ளைகளுக்குத் தந்தையான இவர் தற்போது அளவெட்டியிலுள்ள தனது சகோதரியுடன் வாழ்ந்து வருகிறார் என்று கூறப்பட்டது.

இவர் கடந்த மாதம் நண்பர்களுடன் வானில் சென்று சண்டிலிப்பாயிலுள்ள ஒரு விடுதி ஒன்றில் தங்கி இருந்தார். அங்கு இரு ஓட்டோக்களில் சென்ற எண்மர் தங்களை இராணுவத்தினர் என்று சிங்களமொழியில் அறிமுகப்படுத்தி குறித்த குடும்பஸ்தரை கடத்திச் சென்றிருந்தனர்.

இந்தக் கடத்தல் குறித்து மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடுசெய்யப்பட்டது. பொலிஸார் புலன் விசாரணைகளில் ஈடுபட்டனர். அவர்களுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொறுப்பதிகாரி மல்ஹமே தலைமையில் சென்ற குற்றத் தடுப்புப் பொலிஸ் அதிகாரி சந்தன சில்வா, கான்ஸ்டபிள்கள் ஹரிச்சந்திர, வசீபன், சமரசிங்க சுரவீர ஆகியோர் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட இரு ஓட்டோக்களையும் கைப்பற்றினர்.

சந்தேகத்தின் பேரில் நால்வரைக் கைது செய்து மல்லாகம் நீதிவானிடம் முன்னிலைப் படுத்தினர். நீதிவான் இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டுள்ளார்.

கடத்தப்பட்டு மீட்கப்பட்டவர் வைத்திய பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (3-115)



கடந்த கால போர் நடவடிக்கைகளால் முற்றாக சேதமடைந்திருந்த கொழும்புத்துறை துண்டி ஐயனார் ஆலயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்று வழிபாட்டுக்காக திறந்து விடப்பட்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்த இந்த ஆலயம் 15 வருடங்களின் பின்னர் திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-135)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன.9

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் தரம் 1 ஏபி பாடசாலையில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை தரம் 1, 2-1 ஐச் சேர்ந்த யாழ். மாவட்டத்துக்கு உட்பட்ட வலயங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னதாக மாகாணத் திணைக்களத்தில் மாதிரி விண்ணப்பப் படிவத்தைப்பெற்று விண்ணப்பிக்கலாம். என மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார். (3-14

## திறந்த பல்கலை போட்டிப் பரீட்சை

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தினால் பட்டமேற் கல்வி டிப்ளோமா 2013/2014 கல்வியாண்டுக்கான மாணவர்களைத் தெரிவு செய்யும் போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது. எதிர் வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்தப் பரீட்சை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது (3)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் மகேஸ்வரன் நினைவு தின நிகழ்வு

வடமராட்சி,ஜன.9

முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் யாழ்ப்பாணம், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் தி.மகேஸ்வரனின் நான்காம் ஆண்டு நினைவு தினம் தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

அன்னாரின் நினைவாக விசேட பூசை வழிபாடுகள், அன்னதானம் நடைபெற்றதுடன் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் ஆதரவற்றோருக்கு உதவிப் பொருள்களும் வழங்கப்பட்டன. அன்னாரின் நினைவு தினத்தில் உரையாற்றிய சந்நிதியான் ஆச்சிரமப் பொறுப்பாளர் சி.மோகனதாஸ் சுவாமிகள் அமரர் மகேஸ்வரன் ஒரு சமயப் பற்றாளர். அன்னார் இந்து கலாசார அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் அனைத்து சைவக் கோயில்களுக்கும் தாமாகவே முன்வந்து அனைத்து உதவிகளையும் செய்திருந்தார். செல்வச்சந்நிதி தேர் உருவாக்கத்தில் பெரும் பங்கு கொண்டதுடன் பூங்காவன மண்டபத்தையும் அமைத்துக் கொடுத்துள்ளார். மிகநெருக்கடியான காலகட்டத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு தேவைகள் அறிந்து அவர் செய்த பல்வேறு உதவிகளும் எம்மால் மறக்க முடியாதவை. இதற்கு அமைவாக ஆச்சிரமத்தின் வைத்திய சேவைக் கட்டடத்தை அமரர் மகேஸ்வரன் நினைவாக நிறுவி அவரை ஆச்சிரமம் நினைவு கூர்ந்து வருகிறது எனத்தெரிவித்தார். (3-8)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லஞ்ச முறைப்பாடுகள் இலங்கையில் அதிகம்

### லஞ்ச , ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு குற்றச்சாட்டு

இலங்கையில் லஞ்சம் பெறுவது குறித்து கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றன என்று லஞ்ச , ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அறிவித்துள்ளது. 2012 ஆம் ஆண்டில் மாத்திரம் லஞ்சம், ஊழல் பெற்றமை தொடர்பில் 3163 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று ஆணைக் குழுவின் பணிப்பாளர் லக்ஷ்மி ஜயவிக்ரம தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:- 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டில் லஞ்சம் பெற்ற சம்பவங்கள் அதிகமாகும்.

2012 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற லஞ்ச, ஊழல் முறைப்பாடுகளில் 440 முறைப்பாடுகள் கல்வித்துறை சம்பந்தப்பட்டவையாகும்.

பொலிஸ் துறை தொடர்பில் 318 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள் ளன.

லஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கடந்த ஆண்டு 147 தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், அதில் 77 தேடுதல்கள் வெற்றியளித்துள்ளன. அதன்போது 95 பேர் கைது செய்யப்பட்டனர். லஞ்சம் மற்றும் ஊழல் குறித்து 1954 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்கமுடியும்என்றார்.

# மரண அறிவித்தல்கள்

## அருணாச்சலம் திருநாவுக்கரசு

கட்டுவணைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாச்சலம் திருநாவுக்கரசு 07.01.2013 திங்கட்கிழமை காலமானார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாச்சலம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான யோகம்மா, அரியமலர் ஆகியோரின் சகோதரரும், இந்திராதேவியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான ஐயம்பிள்ளை, முருகேசு, சுபத்திரை, கனகரத் தினம், பூமணி, பூராசா மற்றும் இரத்தினம், தணிகாசலம் ஆகியோரின் மைத்துனரும், இரகுபதியின் சித்தப்பாவும், புணரஜனியின் மாமனாரும், சாரங்கி, ஜெனங்கி, பைரவி, ராகவி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.01.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

541/4,பருத்தித்துறை வீதி, நல்லூர்.
021 222 0036 (சி/5440)(2-6-7)

தகவல்:
**மனைவி.**

## தம்பு திலகராசா

(சாரதி,விசுவமடு விவசாயிகள் ப.நோ.கூ.ச.)



கைதடி நாவற்குழியைப் (மறவன்புலோ) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு திலகராசா 07.01.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-சரஸ்வதி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும், தர்சினி, லவநீதன், உஷாந்தினி, துஷாந்தினி, கஜிதா,ஐங்கரன், காலஞ்சென்ற திலக்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவசேயன், காலஞ்சென்ற ரவிசங்கர் ஆகியோரின் மாமனும், நிலவன், லக்சிகா ஆகியோரின் பேரனும், திலகவதி, தியாகேஸ்வரி, குமுதினி, தயாளதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கணபதிப்பிள்ளை காலஞ்சென்ற சிறிஸ்கந்தராசா மற்றும் குகநாதன், காலஞ்சென்ற குணம் ஆகியோரின் மைத் துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. ஒருமணியளவில் மறவன் புலோ ஒற்றைப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி, நாவற்குழி.
(மறவன்புலோ) (28114)(5-6-7)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## காசிநாதர்பிள்ளை சிவஞானம்
## (வர்த்தகர்)



காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும் 62/2, இந்துக்கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதர் பிள்ளை சிவஞானம் 07.01.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிநாதர்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சண்முகம் (இளைப்பாறிய அதிபர், முன்னாள் கிராம சபைத் தலைவர்)- சரஸ்வதி தம்பதியரின் மருமகனும் சரோஜினியின் அன்புக் கணவரும் மதிவதனி (கொழும்பு), வத்சலா (பண்டாரவளை), சிவகாந்தன் (பிரான்ஸ்), ரம்மியகலா (மனோஜ் எக்ஸ்பிறஸ் பிறைவேட் லிமிட்டெட் யாழ்ப்பாணம்), தினேஸ்சங்கர் (பொலிஸ் உத்தியோகத்தர் யாழ்ப் பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவரூபன் (S.R.Textiels Colombo), ரவிமோகன் (ரட்ணா ரேடர்ஸ் பண்டாரவளை) ஆகியோரின் அன்பு மாமனும், விபிசாவின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் தவமணி, காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், சிவபாக்கியம் மற்றும் சிவபாலன், சிவராசா, சிவலட்சுமி, சிவயோகம் (ஜேர்மனி) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் காலஞ்சென்ற மங்கையர்க்கரசி மற்றும் நித்தியானந்தம், பத்மாசனி, பாலசுப்பிரமணியம் (லண்டன்), புஸ்பராணி, காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, பாலசுப்பிரமணியம் (M.M.B) மற்றும் சாம்பவி (லண்டன்), புனிதவதி, கணேசன், ராசரட்ணம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், கந்தசாமி (இளைப்பாறிய நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் வடகிழக்கு), தெய்வானை, காலஞ்சென்ற பாலசிங்கம் (இளைப்பாறிய நீர்ப்பாசனத் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர்), சுசித்திராசதாசிவம் (இளைப்பாறிய அதிபர்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10.01.2013) வியாழக்கிழமைகாலை 7.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுபூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(28115)(2-6-7)

தகவல்:
மனைவி,பிள்ளைகள்,மரு[illegible]
0776327598 - 0212223336

62/2,இந்துக் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 1937.03.19 | மறைவு 2012.12.12

### திருமதி பத்மாவதி இரத்தினம்

அன்பின் திருவுருவாய் அமைதியின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் பாசத்தின் பொக்கிஷமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் ஊர்புகழும் உத்தமியாய்
பேர் புகழ வைத்த எம் தாயே இறைஞ்சுகின்றோம் இறைவனிடம்
நின் ஆத்மா சாந்திபெற

எமது தயாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (09.01.20313) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், நாளை மறுதினம் (11.01.2013) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் வீட்டுக் கிருத்தியமும் நடைபெறவுள்ளதால் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

செல்லாச்சியம்மையார் வீதி, சுன்னாகம்.
075 763 0228, லண்டன்.(0044 208 3971004) (28101)(5-6-7)

திரு. திருமதி வனசலோஜினி இராசகுலசிங்கம்


### யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்கபொதுக்கூட்டம்

நேற்றைய (08.01.2013) உதயனில் பக்கம் 4B யில் பிரசுரமாகிய மேற்படி விளம்பரம் செயலாளரால் வழங்கப்பட்டது என்பதை கவனத்தில் கொள்ளவும். (சி/5425) (6.7.4)

### Personal Class

35 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் தரம் 6-11 வரையான மாணவர்களுக்கு கணிதம், ஆங்கிலம் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு :M.A.N. அன்ரனி
B.Sc, Dip.in Ed.
077 6679430.
(6.7.4)

### வீடு வாடகைக்குத் தேவை

நல்லூர், திருநெல்வேலி, கந்தர்மடம், அல்லது யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசதியான வீடு வாடகைக்குத் தேவை.
வாடகை, முற்பண விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்
0718 692 692

### அறைகள் வாடகைக்குண்டு

யாழ். பல்கலைக்கழகம் அருகில் பலாலி றோட்டில் பல்கலைக்கழக மாணவர்கள் , உத்தியோகம் பார்க்கும் பெண்கள், கல்லூரி மாணவிகளுக்கு அறைகள் உடன் வாடகைக்கு உண்டு.
(பெண்கள் மட்டும்)
தொடர்பு: 021 222 7069,077 9300 148.
(78108) (6.7.4)

### பொருள்கள் குறைந்த விலையில்!

வீடுகளுக்கான மின்சார இணைப்பு வேலைகள்,நீர்க்குழாய் பொருத்தும் வேலைகளுக்கு நீங்கள் விரும்பும் வகையிலான பொருள்களைப் பயன் படுத்தி தரமான முறையில் செய்து தரப்படும்.பொருள்களுக்கு விசேட விலைக் கழிவும், குறைந்த கூலியுடனும் செய்து தரப்படும்.
தொடர்பு: 0773 413817.
(28112) (6.7.4)

### வீட்டுத்திட்ட உரிமையாளர்களே!

வீட்டுத்திட்ட உரிமையாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு தேவையான சிமெந்து,கம்பி,சீற் என்பன குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
வீடுகளுக்கு இலவசமாக விநியோகம் செய்து தரப்படும்.
★ நிபந்தனைக்கு உட்பட்டது.
தொடர்பு: 0773 413817.
(6.7.4)


## ஓராண்டு நினைவலைகள்



தோற்றம் 02.07.1959 | மறைவு 09.01.2012

### திருமதி தோமஸ் மரியரோசி (கட்டை)

கண்மூடி விழிக்கு முன்
கதைமுடிந்து போனதம்மா
ஊரே அழுதது அம்மா
உம் பிரிவைத் தாங்காது
உம் பிள்ளைகள் நாம் எப்படி ஆறுவோம்
நீ கொண்ட அன்பும்
நாம் கொண்ட தவிப்பும் ஆறாதம்மா

**குடும்பத்தினர்.**

இல.6, சென்.ஜேம்ஸ் மேற்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
(28113)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வைத்தி பிரான்சிஸ்

(ஓய்வுபெற்ற காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்)



நீதிமன்ற வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தி பிரான்சிஸ் (08-01-2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தி -யோகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை -மரியம்மாவின் அன்பு மருமகனும் மெற்றிலின் செல்வராணியின் அன்புக் கணவரும் எபிசொலின், (கபிரியேல் வைத்தியசாலை ,சுன்னாகம்) லில்லி எலிசா (கொழும்பு) அருள்தாஸ், கிஷாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் கிளட்வின் அவர்களின் மாமனாரும் ஹெரிஷன் லோட்டின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09-01-2013) புதன் கிழமை பி.ப. 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து, புனித சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீதிமன்ற வீதி, மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்
0770260407

## இளையதம்பி நல்லைநாதன்



வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவரும் வவுனியா பொலிஸ் நிலையத்தில் பிரதம லிகிதராகக் கடமையாற்றியவருமான இளையதம்பி நல்லைநாதன் நேற்று முன்தினம் (07.01.2013) திங்கட் கிழமை காலை காலமாகி விட்டார்.

அன்னார் கருணாவதியின் அன்புக் கணவரும் புங்குடுதீவைப் பிறப்பிட மாகவும் வண்ணார் பண்ணை ஜயனார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ் சென்றவர்களான இளையதம்பி- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் ஏழாலை மேற்கைச் சேர்ந்த காலம்சென்றவர்களான மாணிக்கம்- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரி, ஆனந்தநடராசா, வைத்திய கலாநிதி ரகுநாதன், வைகுந்த வாசன், கதிர்காமத்தம்பி, பத்மாவதி, நவமணி, புனிதவதி, பரமஞானம், ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சொக்கலிங்கம் மற்றும் பேரின்பநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2013) புதன்கிழமை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

பள்ளஞ்சீமா
ஏழாலை மேற்கு
ஏழாலை.

தகவல் :
ந. கருணாவதி
(மனைவி)

(28095)(6)

## சுப்பிரமணியம் சோதிலிங்கம்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், அல்லைப்பிட்டியை வதிவிடமாகவும் தற்போது கொக்குவிலை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சோதிலிங்கம் கடந்த 06.01.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தையல்நாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஏரம்பு- பறுவதம் தம்பதியரின் அன்பு மருமகனும், சறோஜினிதேவி (ஓய்வு பெற்ற முன்பள்ளி ஆசிரியை- வேலணை பிரதேச சபை), நாகராசா (லண்டன்), திலகவதி (லண்டன்), கோவிந்தராணி (ஆசிரியை- யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்), கமலாதேவி (ஜேர்மனி) மற்றும் காலஞ்சென்றவர்களான சதீஸ்குமார், றஞ்சித்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, வேதநாயகி, சிவக்கொழுந்து, மாணிக்கம், சிரோன்மணி மற்றும் சின்னம்மா ஆகியோரின் சகோதரரும், சுந்தரலட்சுமி, தவவிநாயகம், சிவலிங்கம், காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி, நாகம்மா ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான ஜெயகுணபாலன், கனகசபாபதி மறறும் வசந்தகுமாரி, கருணானந்தன், லிங்கேஸ்வரன் ஆகியோரின் மாமனும், சிவாஜினி, விமலேந்திரன், சிவரூபன், மணிமேகலா, பிரதீபா, முகுந்தன், கஜவதனன், அனித்தா, கஜேந்திரன், தமிழினி, சுஜீபா, சகிஜீவன், சிவப்பிரியன், அனோடன், யுவநீதா, மாதங்கி ஆகியோரின் அன்புப் பேரனும், கஜானன், வைஷ்னி, அனுஸ்னன், அனுஸ்கா, அஸ்மிதா, ஜபீசன், தருணயா, விபீஷ்ணா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2013) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

32, அச்சுக்கூட வீதி, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

# அம்பாறையில் ஓய்ந்தது மழை

### இயல்பு நிலைக்குத் திரும்பினர் மக்கள்

அம்பாறை,ஜன.9

அம்பாறை மாவட்டத் தில் கடந்த சில நாள்களாக இடைவிடாது பெய்த மழை நேற்று செவ்வாய்க் கிழமை குறைவடைந்துள்ளது. அதனால் மாவட்டத் தில் பல பிரதேசங்களிலும் பாதிப்படைந்திருந்த இயல்பு நிலை வழமைக்குத் திரும் பியுள்ளது.

தொடர் மழை காரண மாக பாடசாலை மாண வர்களின் கல்வி நடவ டிக்கை பாதிக்கப்பட்ட தோடு, பொதுச் சந்தைகள், வர்த்தக நிலையங்கள் ஆகிய வற்றுக்கு மக்களின் வருகை குறைந்தி ருந்தது. இதனால் சந்தைக ளில் அதிகளவான மரக்கறிகள் சேதமடைந் துள்ளன என்று வர்த்தகர் கள் தெரிவித்தனர்.

மழை குறைவடைந் ததை அடுத்து நேற்று பொதுச் சந்தைகள், வர்த்தக நிலையங்களில் மக்கள் நெரிசல் காணப்பட்டது.

மரக்கறி வகைகளுக்கு வழமைக்கு மாறாக விலை அதிகரித்துக் காணப்படு கின்றது. அத்தோடு கட லுக்கு செல்வதற்கு மீனவர்களுக்கு சில தினங்க ளாக தடை விதிக்கப்பட்டி ருந்ததால் மீன் தட்டுப் பாடும் நிலவுகின்றது.

மேய்ச்சல் தரையில் வெள்ளப் பெருக்கு ஏற்பட் டதால் கால் நடைகள் உணவின்றித் தவிப்பதாக கால்நடை உரிமையாளர் கள் தெரிவித்தனர்.

வெள்ளப் பெருக்கால் நெல் வயல்களுக்குப் போக முடியாமல் இருந்த விவ சாயிகள் நேற்று காலநிலை சற்று சீரடைந்ததையடுத்து வயல்களுக்கு சென்றுள் ளனர். வெள்ளத்தால் நெல் வயல்களில் உடைப்பு ஏற் பட்டு நீரை தேக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

நெல் வயல்களுக்கு உரிய காலத்துக் கானகளை நாசினி, உரம் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட் டுள்ளது என்று விவ சாயி கள் கவலை தெரிவித் தனர். (ச-30)

# வெள்ளத்தில் மூழ்கின மட்டு. பாடசாலைகள்

மட்டக்களப்பு,ஜன.9

மட்டக்களப்பு மாவட்டத் தில் கடந்த சில நாள்களாக பெய்த மழையால் சில பாடசாலைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

ஆரையம்பதி மகா வித்தியாலயம், காத்தான்குடி அன்வர் வித்தியாலயம், புதிய காத்தான்குடி றிஸ்வி நகர் அல்- இக்பால் வித்தியால யம் உட்பட சில பாடசா லைகள் வெள்ளத்தில் மூழ் கியுள்ளன.

இந்தப் பாடசாலைக ளைச் சுற்றி வெள்ளம் தேங்கி நிற்பதால், மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்குப் பல சிரமங்களை எதிர்நோக் கியுள்ளனர்.பாடசாலைகளில் வெள் ளம் தேங்கி நிற்பதால் டெங்கு நுளம்பு பெருகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது என்று பாடசாலை அதிபர் கள் தெரிவித்தனர்.

**வீடு காணி விற்பனைக்கு**

கொழும்புத்துறை பிரதான வீதி துண்டிச்சந்தியில் உள்ள 7½ பரப்புக் காணியும் வீடும் உடன் விற்பனைக்கு.

தொடர்பு: 0770489389

(C/28153)

**Skyன் நடமாடும் கணினிச் சேவை**

உங்கள் கணினி எவ்வகையானலும் வீட்டுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும்.



Sky COMPUTER
162, Main Street
Jaffna
021-222-1417, 0750698608



(14ஆவது ஆண்டு நிறைவில்)

(C/5409)

**காணி விற்பனைக்கு**

மருதனார் மடம் கைதடி வீதியில் இராமநாதன் நுண்கலைக் கல்லூரிக்கு முன்பாக 8 பரப்பு காணி விற்பனைக்கு.

தொடர்பு T.P :0718584908

# கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வது), மூளாய்.

## பதவி வெற்றிடம்

மேற்படி எமது வைத்தியசாலையில் கீழ்வரும் பதவி நிலைகள் வெற்றிடமாக உள்ளன.

01. நோயாளர் காவுவண்டி சாரதி.
02. சுத்திகரிப்புத் தொழிலாளி.

தகுதியுடையோர் (13.01.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கீழ்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளுடன் அலுவலகத்துக்கு நேரில் சமூகம் தரவும்.

* பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
* தேசிய அடையாள அட்டை.
* கல்வித் தகமைச் சான்றிதழ்.
* கிராம சேவையாளர் நற்சான்றிதழ்.
* வாகன சாரதி அனுமதிப் பத்திரம்(சாரதிகளுக்கு மட்டும்)

தலைவர். கூட்டுறவு வைத்தியசாலை. மூளாய்.

# கண்ணீர் அஞ்சலி



கடந்த 6ஆண்டுகள் யாழ்ப்பாணம் J/65 பாசையூர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கட மையாற்றி தற்போது தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் விளான் பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய செல்வி **யோகநாயகி சண்முகநாதன்** அவர்களின் பிரிவால் ஆழ்ந்த துயரடைவதுடன் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலாளரும்,*
*நலன்புரி சங்கத்தினரும்.*

*பிரதேச செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*

# துயர் பகிர்கின்றோம்



யா/ நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தில்
ஆசிரியையாகக் கடமையாற்றும்
திருமதி கருணாந்தன் கோவிந்தராணி
அவர்களின் அன்புத் தந்தை
**சுப்பிரமணியம் சோதிலிங்கம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஆசிரியர் நலன்புரி கழகம்*
*யா/ நாவந்துறை றோ.க.வித்தியாலயம்*
*யாழ்ப்பாணம்.*

(28098)(6)

# மரண அறிவித்தல்

## செல்லையா சேதுநாதர்



தும்பளையைப் பிறப்பிடமாகவும், புற்றளையை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா சேதுநாதர் நேற்று (08.01.2013) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், செல்வதிஅம்மாள், செல்வராசா (லண்டன்), செல்வநேசன் (தெல்லிப் பழை- ப.நோ.கூ. சங்க சிற்றூண்டிச்சாலை முகாமையாளர்), செல்வகுமார் (யாழ். மாநகரசபை ஊழியர்), செல்வமலர் (தேசிய வீடமைப்பு அதிகாரசபை), திருச்செல்வி (பருத்தித்துறை நீதிமன்றம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீந்திரன் (NSB Pointpedro), அனுசியா, சுசிலாதேவி, சியகலா, நடனசிவா (யாழ். மாநகரசபை ஊழியர்), மேனன்பரமதாஸ் (RDA Colombo) ஆகியோரின் மாமனும், கோகுலவர்மன் (Engineering Student, Moratuva), செந்தூரன் (Engineering Student- Peradeniya), விநோதன், கஜனன், கிரிசான், செந்தியா, சுதர்சினி, சுபாசினி, சுரேஸ், கஜனன், டிலக்சி, அப்சயா, கிருத்தியா, யதுஸ்பரன், கவிசா ஆகியோரின் அன்புப் பேரனும், லதுஷன், பதுஷன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2013) புதன்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரையாவத்தை,
புற்றளை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடியிருப்புக் காணி விற்பனை

கரவெட்டி, புதுத்தோட்ட வீதியில் கொடிகாமம் றோட்டிலிருந்து 100 யார் தூரத்தில், கிணற்றுப்பங்கு வழிவாய்க்கால் நல்ல தண்ணி குழாய்க் கிணறு, சிவப்பு மண் உரித்துடன் 2 பரப்பு (இரண்டு) காணி நல்ல சுற்றாடலில் உடனடியாக விற்பனைக்கு உண்டு. புதுத் தோட்ட வீதியுடன் வடக்கு எல்லையைக் கொண்டது. கூடிய விலை கோருபவருக்கு விற்கப்படும்.

தொடர்பு: உரிமையாளரின் பட்டத்தரணி

(சி/5339)(6.7.4) 077 0597784

# அல்—இக்பால் வித்தியாலயகல்விநடவடிக்கை ஆரம்பம்

## ஆர்ப்பாட்டத்தையடுத்து கிடைத்தது புதிய கட்டடம்

காத்தான்குடி, ஜன.9

கடந்த சில நாள்களாக மூடப்பட்டிருந்த காத்தான்குடி, றிஸ்வி நகர் அல் - இக்பால் வித்தியாலயத்தின் கல்வி நடவடிக் கைகள் நேற்று செவ்வாய்க்கிழமை புதிய கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளன. இந்தப் பாடசாலையின் புதிய கட்டடத்தை வழங்குமாறு கோரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பாடசாலை பகிஷ்கரிப்பு மற்றும் ஆர்ப்பாட்டம் என்ப வற்றில் ஈடுபட்டனர்.

அதனால், குறித்த பாடசாலை கடந்த சில நாள்களாக மூடப் பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை மட்டக்களப்பு வலயக் கல்வி பணிப்பாளர் எம்.ஏ.அஹ மட்லெவ்வைக்கும் பெற்றோருக் கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. அதில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமை வாக பாடசாலையின் புதிய கட்டட மேல் மாடி யில் நேற்று தொடக்கம் கற்றல் நடவடிக்கை இடம்பெறும் என்று தீர்மானிக்கப்பட்டது.

றிஸ்வி நகர் அல் - இக்பால் வித்தியாலயத் தின் புதிய கட்டடத்தில் தேசிய தொழிற் பயிற்சி அதிகாரசபையின் தொழிற் பயிற்சி நிலையம் செயற்படுகின்றமை குறிப் பிடத்தக்கது.( ச)

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்

செல்வி

*யோகநாயகி சண்முகநாதன்*

அவர்களின் திடீர்மறைவு எம்மையெல் லாம் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப தோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம்.

பிரதேச செயலாளரும்,
சகல நலன்புரி சங்க அங்கத்தவர்களும்.

நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம், தெல்லிப்பழை.
(28091)(5-6-7)




## இந்தியப் பெண்ணுக்கு சிறை

சட்டவிரோதமான முறை யில் ஆடை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்தியப் பெண்ணை எதிர் வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிபதி எம். ஏ.றிஸ்வி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டார்

தமிழ்நாட்டில் இருந்து சுற்றுலா விசாவில் இலங் கைக்கு வந்த இந்த பெண், கடந்த ஞாயிற் றுக்கிழமை மாலை களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு கல்முனை பொலிஸ் நிலை யத்தில் ஒப்ப டைக்கப்பட்டார்.

அதனையடுத்து குறித்த பெண் நேற் றுமுன்தினம் திங்கட் கிழமை கல்முனை நீதிவான் நீதிமன் றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டார். அதன்போதே அவரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக் கமறியலில் வைக் குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ச)

### முதலமைச்சரின் இணைப்புச் செயலாளராக சுபியான்

கிழக்கு மாகாண முதல மைச்சர் நஜீப் ஏ. மஜீத்தின் இணைப் புச் செயலாளராக தம்பலகாமம் பிர தேச சபைத் தலைவர் எஸ். எம். சுபியான் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2006ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பா கப் போட்டி யிட்டு தம்பலகாமம் பிர தேச சபை உறுப்பி னராக அவர் தெரிவு செய்யப்பட்டார். கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற தம்பல காமம் தேர்தலில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற் [illegible] தெரிவு செய்யப் பட் டமை குறிப்பி டத் தக்கது. (ச)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கோவில் வீதியில் நல்ல சூழலில் 1¾ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.

(C/28152) தொடர்பு: 0772964235

## விற்பனைக்கு

டோமன்(Doman),
பொமனேறியன் நாய்க்குட்டிகள்
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: மல்ரி பாம்
61, இராமநாதன் வீதி,
0754985400, 0217912997

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை கூறுவிலை கோரல்

வேலையின் பெயர்: ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம், நல்லூர் உணவு பரிமாறும் மண்டபம் அமைத்தல்

மேற்படி வேலைக்கான உள்ளூர் கூறு விலைகள் இத்துறையில் அனுபவமும் ஆர்வமும் உடைய தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து கோரப்படுகின்றது. கூறுவிலை பத்திரத்தை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ் தானத்தில் 10.01.2013ஆம் திகதி தொடக்கம் 20.01.2013 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் ரூபா ஆயிரம் (மீளப்பெற முடியாத வைப்புப் பணமாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தியாக்கப்பட்ட கேள்விப் பத்திரத்தை 24.01.2013ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக

தலைவர்,
ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்,
துர்க்காபுரம், தெல்லிப்பழை.

என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம்.

கேள்விப் பத்திரத்துடன் கடந்த காலங்களில் தங்களால் நிறை வேற்றப்பட்ட வேலைகள், வேலை அனுபவங்கள் போன்றவற்றைக் குறிப்பிடல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப் படும்.

தலைவர்,
ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(பி/5408)(5-6-7)

## கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனையில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும்

மு.இராஜகோபால்

அவர்களின் அன்புத் தந்தையார்

சிதம்பரப்பிள்ளை முத்துலிங்கம்

அவர்கள் 07.01.2013 அன்று இறைபதம் அடைந்தார். அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**பணிப்பாளர், பணியாளர்கள்,**
ஊழியர், நலன்புரி சங்கம்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பணிமனை,
யாழ்ப்பாணம்.
(28090)(6.7.4)

## மரண அறிவித்தல்



## வைத்திலிங்கம் நாகராஜா

சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் ஐ வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் நாகராஜா அவர்கள் 06.01.2013 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09-01-2013 இன்று புதன்கிழமை (பிரான்ஸ் நேரப்படி) பி.ப. 1:00 மணிதொடக்கம் 2:00 மணி வரை Crematorium de Chambiguny s/marne 94500 Presence, Cimetiere de Coeuilly 480,av Maurice Thorez எனும் இடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 2:00 மணியளவில் தகனக்கிரியைகள் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : சகோதரர் வைத்திலிங்கம் சின்னத்துரை**
மீசாலை கிழக்கு, மீசாலை.
தொ.பே: 077 4528837

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1,500 கறவைப் பசுக்கள் ஆஸியிலிருந்து இறக்குமதி

கொழும்பு,ஜன.9

இலங்கையின் பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் ஆஸ்திரேலியாவிலிருந்து 1500 கறவை பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கறவை பசுக்கள் இன்று புதன்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளன என்று கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாட்டின் பால் உற்பத்தியை தன்னிறைவு அடையச் செய்யும் நோக்கில் கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு பல அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

**நாட்டின் பால் உற்பத்தியை தன்னிறைவு அடையச் செய்யும் நோக்கில் கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு பல அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.**

நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்து மக்களுக்கான பால் உற்பத்திகளை மிகவும் குறைந்த விலைக்கு வழங்க வேண்டும்.

அதற்கு உள்நாட்டு பால் உற்பத்திகளை அதிகரிக்கச் செய்ய வேண்டும். சிறந்த கறவை பசுக்களும் தேவை. புதிய தொழில் நுட்பங்களும் பயன்படுத்த வேண்டும்.

இதனை நிவர்த்தி செய்யவே 1500 கறவை பசுக்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பசுக்கள் இன்று மாலை 5 மணிக்கு கொழும்புத் துறைமுகத்தை வந்தடையவுள்ளன.

பின்னர் பசுக்கள் பாதுகாப்பான முறையில் போபத்தலாவ தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் பண்ணைக்கு கொண்டு செல்லப்படவுள்ளன. அங்கு பசுக்களை பராமரிப்பதற்காக ஆஸ்திரேலிய தொழில்நுட்பத்திலான கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

## டெங்கு பரவும் சூழலை வைத்திருந்தவர் ரூபா 50 ஆயிரம் பிணையில்

வடமராட்சி, ஜன.9

டெங்கு நோய் பரவக் கூடிய விதத்தில் வீட்டில் குப்பை கூளங்களை வைத்திருந்ததாக தொடரப்பட்ட வழக்கில் பிரதிவாதியான பெண் 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறைப் பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்ட புலோலியைச் சேர்ந்த பெண் ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இந்த வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதி மன்றத்தில், மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது பிரதிவாதி தான் குற்றவாளி எனக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல உத்தரவிட்ட நீதிபதி வழக்கை பிறிதொரு திகதிக்கு ஒத்திவைத்தார்.(3-8)

## செவ்வாய்க்கிரகத்தில் விரைவில் நகரம் 80 ஆயிரம் பேருக்கு அழைப்பு

செவ்வாய்க் கிரகத்தில் சிறு நகரம் அமைக்க முடிவு செய்துள்ளார் பேபால் நிறுவனரும், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரியுமான எலான் முஸ்க்.

மேற்படி குடியேற்றம் குறித்து லண்டன் ராயல் ஏரோநாட்டிகல் மக்கள் மத்தியில் அவர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

செவ்வாய்கிரகத்தில் சைவ உணவுப் பிரியர்களுக்கு மட்டும்தான் அனுமதி. அங்கு முதலில் குடியேறுவோர், தாம் வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபடுத்தப்படுவர்.

இதற்காக செவ்வாய் கிரகத்தில் செங்குத்தாகத் தரையிறங்கக்கூடிய விண்கலங்களைத் தயாரிக்க வேண்டியுள்ளது. அத்துடன் விண்கலங்களை மீண்டும் மீண்டும் பயணத்துக்கு பயன்படுத்த வேண்டியுள்ளது. அந்த வசதிகளுடன் கூடிய 'பால்கன்-9' என்ற விண்கலத்தை நாசா தயாரித்து வருகிறது.

செவ்வாய்க் கிரகத்தில் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் 80 ஆயிரம் பேர் குடியேறுவர். அவர்கள் அங்கு சுயசார்புள்ள புதிய நாகரிகத்தை உருவாக்குவர்.

இதற்கிடையே செவ்வாய்க் கிரகத்தில் குடியேறுவதற்கான கட்டணம் 5 லட்சம் அமெரிக்க டொலர்கள் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (வ)

## சிறையில் மலையகப் பெண் கைதி உயிரிழப்பு; மலையகத் தலைமைகளை கண்டிக்கிறார் மனோ

விடுதலைப்புலிகளுக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் மலையக வயோதிப தமிழ்ப் பெண் ஒருவர் 19 வருடம் சிறைவாசம் அனுபவித்து, நீண்டகாலம் கடும் சுகவீனமுற்று முறையான சிகிச்சை இல்லாமல் உயிரிழந்தார். அவரது உயிரிழப்பு மலையக அரசியல் தலைமைகளின் கையாலாகாத்தனத்துக்கும், பொறுப்பின்மைக் கும் அடையாளமாக அமைந்து விட்டது என்று ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை பரிதாபமாக உயிரிழந்த பதுளை, பூனாகலை, அடாவத்த தோட்டத்தைச் சேர்ந்த காத்தாய் முத்துசாமி என்ற 68 வயதான மலையக வயோதிப தமிழ்ப் பெண்ணின் உயிரிழப்புக் குறித்து கருத் துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதா வது:-

மட்டக்களப்பிலிருந்து புலி களின் பொருள்களை பதுளைக் குக் கொண்டு வந்தார், புலிகளுக்கு தங்குமிடம் அளித்து உதவினார் என்று குற்றச் சாட்டப்பட்டு மேற்படி தமிழ்ப் பெண் 1994 இல் கைது செய்யப்பட்டார் என்று அவரது மகன் கே.வரதராஜ் என்னிடம் கூறினார் குறித்த பெண்ணுக்கு நீண்ட விசாரணைகளின் பின் தண்டனை வழங்கப்பட்டது.

சிறையில் புற்றுநோய் காரணமாகவும், படுக்கைப் புண் காரணமாகவும் மேற்படி பெண் கடும் உபாதைகளுக்கு உள்ளாகி இருந்தார். இதுகுறித்து சிறை நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டும் அவருக்கு உரிய மருத்துவம் வழங்கப்படாததால் அவர் கடந்த ஞாயிற்றுக் கிழமை மருத் துவமனையில் உயிரிழந்தார்.

மட்டக்களப்பிலிருந்து செயற்பட்ட புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி தற்போது அரச அமைச்சராக உள்ளார். புலிகளின் மகளிர் அணித் தலைவி தமிழினி சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, இன்று புனர்வாழ்வு நிலையத்தில் மண மகள் அலங்காரப் பயிற்சி பெறுகிறார். ஆனால் புலிக ளுக்கு உதவினார் என்ற பெயரில் கைது செய்யப் பட்டு தன் வாழ்நாளில் ஏறக் குறைய இருபது வருடங் களை சிறை யில் கழித்து விட்ட குறித்த வயோதிபப் பெண் பரிதாப மாக உயிரிழந் திருக்கிறார். - என்றார். (வ)

## வீதியில் விடப்படும் சைக்கிளுக்கு வரியா?

வலிமேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட சங்கானை மீன் சந்தையில் வரிவசூலிப்போரால் பொதுமக்கள் பலர் விசனம் அடைந்துள்ளனர்.

மீன் சந்தையின் உட்புறம் அமைந்த சைக்கிள் தரிப்பிடத்தில் விடப்படும் சைக்கிள்களுக்கே வரி அறவிடப்படவேண்டும். ஆனால் மீன் சந்தைக்கு முன்னால் உள்ள வீதியில் விடப்படும் வாகனங்களுக்கும் வரியிறுப்பாளர், வரி தரவேண்டும் எனக் கோருகின்றனர்.

சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் விடப்படும் சைக்கிளுக்கு மட்டும் வரி அறவிடலாம். அதனை விட்டு, வீதியில் விடப்படும் சைக்கிளுக்கு ஏன் வரி கொடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் விசனம் அடைகின்றனர்.(3-29)

## தொடரும் சாபங்கள்......

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத் தெருக்களில் விற்பனையாகின்றவற்றில் இறுக்கமானவை என்று கணிக்கப்படுகின்ற அத்தனை துணி வகைகளையும் எடுத்துக் கிழித்தெறிந்து விடுவதாலோ, தெரியாத இலக்கத்திலிருந்து தவறிய அழைப்பு வந்த நாளில், ''சிம் காட்டை'' முறித்தெறிந்து விடுவதாலோ கிடைக்கின்ற தற்காலிகத் தீர்வு அல்ல நாம் வேண்டுவது. தனித்தனியாக தொலைந்து போன குடும்ப அமைப்புகளில் தமக்கான சந்தேகங்களையும், கேள்விகளையும் பூரணப்படுத்துவதற்காக, தத்தமது மட்டங்களிலேயே தீர்வு தேடுகின்ற யௌவனர்கள் தான் இப்பிரச்சினைகளின் தோற்று மூலங்கள் என்ற வாதத்தில் தப்பேதுமில்லை.

தன்உடலில் ஏற்படுகின்ற மாற்றங்களையும், உளப்பக்குவத்தையும் பருவ வயதில் பெண்களுக்கு சொல்லிக் கொடுக்கின்ற கரிசனையில் , காற்பாகமேனும் அதே வயது விடலைப் பையனுக்கு தெரியப்படுத்தும் வழிவகைகள் எந்நென்ன வைத்திருக்கின்றோம் எம் சமூகங்களில்? பணவரவு விழாக்களில் ஒருவகையான ''பூப்புனித நீராட்டு விழா'' என்ற சடங்கு, ஊர்த்திருவிழாவாக மாற்றிக் கொண்டாடப்படும் வலிந்ததொரு கிளர்ச்சி மயப்படுத்தப்பட்ட விரயச் செலவாகுவதுடன் , தூரத் தூரப் போய் விட்ட உறவுகளை ஒரே இடத்தில் கூட்டிப் பார்ப்பதைவிட வேறென்ன பெரும் நன்மை செய்து விடப் போகின்றது? சமய பாடத்தினை, பரீட்சை நோக்கில் வைத்திருப்பது மட்டுமல்லாது , வாழும் வழியை நேர்த்தியாகச் செதுக்கும் திறமையுடையவர்களாக காட்டப்பட வேண்டிய சமயநெறி ஆசிரியர்கள் தானே , இன்றைய சமூகப்பார்வையின்படி கையாலாகாதவர்களாகவும், அப்பாவிகளாகவும், படிய வாரி இழுத்த தலைமுடியும், பட்டை [illegible] நெற்றியும், முடிந்தால் [illegible] மூக்குக் கண்ணாடியும்மாட்டியபடி, பெரிய சேட் போட்ட பட்டிக்காடுகளாக விம்பப்படுத்தப்படுகிறார்கள். பட்டணங்களில். வாழ்வோடு இணைந்ததாக, செலவில்லாத பரிசோதனைகளினூடாக, இலகுவாக- கைக்கெட்டும் தூரத்திலுள்ள செயன்முறைக் கற்கைகளோடு தத்தமது சமயங்களை கற்றுக்கொள்வதோடு, சமகாலப்பிரயோகம் செய்யும் வாய்ப்பிருந்தும், பரீட்சைக்கு முதல் நாள் பின்னேரம் தான் சமயப் புத்தகத்தை தூக்கி தூசு தட்டுபவனாகவும், பரீட்சை மண்டப வாசலில் தான் அவசரமாய் '' நத்தார் படை பதிகத்தின் பண் நட்டபாடையா? கொல்லியா? என்ற சந்தேகம் தெளிபவனாகவும் ஆக்கிட மட்டுமே முடித்திருப்பது எம் தவறுகள் தானே?

அடுத்த ஐந்து அல்லது பத்து வருடங்கள் கழித்து, ''வீதிச் சேஷ்டை'' யிலும், வக்கிர எண்ணங்களோடும் பஸ் நிலையத்துக்கு வரப்போகின்ற ஒருவன் இன்றைக்கு ஏதோவொரு பாடசாலையின் மாணவன் தானே? பெற்றவளும் தலைகுனியும் இந் [illegible] திசைக்குத் திருப்பி விடும் வாய்ப்புக் கிடைத்தும் தவறவிடுகின்றோமென்றால், எம் திசைகாட்டியின் காந்தவூசியை இன்னமும் நம்பமுடிகின்றதா உங்களால்? திருச்செந்தூரில் சூரசங்காரம் முடித்து விட்டதை முதல் நாள் பிற்பகல் தொலைக்காட்சியில் நேரலையில் பார்த்த பதினைந்து வயது யுவனை, அடுத்த நாள் ''நல்லூருக்கு பக்தியோடு வா- சூரன்போர் பார்க்க'' என்று அழைத்தால், எந்த எதிர்க்கேள்வியும் இல்லாமல் வெற்று மேனியில், வேட்டியெடுத்துச் சுற்றியபடி பின்னால் வர இதொன்றும் அறுபதோ, எழுபதோ இல்லை. எம் அன்பார்ந்த ஆன்மிகப் பெருமக்களே, சமயம் என்பது வெறும் சடங்கு என்றும், பக்தி என்பது பம்மாத்து என்றும், பூஜை என்பது புகையும் - நெருப்பும் என்றும் இன்றைய இளைஞர்கள் நம்புவதற்குக் காரணமான அழுக்கை சிறிது சிறிதாய் சேர்த்து வைத்தவர்கள் என்ற பெருமை நிச்சயம் உங்கள் அனைவரையுமே சாரும்.

யாழ்ப்பாணத்தின் தீவுப்பகுதிகள், பெண் கொடுமைக்கான பெட்டிச் செய்திகளின் தாயகமாக மாறிப்போன கொடுமைகளும், அலுவலக வன்முறைகள், போக்குவரத்தில் பாலியல் தொல்லைகள், குடும்ப வன்முறைகள் எனும் வகையறாக்களுடன், சொல்ல முடியாமல் அழுந்திப் போகின்ற வக்கிரங்களும் ஒரேயொரு மந்திர உச்சாடனத்தில் ஓடிவிடும் மோகினிப் பிசாசு அல்ல. விக்கிரமாதித்தன் தோளிலிருந்து தொடர்ந்து மரமேறும் 'சந்தர்ப்ப' பேய் பாகிஸ்தானில் பெண்களின் கல்விக்காக குரல் கொடுத்ததற்காய் சுடப்பட்ட மலாலாவோ, இந்தியாவில் ஆணாதிக்க கலவித்தாகத்திற்காய் உயிர் கொடுத்த ''ஜோதி சிங் பாண்டேயோ தேவைப்படாமல் ஏன் இதற்கொரு தீர்வு தேடக் கூடாது என் சனமே? 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்ற வரிகள் எந்த மொழியிலிருந்தும் மொழி பெயர்க்கப்படாமல் தோன்றியதே தமிழெனும் அமுதத்தில் தானே?

முகநூல் நண்பனொருவன் உண்மையொன்று சொல்லியிருந்தான். சில ஆண்டுகளுக்கு முன்னர் பாலியல் வன்புணர்வுகளற்ற தேசமொன்று இருந்தது இந்தப் பூமியிலும் -தமிழீழம்-. பொய்யில்லையேயாயினும் பேசினால்புனர்வாழ்வுதானே? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐங்கரன் வெற்றிக்கிண்ண '20/20' கிரிக்கெட்

# வென்றது நியூபவர்



யாழ்ப்பாணம், ஜன.9

கரவெட்டி ஐங்கரன் விளையாட்டுக்கழகம் நடத்திய 20 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் பரபரப்பான இறுதியாட்டத்தில் நியூபவர் அணி வெற்றியீட்டி சம்பியனானது.

இந்த இறுதியாட்டத்தில் ஞானம்ஸ் அணியை எதிர்த்து நியூபவர் அணி மோதிக்கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம் அணி நியூபவர் அணியின் சிறப்பான பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் தவித்தது. அந்த அணி ஓட்டங்களை அதிரடியாகக் குவித்தபோது இலக்குகளை காப்பாற்ற முடியாமல் போனது. முதல் பந்துப் பரிமாற்றத்திலிருந்தே நியூபவர் அணி பந்து வீச்சாளர்கள் ஆவேசத்தோடு ஞானம் அணியின் இலக்குகளை தொடர்ச்சியாக வேட்டையாடினர். நியூபவர் அணியின் பந்து வீச்சை பிரகாஸும், கீதனுமே ஓரளவுக்கு சமாளித்தனர். மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக பிரகாஸ் 21 ஓட்டங்களையும், கீதன் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

இவர்களைத் தவிர துஷிகரன் 7 ஓட்டங்கள், சுகந்தன் 9 ஓட்டங்கள், அகிலன் 4 ஓட்டங்களைப் பெற்றனர். அனுசயந்தன், குணதீபன், விஜயகுமார், சுதர்சன் ஆகியோர் ஓட்டம் எதனையும் பெறாமல் ஏமாற்றினர். இதனால் 8.4 பந்துப் பரிமாற்றங்களில் ஞானம்ஸ் அணி 84 ஓட்டங்களைப் பெற்று சகல இலக்குகளையும் இழந்தது.

85 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நம்பிக்கையோடு துரத்தத் தொடங்கியது நியூபவர் அணி. எனினும் இலகுவான இலக்காக இருந்தபோதும் அதனை எட்டுவதற்கு ஞானம்ஸ் பந்து வீச்சாளர்கள் தமது அபார திறமையால் தடைபோட்டனர். ஒரு கட்டத்தில் நியூபவர் அணி ஒன்பது இலக்குகளை இழந்திருந்தபோது வெற்றிக்கு 6 ஓட்டங்கள் தேவைப்பட்டன. கைவசம் இருந்ததோ ஒரு இலக்கும் ஒரு பந்துப் பரிமாற்றமும் மட்டுமே. இதனால் ஞானம்ஸ் அணி கிண்ணத்தை வெல்லக்கூடிய நிலை தோன்றியிருந்தது. இருந்தபோதும் நியூபவர் அணியின் கடைசி வீரர்கள் இருவரும் பொறுப்பாக ஆடினர். இறுதிப் பந்து பரிமாற்றத்தின் முதல் மூன்று பந்துகளிலும் நான்கு ஓட்டங்கள் பெறப்பட்டன. இன்னும் மூன்று பந்துகளில் இரண்டு ஓட்டங்கள் பெற வேண்டும். நான்காவது பந்தை எதிர்கொண்ட நியூபவர் அணி வீரர் வாசு அதனை தூக்கி அடித்தார். பந்து எல்லைக்கோட்டைத் தாண்டி சிக்ஸராக மாற,



வெற்றி நியூபவர் அணியிடம் தஞ்சமடைந்தது. நியூபவர் அணிசார்பாக பிரகாஸ் 19 ஓட்டங்களையும், ராம் 15 ஓட்டங்களையும், வாசு 12 ஓட்டங்களையும், கபிலன் 10 ஓட்டங்களையும், காந்தன் 7 ஓட்டங்களையும், பகிரதன் 8 ஓட்டங்களையும், கிரி ஒரு ஓட்டத்தையும் பெற்றனர். செந்தூரன் ஓட்டமெதனையும் பெறாமல் வீழ்ந்தார்.

பந்து வீச்சில் ஞானம்ஸ் அணி சார்பாக அனுசயந்தன் 4 இலக்குகளையும் சுவேந்திரன் 2 இலக்குகளையும் விஜயகுமார், சுதர்சன், குணதீபன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

இறுதிப்போட்டியில் சிக்ஸர் அடித்து அணிக்கு வாகை சூடித் தந்த வாசு ஆட்ட நாயகனாகத் தெரிவானார். அத்துடன் இந்தத் தொடரில் மொத்தமாக 11 இலக்குகளைச் சரித்ததுடன், 60 ஓட்டங்களையும் பெற்ற பிரகாஸ் தொடர் நாயகனாகத் தெரிவானார்.

இந்த இறுதியாட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அதிபர் மு.கனகலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டி.எம். வேதாபரணம், சமுர்த்தி உத்தியோகத்தர் இ.உதயகுமார், கிராம உத்தியோகத்தர் வே.வைத்தியலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ங-422)

## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகள்:-

**பி.ப. 3.30 மணி**

குடத்தனை சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம்.

**பி.ப. 4.30 மணி**

நெடியகாடு இளைஞர் கழகம் எதிர் நவிண்டில் ஊரெழு விளையாட்டுக் கழகம்.

★ ★ ★

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமாகன நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் வைரவப் புளியங்குளத்திலுள்ள யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றுவருகிறது.

இந்தச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெற இருக்கும் ஆட்டத்தில் ஏ.பி.சி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

★ ★ ★

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை நடத்தி வருகின்றது. யாழ். மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் மின்னொளியில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**மாலை 6 மணி**

கே.கே.ஸ்.விளையாட்டுக் கழகம் எதிர் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம். (ங-23)

## ஜொலிஸ்ரார், பற்றீஸியன்ஸ் கூடைப் பந்தில் சாதித்தன



யாழ். மாவட்டக் கூடைப் பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம், பற்றீஸியன்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டன.

இதில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 70:44 புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் பற்றீஸியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் பற்றீஸியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 50:25 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது. (ங-23)

## 'தேசத்தின் மகுடம்' கரப்பந்து வடமாகாணப் போட்டி நாளை

வலி.வடக்கு, ஜன. 08

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வட மாகாணப் பாடசாலைகளுக்கு இடையேயான 16 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிப் போட்டிகள் நடத்தப் படவுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் வடமாகாணக் கல்வித்திணைக்களத்தின் உடற்கல்விப்பிரிவினால் கோரப்பட்டுள்ளது.

இலங்கை கல்வி அமைச்சும், இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனமும் இணைந்து நடத்தும் இந்தப்போட்டிக்கான விண்ணப்பங்களை யாழ்ப்பாணம் கல்வி வலய உடற்கல்விப் கல்விப் பணிப்பாளர் சண்தயாளன் அல்லது யாழ்ப்பாணம் கல்வி வலய அலுவலகம், நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகள் பெற்றுக்கொள்ள முடியும்.

இதேபோன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டப் பாடசாலை அணிகள் ஏ.எம.சுபைர் உதவிக் கல்விப் பணிப்பாளர்(உடற் கல்வி)வலயக் கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு, வவுனியா என்னும் முகவரியில் உடன்தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்என வடமாகாண உடற்கல்வி பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

'தேசத்தின் மகுடம்' கண்காட்சியை ஒட்டி நடத்தப்படும் இந்தக் கரப்பந்தாட்டப் சுற்றுப் போட்டியின் முதற் சுற்று ஆட்டங்கள் இரண்டு பிரிவுகளாக நடைபெறவுள்ளன. யாழ். மாவட்ட அணிகள் தனிப் பிரிவாகவும், ஏனைய மாவட்ட அணிகள் இன்னொரு பிரிவாகவும் மோதவுள்ளன.

நாளை வியாழக்கிழமை முதற் சுற்றுப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. யாழ். மாவட்ட அணிகளுக்கான போட்டிகள் ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயத்திலும் ஏனைய மாவட்ட அணிகளுக்கான போட்டிகள் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

இறுதிப்போட்டிகள் 12 ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ளது. (ங-86)



வடமாகாண பூப்பந்தாட்டச் சங்கம் நடத்திய மாகாண ரீதியிலான ஆண் , பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் சென்.ஜோன்ஸ் கல்லூரி உள்ளக விளையாட்டுத்திடலில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றன. இதில் மகளிர் பிரிவில் வெற்றியீட்டிய உடுவில் மான்ஸ் விளையாட்டுக் கழக அணித் தலைவியிடம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட பூப்பந்தாட்டச் சங்கத்தலைவரும், சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபருமான ஏ.என். ஞானபொன்ராஜா வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வில்லாத சச்சின்

அண்மையில் ஒருநாள் கிரிக்கெட் தொடரிலிருந்து ஓய்வை அறிவித்த இந்திய மாஸ்டர் பட்ஸ்மன் சச்சினின் பார்வை கோல்ப் போட்டி மீது திரும்பி உள்ளது.

இவர், குஜராத்தில் நடைபெறவுள்ள சலஞ்சர் கோல்ப் தொடரில் பங்கேற்க உள்ளார்.

குஜராத்தில் உள்ள அஹமதாபாத் நகரில் 3 ஆவது கென்ஸ்வில்லி சலஞ்ச் கோல்ப் தொடர் ஜனவரி 30 ஆம் திகதி முதல் பெப்ரவரி 3 ஆம் திகதி வரை நடக்கிறது.

இந்தத் தொடரில் இந்திய மாஸ்டர் பட்ஸ்மன் சச்சின், பங்கேற்க உள்ளார். இவர், அண்மையில் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வை அறிவித்தார். ஏற்கனவே இவர், குஜராத் கென்ஸ்வில்லி கோல்ப் கழகத்தின் விளம்பர தூதுவராக உள்ளார்.

கிரிக்கெட் அரங்கில் எண்ணற்ற சாதனைகள் படைத்த இவர், கோல்ப் போட்டியிலும் அசத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து இந்திய கோல்ப் வீரர் ஜீவ் மில்கா சிங் கூறுகையில், இந்தத் தொடரில் சச்சின் விளையாட இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இவரது வருகையால், இந்தியாவில் கோல்ப் போட்டி வளர்ச்சி அடையும் என்று நம்புகிறேன்.

இவர், முன்னாள் கிரிக்கெட் வீரர்களான கபல் தேவ், மதன் லால், அஜய் ஜடேஜா



போல, சிறந்த கோல்ப் வீரராக வலம் வருவார் என்று எதிர்பார்க்கிறேன் என்றார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்ற நிறைய வீரர்கள் ஓய்வுக்குப் பின்பு கோல்ப் போட்டியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பிரையன் லாரா, இங்கிலாந்தின் இயன் பொத்தம் முக்கியமானவர்கள். இவர்கள் வரிசையில் தற்போது சச்சினும் இணைந்துள்ளார்.

இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் மஹேல ஜெயவர்தன, கோல்ப் பிறீமியர் லீக் தொடரில் ஒரு அணியை வாங்கி உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (5)

# வெட்டி வீராப்பு பேசும் யுவராஜ்



இங்கிலாந்து அணி 2011 ஆம் ஆண்டு டெஸ்ட் தொடரை வென்றதற்கு இந்தியாவில் வைத்து தக்க பதிலடி கொடுத்து பழிவாங்குவோம் என்று கஜித்த இந்திய துடுப்பாட்ட வீரர் யுவராஜ், இறுதியில் டெஸ்ட் தொடரில் ஓட்டங்களைக் குவிக்க முடியாது திணறி தொடரைப் பறிகொடுக்க காரணமானார். மீண்டும் டெஸ்ட் தொடரை இழந்ததற்கு ஒரு நாள் தொடரில் பழி வாங்கவுள்ளதாக யுவராஜ் தெரிவித்துள்ளார்.

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான, டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 2-1 என்று வெற்றி கொண்டது. ஷரி-20' தொடர் 1-1 என்று சமநிலையில் முடிந்தது. ஒரு நாள் போட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி ராஜ்கோட்டில் தொடங்குகிறது.

ஒரு நாள் தொடர் குறித்து இந்திய வீரர் யுவராஜ் சிங் கூறுகையில்,

டெஸ்ட் தொடரை வென்ற இங்கிலாந்து அணிக்கு ஒருநாள் தொடரை வென்று பதிலடி கொடுப்போம்.

பாகிஸ்தான் அணிக்கெதிரான ரி-20 போட்டியில் சிறப்பாக செயல்பட முடிந்தது என்றும் இதேபோல ஒருநாள் போட்டியில் அசத்துவேன் எனவும் கூறியுள்ளார். (5)

# சர்ச்சையில் டோனியின் விருது

இந்திய அணித் தலைவர் மஹேந்திர சிங் டோனிக்கு, பாகிஸ்தானுக்கு எதிரான இறுதி ஒரு நாள் ஆட்டத்தில் வழங்கப்பட்ட ஆட்ட நாயகன் விருது சர்ச்சையை தோற்றுவித்துள்ளது. ஏற்கனவே இறுதி ஒரு நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் வேண்டுமென்றே தோற்றதாக சர்ச்சைகள் உருவாகியுள்ள நிலையில் இது மேலதிக சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து இரண்டு ரி-20' போட்டி மற்றும் 3 ஒருநாள் போட்டியில் விளையாடியது. இதில் ரி-20' தொடர் 1-1 என்ற கணக்கில் சம நிலையில் முடிந்தது. ஒருநாள் தொடரை பாகிஸ்தான் 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

டெல்லியில் நடந்த கடைசி ஆட்டத்தில் இந்திய அணி 10 ஓட்டத்தில் வென்று ஆறுதல் வெற்றியை பெற்றது. இந்த ஆட்டத்தில் இந்திய அணி அணித்தலைவர் டோனிக்கு ஆட்டநாயகன் விருது கொடுக்கப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

இந்த ஆட்டத்தில் இந்தியாவின் அதிக ஓட்ட எண்ணிக்கையாக டோனி 36 ஓட்டங்கள் எடுத்தார். டோனி இலக்குக் காப்பில் உமர் அக்மலை ஸ்டம்பிங் செய்தார். அஜ்மலின் பிடியைப் பிடித்தார். ஆனால் மிஸ்பா பிடியைத் தவறவிட்டார்.

இந்த ஆட்டத்தில் இசாந்த் சர்மா 3 இலக்குகளும், புதுமுக வீரர் புவனேஸ்வகுமார் 2 இலக்குகளும் எடுத்தனர். அத்தோடு பாகிஸ்தான் தரப்பல் அஜ்மல் 5 இலக்குகளை கைப்பற்றியிருந்தார்.

இவர்களை எல்லாம் விட்டுவிட்டு 36 ஓட்டங்கள் எடுத்த டோனிக்கு ஆட்டநாயகன் விருது கொடுத்தது ஆச்சரியத்தை அளித்தது.

தொலைக்காட்சி வர்ணனையாளர்கள் தான் ஆட்ட நாயகன் விருதுக்கான வீரரை தெரிவு செய்வார்கள். வர்ணனையாளராக இருக்கும் முன்னாள் வீரர் ஒருவர்தான் டோனியை ஒருமனதாக தெரிவு செய்து உள்ளார்.

சமீப காலங்களில் இந்திய அணிக்கு ஏற்பட்ட தோல்விகளால் அணித்தலைவர் டோனி கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கிறார். அவரது மன உறுதியை அதிகரிக்கவே இந்த ஆட்ட நாயகன் விருது கொடுக்கப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. டோனிக்கு சாதகமாக இருந்த அந்த முன்னாள் வீரர் யார் என்று தெரியவில்லை.

ஆட்டநாயகன் விருது விவகாரத்தில் பாகிஸ்தானும் அதிருப்தி அடைந்துள்ளது. சென்னையில் நடந்த முதலாவது ஆட்டத்தில் சதம் அடித்து வெற்றி பெற வைத்த பாகிஸ்தான் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஜம்செட்டுக்கு ஆட்டநாயகன் விருது கொடுக்காமல் சதம் அடித்த டோனிக்கு வழங்கியதால் அதிருப்தி அடைந்துள்ளது. வெற்றி பெற்ற அணி வீரருக்குதான் விருது வழங்கி இருக்க வேண்டும் என்று அந்த அணி நிர்வாகம் குற்றம்சாட்டியுள்ளது. (5)

# பழிக்குப் பழி வாங்கினார் மலிங்க

உலகக் கிண்ண ரி-20' இறுதி ஆட்டத்தில் தனது பந்து வீச்சை வேட்டையாடிய சாமுவேல்ஸை ஆஸ்திரேலியாவின் ரி-20' தொடரில் வைத்து மலிங்க பழி தீர்த்துள்ளார். மலிங்கவின் வேகத்தில் சாமுவேல்ஸின் மூக்கு உடைந்ததால் அவரால் எஞ்சிய ஆட்டங்களில் பங்கேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மெல்பேர்ண் ஸ்ரார்ஸ் அணிக்கும், மெல்பேர்ண் ரெனிகேட்ஸ் அணிக்குமிடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் மெல்பேர்ண் ஸ்ரார்ஸ் அணி சார்பாக விளையாடிய மார்லன் சாமுவேல்ஸ், லசித் மலிங்க வீசிய பந்தை அடிக்க முனைந்த போது பந்து அவரது மூக்கு, கண் பகுதியை கடுமையாகத் தாக்கியிருந்தது.

அதிகளவிலான இரத்தம் வெளியேறியதையடுத்து உடனடியாகவே மைதானத்தை விட்டு வெளியேறிய மார்லன் சாமுவேல்ஸ், அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளில் தொடர்ந்தும் போட்டியில் பங்குபற்ற முடியாது எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து அவர்இந்தத் தொடரில் பங்குபற்ற மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மார்லன் சாமுவேல்ஸிற்குப் பதிலாக மெல்பேர்ண் ரெனி



கேட்ஸ் அணியில் இங்கிலாந்து இளம் துடுப்பாட்ட வீரர்அலெக்ஸ் ஹேல்ஸ் சேர்க்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற உலக ஷரி-20' தொடரின் இறுதி ஆட்டத்தில் லசித் மலிங்க, மார்லன் சாமுவேல்ஸ் இருவரும் மோதிய போது, அந்த ஆட்டத்தையே மாற்றும் விதமாக லசித் மலிங்கவின் பந்துவீச்சில் மார்லன் சாமுவேல்ஸ் 11 பந்துகளில் 5 சிக்ஸர்கள் அடங்கலாக 28 ஓட்டங்களைக் குவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# திறமையை வெளிக்காட்டிய இளம் வீரர்கள்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இலங்கை அணி சிறப்பான பெறுபேற்றை வெளிக்காட்டாத போதிலும், அணியில் இடம்பிடித்திருந்த இளம் வீரர்கள் தங்களது திறமைகளை முழு அளவில் வெளிக்காட்டினர். இது அணியின் எதிர்காலத்திற்கு நல்ல எடுத்துக்காட்டாகும் என்று இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் கிரஹம் போர்ட் தெரிவித்தார்.

இலங்கை அணி, ஆஸ்திரேலியாவில் வைத்துத் தொடர்ச்சியான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருக்கவில்லை. இதுவே தோல்விக்கான காரணமாக அமைந்தது.

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அங்கு வைத்து இடம்பெற்ற 3 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் 3 போட்டியிலும் தோல்வியடைந்து தொடரை 0-3 என்ற கணக்கில் தோற்றிருந்தது.

அந்தத் தோல்விகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கிரஹம் போர்ட், சில தருணங்களில் இலங்கை அணி ஆஸ்திரேலியா அளவுக்குச் சிறப்பான திறமையை வெளிப்படுத்தியதாகவும், ஆனால் அதைத் தொடர்ச்சியாக, நீண்ட அளவுக்கு வெளிப்படுத்த முடிந்திருக்கவில்லை எனவும், தோல்விக்கான காரணமாகவே அதுவே அமைந்ததாக அவர் தெரிவித்தார்.

இந்தத் தொடரில் இலங்கை அணி தோல்



வியடைந்த போதிலும், சில இளைய வீரர்கள் மிகச்சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்தனர். அது தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

சில இளைய வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டதாகத் தெரிவித்த அவர், அந்த வீரர்கள் தாங்கள் சர்வதேச மட்டத்தில் பிரகாசிக்கக்கூடியவர்கள் என்பதை வெளிப்படுத்தியிருந்தார்கள் எனவும் தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய, இலங்கை அணிகளுக்கிடையிலான 5 போட்டி கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர் எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள நிலையில், அந்தத் தொடருக்கு முன்னதாக இலங்கை அணி மீண்டும் ஒன்று சேர்ந்து, ஒருநாள் சர்வதேசப் போட்டி தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும் எனவும் போர்ட் தெரிவித்தார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிப்பட்ட குரோதமே சேவாக் நீக்கத்துக்கு காரணம்



இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒரு நாள் ஆட்டத்திலிருந்து வீரேந்திர சேவாக் நீக்கப்பட்டதற்கு அணித் தலைவர் டோனியின் தனிப்பட்ட குரோதமே காரணம் என்று பயிற்சியாளர் ஏ.என்.சுர்மா தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி தொடக்க ஆட்டக்காரரான வீரேந்திர சேவாக் பாகிஸ்தானுக்கெதிரான ஒரு நாள் பே பாட்டி தொடரில் எதிர்பார்ப்புக்கு ஏற்ப விளையாடவில்லை.

அண்மைக்காலமாக அவரது அதிரடி ஆட்டத்தில் தொய்வு ஏற்பட்டுள்ளது. அவர் ஒருநாள் போட்டியில் சதம் அடித்து இரண்டு ஆண்டுகள் கடந்து விட்டது. டெல்லியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற பாகிஸ்தானுக்கெதிரான கடைசி ஒருநாள் ஆட்டத்தில் விளையாடும் பதினொருவர் அணியிலும் சேவாக் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் இங்கிலாந்துக்கெதிரான முதல் 3 ஒரு நாள் ஆட்டத்துக்கான இந்திய அணியில் இருந்தும் சேவாக் நீக்கப்பட்டுள்ளார்.

2015 ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ள ஒருநாள் உலகக் கிண்ண தொடருக்கு இளம் வீரர்களை கொண்ட இந்திய அணியை உருவாக்கும் நோக்கில் தான் புஜாரா அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

34 வயதான சேவாக் உலகக் கிண்ண தொடர் வரை உடல் தகுதியுடன் நீடிப்பது என்பது முடியாத காரியம் என்று கருதி அவரை கழற்றி விட்டு இருப்பதாக கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் சேவாக் மீண்டும் ஒருநாள் அணியில் இடம் பிடிக்க வேண்டும் என்றால் உள்ளூர் போட்டியில் தொடர்ந்து ஓட்டங்கள் குவிக்க வேண்டியது அவசியமானதாகும்.

சேவாக் நீக்கப்பட்டதற்கு, அவரது இளம் வயது பயிற்சியாளரான ஏ.என்.சுர்மா எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இது குறித்து ர்மா கூறுகையில், இந்திய கிரிக்கெட் சபையும், அணித்தலைவர் டோனியும், சேவாக்குக்கெதிரான சில தனிப்பட்ட காரணத்துக்கான அவரை அணியில் இருந்து நீக்கி உள்ளனர் என்று நான் நினைக்கிறேன்.

பாகிஸ்தானுக்கெதிரான கடைசி ஒருநாள் ஆட்டத்தில் விளையாடும் பதினொருவர் அணியில் சேவாக்குக்கு இடம் அளிக்கப்படவில்லை என்றதும் அவருக்கு இங்கிலாந்துக்கெதிரான போட்டி தொடரில் வாய்ப்பு கிடைக்காது என்பது எனக்கு தெரியும்.

மோசமான ஓட்டங்கள் எடுத்தும் இந்திய அணியில் நீண்ட காலம் இடம் பெற்ற வீரர்கள் யார் என்பதை என்னால் சொல்ல முடியும். ஆனால் சேவாக் அப்படி நீடிக்கவில்லை என்றும் அணி தெரிவு முறையில் தவறு உள்ளது எனவும் கூறியுள்ளார். (5)

# தங்கப் பந்தும் மெஸ்ஸியும்

சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தங்கப் பந்து விருதை ஆர்ஜென்டின வீரர் லியனல் மெஸ்ஸி வெற்றிகொண்டுள்ளார். தொடர்ந்தும் 4 ஆவது முறையாக அவர் இந்த விருதை வெற்றிகொண்டுள்ளார்.

சுரிசில் இடம்பெற்ற விருது வழங்கல் விழாவில் அவர் தனது பார்சிலோ அணியின் சக வீரர் அன்ட்ரெஸ் இனியஸ்ரா மற்றும் ரியல் மட்ரிட் அணி வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆகியோரை வெற்றிகொண்டு இந்த விருதைப் பெற்றார்.

கடந்த ஆண்டு 91 கோல்களை மொத்தமாகப் பெற்றுக் கொண்ட லியனல் மெஸ்ஸி, அதுவரை காலமும் காணப்பட்ட 85 கோல்கள் என்ற உலக சாதனையையும் முறியடித்திருந்தார்.

அவரது 91 கோல்களில் 5 கோல்கள் ஸ்பானிஸ் கப் போட்டியிலும், 59 கோல்கள் லா லிகா போட்டியலும், 13 கோல்கள் சம்பயன்ஸ் லீக் போட்டியிலும், 2 கோல்கள் ஸ்பானிஸ் சுப்பர் கப் போட்டியிலும், 5 கோல்கள் உலகக்கிண்ணப் போட்டியிலும், 7 கோல்கள் ஏனைய சர்வதேசப் போட்டியிலும் பெறப்பட்டன.

சர்வதேச அணித்தலைவர்கள், பயிற்றுவிப்பாளர், ஊடகவியலாளர்களின் வாக்களிப்பன் மூலம் தெரிவுசெய்யப்பட்ட இந்த விருதில் லியனல் மெஸ்ஸி 41.60 சதவீத வாக்குகளையும், கிறிஸ்டியானோ ரொனால்டோ 23.68 சதவீத வாக்குகளையும், ஸ்பெய்னின் அன்ட்ரெஸ் இனியஸ்ரோ 10.91 சதவீத வாக்குகளையும் பெற்றனர். (5)


**கடைத்தொகுதி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், பண்டைத்தரிப்பு மாதகல்வீதியில் யூனியனுக்குமுன்பாக 12½ பரப்புக் காணியில் அமைந்துள்ள 6 கடைகளுடன் கூடிய கடைத்தொகுதி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு :

0772719485,0031225668676

**கணினி திருத்தம் Computer Repair**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள் -0779086737

GUNAA BEST PC 52, HOSPITAL ROAD, JAFFNA.

**Concrete Mixture விற்பனைக்கு**

பாவித்த நல்லநிலையிலுள்ள concrete mixture விற்பனைக்குண்டு.

- 2½Bag capasity, self loading reversiable type -01 NO
- 1 Bag capasity -01 NO

தொடர்பு : 0772014795

(28116)(7.6)

**MAHESH TRAVELS**

"மகேஸ்வரன் ட்ரவல்ஸ்" தினமும் பயணிகளுக்காக பஸ் சேவையில் ஈடுபட்டு வருகின்றது.

| | புறப்படும்நேரம் | சென்றடையும் நேரம் |
|---|---|---|
| கொழும்பு - | 9.30P.m | 6.00am |
| யாழ்ப்பாணம்- | 7.30P.m | 5.30am |

*வவுனியா *மாங்குளம் *கிளிநொச்சி *பரந்தன் * கொடிகாமம் *சாவகச்சேரி *கைதடி ஆகிய பிரதேசங்களிலிருந்து ஆசனப் பதிவுகளை மேற்கொள்ளும் பயணிகளுக்கு உங்களுக்குரிய ஆசனம் வழங்கப்படுவதோடு. ஆசனப்பதிவுக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

கட்டணம் 700/= ஆசனப்பதிவுக் கட்டனம் ~~100~~/= 600/= மட்டுமே

ஆசனப்பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்- 0776917691, 0777254199, 0777283565

குறிப்பு- கல்வியங்காடு, நல்லூர், நாச்சிமார் கோயிலடி, கொக்குவில், திருநெல்வேலி ஆகிய பிரதேசங்களில் உள்ள பயணிகள் ஆசனப்பதிவு மேற்கொண்டால் உங்களின் இடத்துக்கே வந்து ஏற்றப்படும்.

**German Language Academy**

ஜேர்மன் டொச் மொழிகள் தமிழ் மொழிபெயர்ப்புக்களுடன் "A"சான்றிதழுக்கு எற்றவாறு கற்பித்துக்கொடுக்கப்படும்.

12/12/2012 அன்று "A"பரீட்சையில் 9 மாணவர்கள் எமது நிறுவனத்தினுடாக சித்தியடைந்துள்ளார்கள்

(எமது நிறுவனத்தில் தமிழ் மொழி பெயர்ப்புக்களுடன் உள்ள டொச் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம் )

NO.23 Palaly Road Jaffna. Mr. Kones 0779707322

NO. 18, 1st Floor Jaffna Road, Nelliyadi

Sun British College Station Road Vavuniya.

French மொழிகளும் இங்கு கற்கலாம்

(28046)(6)


# மரணஅறிவித்தல்

## கணபதிப்பிள்ளை ஜெகசோதி J.P (சந்திரன்)



காரைநகர் தீர்த்தக் கரையைப் பிறப்பிடமாகவும் இல. 71, செட்டித்தெரு, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை ஜெகசோதி நேற்று(08.01.2013) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், நீலாம்பிகையின் அன்புக் கணவரும், சிவானந்தன்(பொறியியலாளர்), ராதா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜயந்தா(பொறியியலாளர்), ரவீந்திரன்(லண்டன்), ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான பாலகிருஸ்ணன், நித்தியானந்தம், மகேசன் மற்றும் பாலசிங்கம் (கனடா), காலஞ்சென்ற சிவசோதி மற்றும் அருட்சோதி, பரம்சோதி, ஞானசோதி, புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகரத்தினம், செல்வராணி, உமாதேவி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், யானுசா, கர்ஷா, அபிநயா, சீத்தானி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(10.01.2013) வியாழக்கிழமை காலை 8.00மணிக்கு அவரது இல.71, செட்டித்தெரு, நல்லூர். இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 71, செட்டித்தெரு, நல்லூர்.

தகவல்: [illegible]


**கணினி மலிவு விற்பனைக்கு**

HP FULL SET - 24750/= மட்டுமே

(17" LGD,IGB, DVD )

FREE வருட உத்தரவாதமும்

(WEB CAM/ HEAD PHONE/8GP PENDRIVE/ BAG)

- HP C2 58 LAP TOP- 49500/=
- IBM DUAL/C 3.4(FS) - 29750/=

எம்மிடம் அனைத்துவகையான கணனி உதிரிப்பாகங்கள் உண்டு

ST. ANTONY 'S 187, K.K.S Road Jaffna. 0212224865,0750698608

14ஆவது வருடசேவையில்

**ஆங்கில, சிங்கள வகுப்புக்கள் ஆரம்பம்**

அரச அங்கீகாரம் பெற்ற பிரபல ஆசிரியர்கள்

BRITO & A.K.MOORTHY (BA, MA, Mphil, MEd)

Sky COMPUTER(PVT)LTD. 162, MAIN STREET, JAFFNA. 021-222-1417

**வெளிவாரிப் பட்டப்படிப்புகள்**

யாழ்.பல்கலைக்கழகம், பேராதனைப்பல்கலைக்கழகம், கிழக்குப்பல்கலைக்கழகம்.

GAQ, B.A - I, B.A - II

துறைசார்ந்த நிபுணர்களால் விரிவுரைகள் நடத்தப்படுகின்றன.

ஆரம்பம் : 14/01/2013

பி.ப .3.00 மணி

ஸ்ரார் கல்வி நிலையம், சுன்னாகம்.

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

The Only Official Centre for French Language in Jaffna

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் "Alliance Française de Jaffna" மட்டுமே.

சர்வதேச தரம் வாய்ந்த Alliance Française de Jaffna இல் France மற்றும் (French) பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள். மேலும் தரமான CERTIFICATE ஐ பெறுங்கள்

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்.....

உங்கள் அனுமதிகளுக்கு முந்துங்கள். அழையுங்கள் 021 222 8093

61, Kachcheri-Nallur Road, Jaffna

E-mail: alliancejaffna@yahoo.com

(ருக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கத்திற்கு அடிமையாவது கண்ணை கட்டிக்கொண்டு விளையாடுவது போன்றது.
- எமர்சன்-

# புதன் பொய்கை A

உதயன் ஜனவரி 09 2013 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

# நம்பிக்கை இல்லாத வாழ்க்கை பயனற்றது...



இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா
உதவிப் பதிவாளர், மருத்துவபீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**நமது சமூகம் இன்று தன் நம்பிக்கையைத் தளர விடுவதாக எண்ண வைக்கும் பலவற்றை நாம் நாளாந் தம் உணர்கின்றோம். மலிந்து கிடக்கும் தற் கொலைகளும் தொடர்ந்து செல்லும் சமூகப் பிறழ்வுகளும் நம் நம்பிக்கைகளை தளர்ச்சியுறச் செய்கின்றன.**

எல்லோரும் தங்கள் வாழ்வில் நிறைய ஏக்கங்களையும் கனவுகளையும் சுமந்த வண்ணம் அந்தக் கனவுகள் மெய்ப்பட வேண்டும் என்ற இலக்குடன் தங்கள் வாழ்வை திசைப்படுத்துகின்றார்கள். எல்லோருக்கும் அவர்கள் கனவுகள் அனைத்தையும் தங்கள் வாழ்நாளில் அடைந்து விடும் பாக்கியம் கிடைத்துவிடுவதில்லை. அனுபவ வாயிலாக பார்க்கும் போது சில மனிதர்கள் கண்ட கனவு மூன்று தலைமுறை கள் தாண்டி அவர்களது பரம்பரை வழித்தோன்றல்கள் வாயிலாக நிறைவேறியிருப்பதையும் நாம் காண்கின்றோம்.

கனவுகளை காண்பதற்கும் ஏக்கங்களைச் சுமப்பதற்கும் எந்த மனிதனுக்கும் எந்த தடையும் கிடையாது. காணும் கனவுகளில் அவன் கொண்டிருக்கும் நம்பிக்கைதான் அந்தக் கனவுகளை நோக்கி அவனை உந்தித் தள்ளுகின்றது.

நம்பிக்கை என்பது வாழ்க்கையின் சுவாசக்காற்றைப் போன்றது. என்றைக்கு ஒரு மனிதன் தன்னுடைய நம்பிக்கையை தளர விடுகின்றானோ அன்றைக்கு அவன் வாழ்த லில் அர்த்தமற்றுப் போகின்றது.

இந்திய அணு விஞ்ஞானி முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் இராமேஸ்வரத்தில் பிறந்து எட்டமுடியாத உயரத்துக்கு வாழ்க்கையில் நிமிர்ந்தார் எனின் அதற்கு மூல காரணம் அவரது நம்பிக்கை. கலாமின் கனவுகள் பற்றிய அதிஉன்னதமான கருத்து

**''கனவு என்பது தூக்கத்தில் காண்பது அல்ல.**

**உன்னை தூங்கவிடாமற் செய்வது தான் கனவு''**

வெறுமனே கனவுகளை மட்டும் சுமக்கும் மனிதன் வாழ்வில் வெற்றியடைந்து விடுவது கிடையாது. கனவுகளை நனவாக்கும் வெறியுடன் எவனொருவன் உழைக்கின்றானோ அவனே வெற்றியை எட்டுகின்றான். மனிதர்கள் எல்லோரும் பிறப்பால் சமவாய்ப்புகளை கொண்டவர்களாகவே படைக்கப்படுகின்றார்கள்.



எந்த மனிதனும் பிறக்கும் போதே வரங்களை வாங்கிக் கொண்டும் வல்லமைகளைச் சுமந்து கொண்டும் பிறந்தது கிடையாது. அரசனாகப் பிறந்தவன் ஆண்டியாவதும் ஆண்டியாகப் பிறந்தவன் அரசனாவதும் உலகச் சுற்றோட்டத்தில் வழமை. ஆண்டியாவதும் அரசனாவதும் அவரவர் கைகளிலேயே தங்கியிருக்கின்றது.

வள்ளுவன் அருமையான ஒரு குறளை எமக்காக தந்திருக்கின்றார்

**''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு''**

நம்மில் பலர் இந்த குறளுக்கு எழுந்தமானமாக விளக்கம் தேடி இந்தக் குறள் வாழ்வின் நிலையாமையைக் குறிப்பதாக நினைத்துக் கொள்கின்றோம். ஆனால் இக் குறளின் உண்மையான உள்ளார்ந்த கருத்து இவ்வாறாக நோக்கத்தக்கது.

நேற்று ஒரு மனிதன் வாழ்ந்த வாழ்வில் இருந்து இன்று அவன் பல மடங்கு முன்னேற்றமான வாழ்க்கையையோ அல்லது பலமடங்கு பின்னடைவான வாழ்க்கை யையோ வாழலாம். அப்படி வாழ வைக்கும் வல்லமையை கொண்ட பெருமைமிக்கது இந்த உலகம். வழிப்பறித் திருடனாக இருந்த வான்மீகி, முனிவனாகி இராமகதையை தந்ததும் பெண் பித்தனாக இருந்த அருணகிரிநாதர் திருந்தி திருப்புகழைத் தந்ததும் இந்த உலக மாற்றத்துக்கு வலுவான உதாரணங்கள்.

ஏன் நமது சமூகத்தில் கூட இளவயதில் ஊதாரித்தனமாகத் திரிந்த பலர் இன்று ஊர் வாழ உழைப்பதை நாம் காண்பதில்லையா? ஒன்றுக்கும் உதவான் என கழித்து விடப்பட்ட பல மனிதர்கள் இன்று பலருக்கு உதவும் பக்குவத்தை நாம் அறிவதில்லையா? உலகம் விசித்திரமானது. மனிதர்களின் உள்ளார்ந்தமான நம்பிக்கைகளின் அடித்தளத்தில் அவர்களது வாழ்க்கையை உந்தித்தள்ளிவிடும் வல்லமை கொண்டது.

உலகத்துக்கே நம்பிக்கையின் மிகப்பெரும் உதாரணமாக திகழ்பவர்கள் ஜப்பானியர்கள். இரண்டாம் உலக மகா யுத்தம் ஜப்பானை முழுவதுமாக சப்பித் துப்பியபோது பலரும் ஜப்பானின் சகாப்தம் முடிந்ததாகக் கனவு கண்டார்கள். எல்லோருடைய கனவுகளையும் தகர்த்து இன்று ஜப்பான் உலகத் தொழில்நுட்ப வல்லரசாக நிமிர்ந்து நிற்கின்றது. ஜப்பானிய மக்கள் ஒவ்வொருவரின் நம்பிக்கையும்தான் அவர்கள் தேசத்தை செதுக்கியது.

நாஸிகளால் நாசம் செய்யப்பட்டு உலகத் திசை எங்கும் ஆதரவற்றவர்களாக துரத்தப்பட்ட யூதர்களின் அறிவுக்கு முன்னால் இன்று உலகம் மண்டியிட்டுக்கிடக்கின்றது. காலம் பல மாற்றங்களை தரும். அம் மாற்றங்களைச் உருவாக்க வல்ல நம்பிக்கைகளைச் சுமக்கும் மனிதர்களாக நாம் மாற வேண்டும்.

ஜப்பானிய பழமொழி ஒன்று சொல்கின்றது If you can do, I can do better than you do. உன்னால் முடியுமென்றால் என்னாலும் முடியும். உன்னைவிட சிறப்பாக முடியும். நம்பிக்கையின் வலிமையை உரைக்க இதைவிட இன்னொரு கருத்து தேவையேயில்லை. நமது சமூகம் இன்று தன் நம்பிக்கையைத் தளர விடுவதாக எண்ண வைக்கும் பலவற்றை நாம் நாளாந் தம் உணர்கின்றோம். மலிந்து கிடக்கும் தற் கொலைகளும் தொடர்ந்து செல்லும் சமூகப் பிறழ் வுகளும் நம் நம்பிக்கைகளை தளர்ச்சியுறச் செய்கின்றன. இது தேவையற்ற தளர்ச்சி.

இலகுவாக ஓர் உதாரணம் சொல்ல முடியும். யாழ்ப்பாணம் கறுத்தக் கொழும்பான் மாம்பழத்துக்கு பிரபலமானது. இந்த மாம்பழத்தை காயாக இருக்கும் போது எவனொருவன் சுவைப்பானாகில் மிகக் கடுமையான அனுபவத்தைப் பெறுவான். கடுமையான புளி. நார்த் தன்மையான அமைப்பு என உண்பதற்குத் தகுதியற்ற நிலையில் இருக்கும். அதுவே காலம் செல்லக் கனிந்து கனியாகும் போது அதன் சுவைக்கு நிகராக எதுவுமே இருக்க முடியாது.

இதுபோலத்தான் நமது வாழ்க்கையும். ஆரம்பத்தில் கசக்கின்றது என்பதற்காக நம்பிக்கையைத் தொலைத்து, வாழ்க்கையை வீணடித்து விடுவோமாக இருந்தால் கனிந்து சுவைக்கும் வாழ்க்கையை இழந்து விடுவோம்.

நம்பிக்கையும் விடாமுயற்சியும் நமது வாழ்க்கையைக் கனிய வைக்கும் மருத்துவங்கள். நம்பிக்கைகள் தொலையாது உழைப்பது மகிழ்வான வாழ்க்கையை எமக்காக்கும். நமது வாழ்க்கை நமது கைகளில். நம்பிக்கை கொண்டு நாளும் உழைப்போம். உலகம் எம் வசமாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மாணவனுக்காக இயங்கும் பாடசாலை



ஓர் ஆசிரியரைக் கொண்டு இயங்கும் பாடசாலைகளைப் பற்றி கேள்விப்பட்டு இருக்கிறோம். ஆனால் ஒரே ஒரு மாணவனுக்காக மட்டும் செயற்படும் பாடசாலை பற்றி இப்போது தெரியவந்துள்ளது.

சீனாவில் பூஜியான் என்ற மாநிலத்தில் இயங்கும் இந்தப் பாடசாலை கடந்த 2005 ஆம் ஆண்டு 24 வகுப்பறைகளுடன் தொடங்கப்பட்டது. ஆனால் ஒவ்வொரு ஆண்டும் கொஞ்சம் கொஞ்சமாக மாணவர்களின் வருகை குறையத் தொடங்கியது.

இந்தப் பாடசாலையில் 2 வருடங்களுக்கு முன்பு 80 பேர் கற்றனர். கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 17 ஆகக் குறைந்தது. தற்போது ஹுயாங் என்ற 8 வயது சிறுவன் மட்டுமே அங்கு கற்று வருகிறான். ஆனால் ஒருவர் மட்டுமே படிக்கிறார் என்பதற்காக அந்தப் பாடசாலை நிர்வாகம் சோர்ந்து விடவில்லை. வழக்கம்போல் 2 ஆசிரியைகள் அந்த மாணவனுக்கு அனைத்துப் பாடங்களையும் முறையான பாடத்திட்டப்படி நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஜப்பான் கடலில் மின்விளக்காய் ஒளிரும் மீன்கள்



ஜப்பான் கடற்கரைகளில் கடல் வாழ் உயிரினங்கள் அதிகமாகக் காணப் படுகின்றன. அவற்றின் உடலில் ஒளியைப் பிறப்பிக்கும் கலங்கள் காணப்படுவதால், நீல நிற ஒளியைப் பிறப்பித்த வண்ணமே அலை நீந்திக் கரையை அடைகின்றன.

# எயிட்ஸ் நோய்க்கு புதிய தடுப்பூசி

எய்ட்ஸ் நோயை தற்காலிகமாகக் கட்டுப்படுத்த தடுப்பூசி ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். உலகம் முழுவதும் தற்போது 3 கோடி 40 லட்சம் எய்ட்ஸ் நோயாளிகள் உள்ளனர். இந்தநோய்க்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்றாலும், எய்ட்ஸ் நோயை ஓரளவுக் குக் கட்டுப்படுத்தும் மருந்துகளை தற்போது எய்ட்ஸ் நோயாளிகள் உபயோகித்து வருகின்றனர். இந்தநிலையில் எய்ட்ஸ் நோய்க்கான புதிய தடுப்பூசி ஒன்றை ஸ்பெயின் நாட்டு பார்சிலோனா பல்கலைகழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். எய்ட்ஸ் நோயின் தாக்கம் உள்ளவர் கள் இந்தத் தடுப்பூசியைப் போட்டுக் கொண்டால் எய்ட்ஸ் கிருமிகள் வளர்வது தற்காலிகமாகக் கட்டுப் படுத்தப்படும். அதனால் நீண்ட நாள்கள் உயிர்வாழ முடியும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர். எய்ட்ஸ் கிருமிகள் உடலின் எதிர்ப்பு சக்தியை தான் பாதிக்கும். ஆனால் இந்தத் தடுப்பூசி எய்ட்ஸ் நோய் கிருமிக ளுக்கு எதிர்ப்பு சக்தியாக விளங்கும். 32 எய்ட்ஸ் நோயாளிகளுக்கு இந்தத் சோதனை செய்யப்பட்டு வெற்றியடைந்து விட்ட நிலையில், விரைவில் இந்தத் தடுப்பூசி பயன்பாட்டுக்கு வரும் என்று விஞ்ஞானிகள் கூறினர்.

# உங்கள் சிந்தனைக்கு...

★ நான்கு நாள் பழகியிருந்தாலும் நல்லவன் நல்லதையே செய்வான்., நாற்பது வருடங்கள் பழகியிருந்தாலும் கெட்டவன் கெட்டதையே செய்வான்.

★ நீ தைரியமான மனிதன் உன்னால் சாதிக்க முடியும் ஒருவரை வாழ்த்த வேறு வசனமே இல்லை.

★ சில நேரங்களில் யுக்தி வெற்றி பெறுகின்றது. பல நேரங்களில் வெற்றியே யுக்தியாகின்றது.

★ மனிதன் யாருடைய குறைகளை எண்ணிவிட முடியுமோ அவனே உயர்ந்த மனிதன்

★ நம்பிக்கையே தப்பானவர்கள் மேல் வைக்காதீர்கள். அதுவே உங்கள் வாழ்க்கையை அழித்துவிடும்.

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

# 24 மணிநேரத்தில்

சிந்து சிவதாஸ்
ஐங்கரன் வீதி, சுதுமலை தெற்கு
சுதுமலை.



★ நமது இதயம் 103689 தடவை துடிக்கிறது.

★ நமது இரத்தம் 2688000 கி.மீ தூரம் செல்கிறது.

★ நமது நகம் 0.004285 செ.மீ வளர்கிறது.

★ நமது உடல் 86.6 டிகிரி வெப்பத்தை வெளியேற்றுகிறது.

★ நாம் 23.43 தடவைகள் சுவாசிக்கிறோம்.

★ நாம்485 கன அடி காற்றை உள்ளிழுக்கிறோம்.

★ நாம் 70,09000 மூளை அணுக்களுக்கு வேலை கொடுக்கிறோம்.

# புற்றுநோயைக் குணப்படுத்தும் வண்டு



வண்டை விழுங்குவதனூடாக புற்றுநோயைக் குணப்படுத்தும் சிகிச்சை முறையொன்று பேரு நாட்டில் முன்னெடுக்கப்படுகின்றது. பேரு நாட்டின் தலைநகரமான லிமாவில், ரோஸா எஸ்டிேனோஸா என்பவரின் மேற்பார்வையில் இந்தச் சிகிச்சை முறை முன்னெடுக்கப்படுகின்றது.

ஸ்பானிஷ் பூச்சி என்று அழைக் கப்படும் வண்டை புற்று நோயாளி கள் தினமும் விழுங்க வேண்டும். அந்த வண்டு நோயாளிகளின் வயிற்றில் இறந்தவுடன் அதன் உடலில் இருந்து வெளிப்படும் ஹோர்மோன் புற்றுநோயை குணப்படுத்துகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைத்திய முறையை அறிந்த புற்று நோயால் பாதிக்கப்பட்ட பலர் பேரு நாட்டுக்குப் படையெடுப்பதாக செய்தி வெளியிட்டுள்ளன.

# வாழ்க்கையை நேசியுங்கள்



அன்னை சொல் ஒரு போதும்
மீறாதே
அவளின் மனக்குமுறல் உன்
வாழ்வை இருளாக்கும்
துன்பத்தில் மட்டுமே இறைவனை
நினைக்கும் நீ
இன்பத்திலும் ஒரு தடவை நினை
மானிடனாக வாழ விரும்பினால்–
என்றும்
மனச்சாட்சிப்படி நட
ஏழைகளை அற்பமாய் நோக்காதே
நாளை உனக்கும் அந்த நிலை
வரலாம்
சிதைவுக்கு உள்ளாகி சின்னங்கள்
அழியலாம்
உண்மை அன்பு சிதைவினால்
அழியாது
மூத்தோரை பணிந்து நட–
அவர்கள்
ஆசீர்வாதம் என்றைக்கும்
கிடைக்கும்
வாழ்வில் பொறுமையாக
இரு– உனக்கு
கிடைக்கவேண்டியவை
கிடைத்துவிடும்
நட்பினை தேடி அலையாதே–
உனக்கு உற்ற நண்பன்
உன் கண்ணீரே தான்
துன்பத்தைக் கண்டு துவண்டு
விடாதே– அது
நாம் கற்றுக் கொள்கின்ற
பாடம்தான்



போ.சித்திரா
மானிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொருவருக்கும்......

-இணையவன்

மன நோயாளிகளைப் பற்றிய எமது சமூகப் பார்வை மிக மிகத் தவறானதாகவே இருக்கிறது. எம் சொந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மன நோயாளிகளைக் கூட நாம் ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறோம். அவர்களை மதிப்பதில்லை. மன நல மருத்துவரிடம் கூட்டிச் செல்வதில்லை.

அவர்களைக் கட்டிப்போட்டுத் துன்புறுத்துகிறோம்! அடித்து உதைக்கிறோம். கடவுள் முன் அவர்களைக் கட்டிப்போட்டு வதைக்கிறோம்.

இந்த மனப்பாங்கு மாற வேண்டும். உண்மையில் மன நோயும் ஒரு வகை உடல் நோய்தான். நரம்பு மண்டலக் குறைபாடு காரணமாக ஏற்படும் நோய்! மருந்து, மருத்துவம், அன்பு, பாதுகாப்பு மூலம் பெரும்பாலான நோய்களைக் குணப்படுத்த முடியும். மனநோயாளிகளில் மிகமிகச் சிறிய சதவீதத்தினர் மட்டும்தான் முரட்டுத்தனமாகச் செயற்படுவார்கள். இவர்களை மருத்துவ மனைகளில் வைத்துக் குணப்படுத்தலாம்.

மூளை, நரம்பியல் குறைபாடுகள் இன்று எல்லாத் தரப்பு மக்களிடையிலும், எல்லா வயதிலும் கண்டறியப்படுகின்றன. மருத்துவம் மூலம் சரி செய்யப்படுகின்றன. மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகள், தற்கொலை செய்து கொள்ள நினைக்கும் இளைஞர்கள், நினைவாற்றலை இழக்கும் முதியவர்கள் இவர்களுக்கெல்லாம் இன்று உளவியல் துணை நிற்கிறது.

இப்படிப்பட்ட நரம்பியல் குறைபாடுகள் உள்ளவர்களுக்கு மட்டும்தான் உளவியலா? இல்லை, எல்லோருக்குமா?



எம் ஒவ்வொருவருக்கும் உடல் நலம் எவ்வளவு முக்கியமோ அதே போல் மன நலமும் முக்கியம். உடல் நலத்தைப் பாதுகாக்க பல வழிகள் இருப்பதுபோல் மன நலத்தைப் பாதுகாக்கவும் பல வழிகளை எமது முன்னோர்கள் கற்றுத் தந்திருக்கிறார்கள்.

இறை வழிபாடு எமது மன நலத்துக்குப் பெரிதும் பயன்படுகிறது. தோல்வியையும் துன்பத்தையும் கண்டு துவண்டு போகாமலிருக்க வழிபாடு துணை நிற்கிறது.

வெற்றிக் களிப்பில் வரும் ஆணவத்தால் நாம் அழிந்து போகாமல் இருக்கவும் தன்னடக்கத்தை வளர்க்கவும் வழிபாடு பயன்படுகிறது.

மன அழுத்தம், மன இறுக்கத்தைக் குறைக்கத் தியான முறைகள் பயன்படுகின்றன! எத்தனை எத்தனை வகையான தியான முறைகள். அவற்றுக்கு உலகெங்கும் இன்று எவ்வளவு பெரிய வரவேற்பு.



இப்படிக் காலம் காலமாக நமது மனநல வளர்ச்சிக்குப் பயன்பட்டு வந்த வழிபாடு, தியானம், தத்துவம் சார்ந்த பல்வேறு முயற்சிகளின் இன்றைய அறிவியல் வடிவம்தான் உளவியல். இன்றைய உளவியல் வல்லுநர்கள் நோயாளிகளுக்கு மருத்துவம் பார்ப்பதோடு நிற்பதில்லை. அவர்களின் பணி மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இன்றைய அவசர உலகில் உணர்வுகள் பாதிக்கப்பட்டு உறவுகள் சிதைவடைந்து வாழும் பலருக்கும் உளவியல் மருத்துவம் செய்யப்படுகிறது. அத்தோடு ஆலோசனையும் கூறி வழிகாட்டுகிறது.

குடும்பச் சிக்கல்கள், கணவன், மனைவி, குழந்தைகளின் உறவு மேம்பட உதவி, அலுவலக மன உளைச்சலில் இருந்து விடுபட வழிமுறைகள், முதியவர் மனநலப் பயிற்சிகள், மாணவர், தொழிலாளர்களுக்கான ஊக்குவிப்புப் பயிற்சிகள்... இப்படி நம் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு வகையில் உளவியல் வழிகாட்டுகிறது.

ஆன்மிகவாதிகள் பலரும் இன்று இந்த உளவியல் நெறிகளுடன் கலந்து நமக்கு வழிகாட்ட முன்வருகிறார்கள்.

எம் ஒவ்வொருவருக்கும் மனநலம் முக்கியம். ஆன்மிக வழியிலோ, உளவியல் வழியிலோ அல்லது இரண்டும் கலந்த வழியிலோ, நமது மன நலத்தைப் பேணி வளர்த்துக் கொள்வோம்.

எம் மனநலத்தைப் பேணி வளர்ப்பது எப்படி? நல்ல கேள்விதான். இதற்கு விடை தேடும் முன்னர் வேறொரு கேள்வி! எமக்கு வாழ்க்கை இனிக்கிறதா? கசக்கிறதா? ★

## எப்படியிருக்கு பாருங்கோ...

எங்கட பரிபாலனத்தாருக்கு சப்பாத்து நூல் கட்டி விட்டவரை பணியிலிருந்து நிறுத்தியதால் வடமாகாண சபை அலுவலர்கள் பலரது முகத்தில் சந்தோஷ ரேகை ''பளிச்'' என்று தெரியுது பாருங்கோ... அந்தளவுக்கு தலையிருக்கேக்கையே வால் ஆடினது.

நாட்டாமைக்கு அடிக்கடி இப்ப கழுத்து வலி வருகுதாம். ( கடுமையாய் வேலை செய்யிறார் போல ?) இதால ஒவ்வொரு கிழமையும் ஒவ்வொரு 'கொலர்' வாங்கி கழுத்துக்குப் போட்டுக் கொள்கிறார். அந்தக் 'கொலரையும்' அவர் காசுக்கோ, அல்லது வைத்தியசாலைக்குப் போய் வாங்குவதாகவோ கேள்விப்படவில்லை.

கழுத்து நோ வந்ததும் மருத்துவத்துக்குப் பொறுப்பாக இருக்கும் தனது வடமாகாணசபையின் யாழ். பிராந்திய அதிகாரிக்கு ஒரு 'போன் கோல்'. அவ்வளவுதான் 'கொலர்' புதுசு புதுசா நாட்டாமையின்ர பங்களாவுக்குப் போய்ச் சேரும்.




இந்தளவுக்கும் அந்த யாழ். பிராந்திய அதிகாரி தனது சொந்தக் காசில வெளியில பிறைவேற்றாத்தான் 'கொலரை' வாங்கிக் கொடுக்கிறார் எண்டு கேள்வி. அந்தளவுக்கு பெரியவரின்ரை உத்தரவுக்குப் பயம். இல்லாட்டி தன்ர சீற் கிழிஞ்சிடும் என்றும் பயம்.

இதைவிட சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நாட்டாமையின் எடுபிடிகள் மீன் வாங்கப் போறதுக்கும், பீச்சுக்குப் போறதுக்கும் திணைக்கள வாகனங்கள்தான் பயன்படுத்தப்படுகின்றன. எடுபிடிகள் திணைக்களத் தலைவர்களுக்கு வாகனத்தைக் கொண்டு வரச் சொன்னா 'ஏ.சி' வாகனம்தான் கொண்டு போக வேண்டுமாம். மற்றைய வாகனங்கள் கொண்டுபோனால் எடுபிடிகள் திருப்பி அனுப்பிப் போடுவினமாம்.

அந்தளவுக்கு திறமையாய் நடக்குது எங்க [illegible] பாருங்கோவன் !

-நக்கல் நரசிம்மன்.

## உதயனை விமர்சியுங்கள்

விளம்பரங்களை அதிகளவு பெற்றுக்கொள்ளும் பத்திரிகையே வாசகர் மத்தியில் பெயர் பெற்ற பத்திரிகையாக விளங்கும். அந்தவகையில் கடந்த 27 வருடங்களாக யாழ்ப்பாணத்தில் பத்திரிகைத் துறையில் தனியிடம் பிடித்து அதிகளவான வாசகர் களைப் பெற்றுள்ள உதயன் பத்திரி கைக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

உதயன் பத்திரிகையை நான் பாடசாலையில் படிக்கும் காலம் முதல் வாசிக்கிறேன். ஆரம்பத்தில் தனிச் செய்திகளுக்கு மட்டும் முன்னுரிமை கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி சுவாரசியமான தகவல்களை வெளியிட்டு வருவது வாசகர்களை இன்னும் அதிகளவு உள்வாங்குவதற்கு சாதகமாக அமைந்துள்ளது.

எனினும் உள்ளூர் செய்திகள் உதயன் பத்திரிகையில் மிகக் குறைவா கவே உள்ளன. எனவே அதனை உள் வாங்கி எமது பிரதேச மக்களின் பிரச்சினைகளை உதயன் பத்திரிகை வெளிக்கொணர வேண்டும் என்பதே என்னுடைய அவா.

எஸ்.கமலக்கண்ணன், நுணாவில்

★ ★ ★

யாழ். மண்ணில் எத்தனை பத்திரிகைகள் மலிந்து காளான்களைப் போன்று முளைத்தாலும் முதலிடம் உதயனுக்குத்தான். கடந்த 27 ஆண்டுகளாக அதன் வாசகனாக இருக்கும் எனக்கு அதனை விமர்சிப்பதற்கும் போதிய உரிமை உண்டு.

குறிப்பாக சில முக்கியமான செய்திகள் ஏனைய பத்திரிகைகளில் தலைப் புச் செய்தியாக வரும்போது உதயனில் அவ்வாறு வெளிவருவதில்லை. உதாரணமாக யாழ். பல்கலைக் கழகத்தை மூடுவேன் என்ற உயர்கல்வி அமைச்சரின் இறுமாப்புக் கலந்த வார்த்தைகள். மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமுள்ள பிரதேச சபைகளின் இழுபறி நிலை தொடர்பாக இதுவரை உதயன் இடித்துரைக்க வில்லை. இந்த நிலை மாற வேண்டும்.

சில எழுத்துப்பிழைகள் அண்மைக் காலமாக காணப்படுகின்றன. ஒப்பு நோக்குநர்கள் இதனை மேன் மேலும் வளரவிடாது பார்த்துக் கொள்ள வேண்டும். சில செய்திகள் காலம் தாழ்த்தி தாமதமாக வெளி வருகின்றன. இந்தக் குறைபாடும் உடனடியாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும். என்றென்றும் அசைக்க முடியாத நிலையில் மக்கள் மனங்களில் நிறைந்திருக்கும் உதயன் மேலே கூறியவற்றை தவிர்ப்பாணாகில் அவனது புகழும் மதிப்பும் மேன்மேலும் ஓங்கும் என்பதில் ஐயமில்லை.

த.இராசரத்தினம், சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெ.இறையன்பு

# மகிழ்ச்சி எங்கே இருக்கிறது..?

மகிழ்ச்சி வெளியே தெரியும் ஒரு பொருளல்ல. நிலைத்த சந்தோசத்தில் உள்ளோரின் முகத்தில் உள்ள மகிழ்ச்சி ஒருவகை. வயிறு குலுங்கச் சிரிப்போரின் மகிழ்ச்சி ஒருவகை. இரண்டையும் ஒரே புள்ளியில் இணைப்பதே இன்பத்தின் இரகசியம்.

அழகான பொருள்கள் எப்போதும் மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கின்றன என்கிறார் கீட்ஸ். உண்மை அது மட்டுமல்ல, மகிழ்ச்சியாக இருக்கும் போது, பார்க்கும் பொருள்கள் எல்லாம் அழகாகிவிடுகின்றன என்றுதான் அந்தக் கவிதையை நிறைவு செய்ய முடியும்.

சில நேரங்களில் மிக அழகான பெண்ணுக்குச் சிறிதும் பொருந்தாத மணமகன் அமைந்திருப்பதை பார்த்து பரிதாபப்படுவோம்.

விசாரித்தால் அது காதல் திருமணம் என்னும் அதிர்ச்சியான செய்தி கசியும். இந்தப் பெண் அந்த ஆணுக்கு எப்படி அறிமுகமானாள். எப்படி அவன் மீது காதல் கொண்டாள்? என்று மண்டையைக் குழப்பிக் கொள்வோம். வேறொன்றுமில்லை இவ்வளவு அழகான பெண் நமக்கு கிடைக்கவில்லையே. நாம் என்ன குறைந்தா போய் விட்டோம்! என்கிற பொறாமைதான்.

அந்தப் பெண், மிக மகிழ்ச்சியான ஒரு தருணத்தில் அந்த ஆணை சந்தித்திருக்க வேண்டும். அது, அவளை அந்த ஆண் மகனை நோக்கி ஈர்த்திருக்க வேண்டும். மணம், உடனடியாக மனதில் பதிந்து விடுகிறது. அடுத்தமுறை அந்த நறுமணத்தை நாசி நுகர நேர்ந்தால், முதல் முறை நிகழ்ந்த அனுபவம் நினைவுக்கு வருகிறது.

எல்லாம் இருந்தும் வெறுமையாய் உணர்பவர்கள் இருக்கிறார்கள். எதுவுமே இல்லாமல் மகிழ்ச்சியோடு வாழ்பவர்களும் இருக்கிறார்கள். சிரித்தால் பல் வழியே பணம் நழுவிவிடுமோ என நடுங்கிச் சிரிக்காமலேயே முகத்தை எப்போதும் உர்ரென்று வைத்திருக்கும் பணக்காரர்களும் உள்ளனர். எங்களிடம் இழக்க எதுவுமில்லை என களித்திருக்கும் ஏழைகளும் இருக்கிறார்கள்.

மகிழ்ச்சியான சம்பவம் ஒன்று நடந்ததும், உலகமே தன் காலடியில் கிடப்பதைப் போல் இறுமாந்திருப்பவர்களும் உள்ளனர். அந்த நேரத்தில் அவர்களைப் பார்ப்பவர்களுக்கு, ஆணவத்துடன் நடந்து கொள்கிறார்களோ? என்று கூட நினைக்கத் தோன்றும்.

ஆனால் ஐஸ்கிரீமை பார்த்ததும் துள்ளிக் குதிக்கும் குழந்தையின் மனநிலை அது என்பது முதிர்ச்சி அடைந்தவர்களுக்குத் தெரியும். வெளியே ததும்பும் மகிழ்ச்சியை நெறிப்படுத்தத் தெரிந்தால், எந்த நொடியிலும் கலங்காமல் வாழ முடியும். ஆனால், சந்தோஷத்தில் தலை, கால் புரியாமல் எகிறிக் குதிப்பவனுக்கு எந்த நேரத்தில் வேண்டுமானாலும் எலும்புமுறியலாம்!



மகிழ்ச்சியை ஒரு கட்டுக்குள் வைத்து நெறிப்படுத்துபவனால் அதை நீடிக்கச் செய்ய இயலும். வாழ்வின் வாய்ப்புகளே அதற்கு வழி வகுக்கின்றன. பெரிய வெற்றி வரும்போது சின்னத் தோல்வியும் நமக்கு ஏற்படுகிறதல்லவா. இது கோப்பையைப் பெற்றுக் கொண்டு பெருமிதத்துடன் ஓடி வருபவனின் காலில் கல் இடறி காயம் உண்டாவதைப் போன்றது. நமது மகிழ்ச்சி மிதமிஞ்சிவிடாமல் அதை ஒரு கட்டுக்குள் வைத்து உடலையும் உள்ளத்தையும் சீராக்க வேண்டும். இதற்காக நாம் விதியை வீதிக்கு இழுக்க வேண்டியதில்லை.

மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்காதவன், துயரத்தில் சுருங்கிப்போவது இல்லை. சுனாமியின் போது, கடல் பொங்குவதற்கு முன் உள்வாங்கியதாக கரையில் இருந்த மீனவர்கள் சாட்சி சொல்கின்றனர். அலைகள் வரும் பகுதி, கடலின் மேற்போக்கான பகுதி, ஆழமான பகுதி சலனமற்று இருக்கிறது.

வள்ளுவர் கூட இன்பத்துள் இன்பம் விளையாதவனை துன்பம் தொடர்வதில்லை எனக் குறிப்பிடுகிறார். இன்று நிறையப் பேர் குடும்பத்துடன் குதூகலமாக இருப்பதாகக் காட்டிக் கொள்கின்றனர். பலரும் பார்க்கும்படி கைகோர்த்துக் கொண்டு போகும் தம்பதியர் எல்லாம் மகிழ்ச்சியில் மிதக்கிறார்கள் என்று எண்ண வேண்டியதுமில்லை.

எப்போதும் இன்புற்றிருப்பவர்கள் தங்களின் சந்தோஷத்தை வெளிக்காட்ட வேண்டிய அவசியமே இல்லாமல். மனதில் பூரணமாக நிறைந்திருக்கிறார்கள்.

சிரிக்கும் பல கண்களை உற்றுக் கவனித்தால், அவற்றில் நிறைவேறாத ஏக்கங்க்ள் ததும்பி இருப்பதைக் காணலாம். தளும்பியிருக்கும் சிலருடைய விழிகளில், கருணையும் அன்பும் பொங்கி வழிவதைக் காணலாம்.

எப்படியாவது இவனை சாய்த்து விட மாட்டோமா என இயற்கை காத்திருக் கிறது. மகிழ்ச்சியில் நன்நிலையை, இலக்கை, நெறியை முற்றிலுமாகத் தவறவிடுவதே ஊழ். அதுதான் சிலப்பதி காரத்தில் உறுத்து வந்து ஊட்டியது.

ஓரிடத்தில் துரோகம், இன்னோர் இடத்தில் பழியாக இடறியது. அதனால்தான் கோவலனின் மகிழ்ச்சி எல்லை மீறியது, மாதவியின் நடனத்தை ரசித்த அவன், அவளையே ரசிக்க ஆரம்பித்தான். சிதையவும் தொடங்கினான்.

எமது மகிழ்ச்சியை எல்லோருக்கும் தம்பட்டம் அடிக்கும் அவசியம் இல்லை என்று எண்ணும் நிலையே ஆன்மிக மனநிலை. அப்படிப்பட்டவர்களின் அருகில் கண்மூடி சிறிது நேரம் அமர்ந்தால் போதும். நம் மனத்திலும் இனம் புரியாத சிலிர்ப்பும், எழுச்சியும் ஏற்படும். அவர்களின் புன்னகை நம் காயங்களை ஆற்றுப்படுத்தும்.

அதற்காக, மகிழ்ச்சியில் கொண்டாட்டங்கள் தேவையில்லை என்பதல்ல. சின்னச் சின்ன நிகழ்வுகளையும் திருவிழாவாக்கத் தெரிந்தவன், பகிர்ந்து கொள்வதையே மகிழ்ச்சியான நிகழ்ச்சியாக மாற்றிக் கொள்கிறான். தேநீர் அருந்துவதும் திரு விழாவாகும். ஆனால், அது மேம்போக்கான கேளிக்கையாக இல்லாமல், உள்ளார்ந்த புரிதலாக நிகழும்; வானத்தைப் பிடிக்கும் ஆசையில் பூமியை விட்டு விலகாத யதார்த்தமான மனப்பான்மையாகத் திகழும்; அடுத்தவர்களைத் துன்புறுத்தாது, அனைவரையும் ஈர்க்கின்ற பேரின்ப நிகழ்வாக அது மலரும்.

★★★

# கைபேசிகளால் சீரழிவு...

வலைஞன்



பிள்ளை பெறுவது பெரிதல்ல! அதைப் பேணி வளர்ப்பதுதான் பெரிது என்று பெரியவர்கள் சொல்வார்கள். இன்று நாம் நமது பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டும் என்று பள்ளிக்கு அனுப்புகிறோம்.

காலையில் செல்லும் பிள்ளைகள் மாலையில் திரும்புகின்றனர். தினமும் பள்ளிக்குப் போய் படித்து விட்டு வருகின்றனர் என்று நாம் திருப்திப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

யாரேனும் ஒரு பள்ளி மாணவி, யாருடனோ ஓடி விட்டாள் என்று தகவல் வரும் போது, நம் பிள்ளை அப்படி எல்லாம் போகாது; நம் பிள்ளை தங்கக் கட்டி என்று ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் மீது தளராத நம்பிக்கை வைத்திருக்கின்றனர்.

பிள்ளைகள் மீது இப்படி ஒரு நம்பிக்கை வைத்திருப்பதில் தவறில்லை. இருக்க வேண்டியதுதான். ஆனால் தன் பிள்ளைகளின் நடவடிக்கை மீது ஒரு கண் வைக்காமல் இருப்பது, கவனிக்காமல் இருப்பது மிகப் பெரிய ஆபத்தை வரவழைத்து விடுகின்றது. குறிப்பாக இன்றைய காலத்து சினிமாக் கலாசாரம் மாணவ, மாணவியரைப் பல தவறான பாதைகளுக்கு அழைத்துச் செல்கின்றது.

பள்ளி விட்டு வந்ததும் நமது பிள்ளைகள் பாடம் படிப்பதை விட்டு விட்டு, படம் பார்க்கும் சூழ்நிலைக்குத் தள்ளப் படுகின்றனர். சீரியல்களின் பிடியில் கட்டுண்டு இருக்கும் நாம் டி.வியைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது நமது பிள்ளைகளும் அதைப் பார்க்கின்றனர்.

சினிமாக் காட்சிகள், ஆபாசக் காட்சிகள் அப்பட்டமாக அப்படியே காட்டப்படுகின்றன. இந்தக் காட்சிகளைத்தான் டி.விகளில் பெற்றோர், பிள்ளைகள் என அனைவரும் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

மாணவ, மாணவியர் எப்படிக் காதலிக்க வேண்டும் என்ற கேடுகெட்ட கலாசாரத்தையும் டி.விக்கள் கற்றுக் கொடுக்கின்றன. இதையும் பெற்றோர் சேர்ந்து கொண்டுதான் பார்க்கின்றனர். விளைவு, பிள்ளைகள் பரீட்சையில் கோட்டைவிடுகின்றனர். உடனே பெற்றோர்கள் பிள்ளைகளைத் திட்டுகின்றனர். அவர்கள் தேர்வில் தோற்றதற்குத் தாங்களும் ஒரு காரணம் என்பதைப் பெற்றோர்கள் மறந்து விடுகின்றனர்.

செல்லப் பிள்ளைக்கு ஒரு செல்போன். பெற்றோர் செய்யும் மற்றொரு பெரிய தவறு. தங்கள் பிள்ளைகளுக்குச் செல்போன்கள் வாங்கிக் கொடுப்பதாகும். இது பிள்ளைகளின் படிப்பைப் பாழாக்குவதன் காரணத்தால்தான் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் போன்ற இடங்களில் பாட நேரத்தில் செல்போனைப் பயன்படுத்துவதற்குத் தடை விதித்துள்ளனர். செல்போன்களால் படிப்பு பாழாகின்றது என்பதற்கு இது சிறந்த சான்றாகும்.

செல்போன்கள் இவ்வாறு படிப்பை மட்டும் பாழாக்கவில்லை. அவர்களுடைய ஒழுக்க வாழ்வையும் பாழாக்கிக் கொண்டிருக்கிறது. பல்வேறு முனைகளில் செல்போன்கள் நமது பிள்ளைகளை ஒழுக்கக் கேட்டுக்கும், சீரழிவுக்கும் இழுத்துச் செல்கின்றன.

செல்போன் இல்லாவிட்டால் பள்ளி செல்லும் ஆண், பெண் பிள்ளைகள் அனைத்து நடவடிக்கைகளின் மீதும் முழுக் கவனம் செலுத்துவார்கள் என்பது நிச்சயம்.

இந்த நிலையில் ஒவ்வொருவரும் தமது பொறுப்புக்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். நீங்கள் உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் நரக நெருப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். நரக நெருப்பின் விறகுகளாக நாம் மாறிவிடாதிருக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

இவ்வுலகில் நாகரிகத்தையும், கௌரவத்தையும், அந்தஸ்தையும் விட மானம், மரியாதை மிக முக்கியம் என்பதை உணர்ந்து செயற்படுவோம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### சுந்தரம் பரந்தாமன் (சமாதான நீதிவான்)



உடுப்பிட்டி வடக்கு, கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும், ஓலுமடு, மாங்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு.சுந்தரம் பரந்தாமன் துணுக்காய் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி சமகாலங்களில் மாங்குளம் ஓலுமடு கிராமோதய சபைத் தலைவராகவும், வவுனியா வடக்கு ப.நோ.கூ சங்க இயக்குநர் சபை உறுப்பினராகவும், ஓலுமடுக் கிராமத்தில் மக்களுக்கு பல்வேறு நலன்புரி சேவைகளுக்காக சமூக சேவை செய்ததன் பயனாக 31.12.2012 திங்கட்கிழமை வவுனியா மேல் நீதிமன்ற நீதவான் திரு. A.G. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவரது பணி மேன்மேலும் சிறக்க இறைவனை வேண்டுவதோடு, அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பொ.அருமைச்சந்திரன் குடும்பம், பருத்தித்துறை.

## சறுக்கி வயலுக்குள் பாய்ந்தது வாகனம்

தென்மராட்சி, ஜன.9

மழை பெய்து கொண்டிருந்த வேளையில் வீதி வளைவில் வாகனத்தை முந்திச் செல்ல முயன்ற மற்றொரு வாகனம் சில்லுச் சறுக்கிய தில் வீதியை விட்டு விலகி நெல் வயலுக்குள் பாய்ந்தது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கைதடிப் பாலத்துக்கு அருகில் இடம்பெற்றது. (வ-9)

## கண்ணீர் அஞ்சலி



எமது திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் திருமதி அமுதசொரூபன் தயாளினி அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சண்முகம் பேரின்பமலர்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கமநல அபிவிருத்தித் திணைக்கள சமூகம் யாழ்ப்பாணம்.

(28060)(5-6-7)

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு—

advt@uthayan.com
0215671111

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
21.05.1923

மறைவு
08.12.2012

**அமரர் சதாசிவம் சற்குணம்**

கடந்த 08.12.2012 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் சதாசிவம் சற்குணம் அவர்களின் சபிண்டீகரண கிரியைகள் இன்று (09.01.2013) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

கேணியடி
மீசாலை மேற்கு.
மீசாலை..

குடும்பத்தினர்.

(சி/2865)(6.7.4)

## காணி விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் வீதியில் அண்ணாமலைசந்தியில், பிரதான வீதியில், 5 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 6653323.

(27843)(6.7.4)

## காணி விற்பனைக்கு

உடையார் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் உள்ள கிணற்றுடன் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 1133375,
0041 772910427.

(27566) (6.7.4)

## மலிவு விற்பனை

ஜனவரி 07ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை மொரட்டுவையில் இருந்து கொண்டுவரப்பட்ட கதிரை செற்கள், சாப்பாட்டு மேசைகள், அலுமாரிகள், கட்டில்கள் மற்றும் வீட்டுக்குத் தேவையான அனைத்து தளபாடங்களும் மிக குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள.

மொரட்டுவ தளபாட விற்பனை நிலையம்
(பூட்சிட்டிக்கு அருகில்)234,கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

(28049)(5-6-7)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

**கந்தையா தங்கம்மா**

மலர்வு
21.05.1930

உதிர்வு
10.12.2012

கடந்த 10.12.2012 திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் குல விளக்கின் வீட்டுக்கிருத்திய கிரியை இன்று ( 09.01.2013 ) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்தி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சாத்தாவத்தை லேன்,
சுதுமலை வடக்கு,மானிப்பாய்.

பிள்ளைகள்.

(28082)(6.7.4)


வடக்கின் மிகப்பிரசித்திவாய்ந்த இக்கண்காட்சி, வடபகுதி மக்களுக்கான மிகச்சிறந்த வர்த்தகக் களமாக அமையவுள்ளது.

உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் சேவைகள், விசேட உணவு வகைகள் மற்றும் குடிபானங்கள், உங்கள் வீட்டுக்கு தேவையான அனைத்து உபகரணங்கள், கட்டட நிர்மாண பொருட்கள் மற்றும் உபகரணங்கள், அழகுசாதன மற்றும் ஒப்பனை சேவைகள் இக்காண்காட்சியில் இடம்பெறும் பிரதான அம்சங்களாகும்.

அத்துடன் தென்னிலங்கையைச் சேர்ந்த முன்னணி இசைக்குழுவினரின் இசைநிகழ்வுகளுடன் கூடிய களியாட்டமும் ரசிகர்களை மகிழ்ச்சிப்படுத்தவுள்ளது.

தினசரி இசை நிகழ்ச்சி







யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 2013

JITF 2013
JAFFNA INTERNATIONAL TRADE FAIR
4th Edition

உடன் இணைந்து
கல்வி யாழ்ப்பாணம்

ஜனவரி 18ம் 19ம் 20ம் திகதிகளில்
மு.ப 10.00 தொடக்கம் பி.ப 8.00 வரை
துரையப்பா விளையாட்டரங்கில்

Organized by
LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED

In Association with
CCIY
Consulate General of India Jaffna

Gold Sponsor
dimo TECHNOLOGY

Co-Sponsors
Necto
Elephant House

Education Partners
ICBT CAMPUS
CINEC

Co-Organized by
FCCISL

Supported by
Jaffna Municipal Council
SRI LANKA CONVENTION BUREAU

Official Logistic Provider
Official Insurance Partner
Official Print Media-Tamil
Official Electronic Media
Official Leasing Partner


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினாதீவுக்கு நல்ல நிலையிலுள்ள பஸ்ஸை சேவையில் ஈடுபடுத்தவும்

### அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.9

நயினாதீவு பிரதேசத்தில் மக்கள் பயன்பாட்டுக்கு நல்ல நிலையில் உள்ள பஸ்ஸை சேவையில் ஈடுபடுத்துமாறு பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

தற்போது மேற்படி பிரதேசத்தில் சேவையில் ஈடுபடவென வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றை சேவையில் ஈடுபடுத்தி யிருந்தது. அந்த பஸ் பயணிகளை ஏற்றிய பின்னர் செயற்படாத நிலை ஏற்படும். பின்னர் பயணிகளால் பஸ்ஸை நகர்த்தி இயங்க வைத்தே செயற்படுகின்றது.எனவே இவ்வாறு செயற்படும் பஸ்ஸிற்குப் பதிலாக நல்ல நிலையில் உள்ள பஸ்களை அனுப்பிவைக்குமாறும் மக்கள் கேட்டுள்ளனர். ஏற்கனவே பிரதேசத்தில் பழுதடைந்த பஸ்களுக்குப் பதிலாக குறித்த பஸ் அண்மையில் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது (வ-17)

## டெங்கு உற்பத்திக்கு ஏற்ற சூழலை வைத்திருந்த 9 பேருக்கு அபராதம்

வடமராட்சி, ஜன.9

பருத்தித்துறை, புலோலிப் பகுதிகளில் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பு உற்பத்தியாகும் வகையில் கழிவுகளை அப்புறப்படுத்தாமல் துப்புரவை பேணாமல் இருந்த ஆண்கள், பெண்கள் உட்பட 9பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

குறிப்பிட்ட குற்றச்சாட்டின் பேரில் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இந்த 9பேரும் பருத்தித்துறை பொலிஸாரால் முற்படுத்தப்பட்டனர்.

மேற்படி குற்றச்சாட்டுகளில் குற்றவாளிகள் என 9 பேரும், தாம் தெரிவித்ததைத் தொடர்ந்து தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். (வ-9)

## பதவிநிலை வெளிக்கள அலுவலர்களை ஒன்றிணைத்து தொழிற்சங்கம் விரைவில்

யாழ்ப்பாணம், ஜன.9

வடமாகாண அரச திணைக்களங்களில் கடமையாற்றும் பதவிநிலை வெளிக்கள உத்தியோகத்தர்களை ஒன்றிணைத்து கூட்டுத் தொழிற்சங்கம் அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தொழிற்சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10மணிக்கு யாழ்ப்பாணம், ஆரியகுளம் உயர்கல்வி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அரச திணைக்களங்களில் கடமையாற்றும் சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், சனசமூக உத்தியோகத்தர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் பதவிகளில் உள்ளவர்களை இணைத்து கூட்டுறவுத் தொழிற்சங்கம் அமைக்கப்படவுள்ளது.

மேற்படி உத்தியோகத் தர்களுக்கிடையிலான சம்பள முரண்பாடு, பதவியுயர்வு முரண்பாடு உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் அனைத்து உத்தியோகத்தர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

மேற்கூறிய பதவிகளில் கடமையாற்றும் அலுவலகங்களில் உள்ள அந்தந்த உத்தியோகத்தர்களுக்கு தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(வ-9)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
15.06.1929

இறப்பு
22.12.2011

### அமரர் கந்தையா பாலசிங்கம்

(கார்க்கார பாலசிங்கம்)

எம் குடும்பத்தின் தலைவரே
ஓராண்டுகள் ஆனபோதும் ஈரம் காயவில்லை கண்களில்
மாலையிட்டவளை மண்ணிலே தனியாக விட்டு
எங்கு நீர் சென்றுவிட்டீர்?
தந்தை நீர் பெற்றெடுத்த
பிள்ளைகள் மனம் நோகின்றது
எங்கு சென்றாலும் எம்மோடு வாழ்கின்றீர்கள்
வையத்தில் வாழ்வாங்கு வாழ வழிவகுத்த எம் அன்பு அப்பாவே
என்றும் உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது.

பிரிவால்துயருறும்
மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"குமரபதி", கந்தரோடை,
சுன்னாகம்.

(28024)(2.6.7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி



எங்கள் அன்பு மாமி
திருமதி
சொர்ணபுஷ்பம் பஞ்சலிங்கம்
அவர்களின் பிரிவால்
ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும்
அவரது குடும்பத்தினருடன்
நாமும் துயர் பகிர்கின்றோம்.
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

சச்சிதானந்தம்
பிள்ளைகள்-பாமா,தயா,
லலிதா, சிறி குடும்பத்தினர்.
கொழும்பு.

(28104)(6.7.4)

## மரண அறிவித்தல்

### திருமதி சொர்ணபுஷ்பம் பஞ்சலிங்கம்



தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சொர்ணபுஷ்பம் பஞ்சலிங்கம் 06.01. 2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (வாத்தியார்) - செல்லாச்சி தம்பதியரின் பாசமிகு ஏக புத்திரியும், காலஞ்சென்ற பஞ்சலிங்கத்தின் (ஓய்வு பெற்ற களஞ்சியப் பொறுப்பாளர் - மன்னார்), பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, மாணிக்கவாசகர், அருளம்பலம், நவரத்தினம் மற்றும் பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காண்டீபன் (சுவிஸ்), துஷ்யந்தன் (சுவிஸ்), பார்த்தீபன் (சுவிஸ்), தயமந்தி, கவிதா (கனடா), சந்திரிகா (கனடா) ஆகியோரின் அருமைத் தாயும், Dr. அற்புதராஜா (யாழ்/போதனா வைத்தியசாலை), சிவராஜா (கனடா), ஐங்கரன் (கனடா), சுவர்ணானந்தி (லலித்தா- சுவிஸ்), மாலா (சுவிஸ்), ரேணுகா (சுவிஸ்) ஆகியோரின் மாமியும், முகேஷ்ராம் (ST.John's College), விகாஷினி (சுவிஸ்), பார்கவி (சுவிஸ்), ரிஷிகேஷன் (சுவிஸ்), துளசிகன் (கனடா), மிதுஷன் (கனடா), லக்ஷ்மன் (கனடா), சுவாதி (கனடா), சரிகா (கனடா), அவந்ரிக்கா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2013) புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படுமம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
0212226294

'லிங்கமகால்'
தாவடி வடக்கு,
கொக்குவில்.

(28066)(3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிருத்திய அழைப்பும்



பிறப்பு
1969.02.25

இறப்பு
2012.12.10

### அமரர் பரஞ்சோதி கண்ணதாசன்

விடிகாலைப் பொழுதில் விரைந்துவந்த நின் செய்தி
விழி பிதுங்கி கதி கலங்கி நிலை குலைய வைத்ததையா
தேடுகின்றோம் நின் எழில் வதனத்தையும் பைந்தமிழையும்
மணக்கோலம் எம் மனக்கண் மறைய முன்
தவக்கோலம் காண வைத்தது என்ன அவசரமோ?
உங்களால் எப்படி முடிந்தது
தேடுகின்றோம் விழிநீரால் வழி தெரியவில்லை.

10.01.2013 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறுஅன்புடன் அழைக்கின்றோம்.

இல.136 D 10,உருத்திரபுரம்.
குடும்பத்தினர்.

(28136)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உடல் எடையை குறைக்க கரும்பை உண்ணுங்கள்



குண்டான உடலைக் குறைக்க ஆண்களும் பெண்களும் பல்வேறு வழிமுறைகளைக் கடைப்பிடிக்கின்றனர். நடைப் பயிற்சி, கடுமையான உடற் பயிற்சியை மேற்கொள்கின்றனர்.

விளம்பரங்களை நம்பி மாத்திரை, லேகியம் போன்றவற்றையும் வாங்கிச் சாப்பிட்டு, எப்படியாவது உடல் எடையைக் குறைக்க முயற்சிக்கின்றனர். இப்போது சிரமமே இல்லாத செலவே இல்லாத வழிமுறையைக் கண்டு பிடித்து மருத்துவ நிபுணர்கள் வெளியிட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் உள்ள உணவு உயர் தொழில்நுட்ப நிபுணர் ஆங்குர் தேசாய் மற்றும் லாட்ரோப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்கள் இணைந்து மேற்கொண்ட ஆய்வின் முடிவுகள் வருமாறு:

குண்டான உடலை இளைக்கச் செய்வதில் கரும்பு முக்கிய பங்கு வகிக்கிறது. கரும்புச் சாற்றில் உள்ள ரசாயனங்கள், உடலில் சேர்ந்துள்ள தேவையற்ற கொழுப்பைக் கரையச் செய்கிறது. இதன்மூலம் உடல் எடை குறைகிறது. எடை குறைவதால் ஏற்படும் உடல் சோர்வையும் கரும்புச் சாறு தடுக்கிறது. குருதி அழுத் தத்தையும் இது கட்டுப்படுத்துகிறது. உடலில் சக்தியையும் அதிகரிக்கச் செய்கிறது.

கரும்பைப் பயன்படுத்தத் தொடங்கிய 12 வாரங்களில் இதன் பலன் வெளிப்படையாகத் தெரிய வரும். பக்க விளைவுகள் எதையும் ஏற்படுத்தாமல், உடல் எடையைக் குறைக்க கரும்பு பயன்படுகிறது என்று அந்த ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org